வடநாட்டு ராணிகள்



வடநாட்டு ராணிகள்

Vallimanalan

S.V.

சேரன்

கலைமன்றம்
சென்னை-1

முதற் பதிப்பு: ஜூன் 1955

விலை. ரூ. 1-0-0

விற்பனை நிலையம்:
எம். எஸ். ராமுலு கம்பெனி
286, சைனா பஜார், சென்னை-1

பதிப்புரை

"இந்தியாவில் முஸ்லீம் அரசுகள்"—என்றதும் வரலாறு படித்தவரின் கருத்திலே சில பல நிகழ்ச்சிகள் மின்னிப் படரும். அந்த முஸ்லீம் அரசுகள் உச்ச நிலையில் இருந்த காலத்தில் இந்திய வரலாற்றிலே விளைந்த கலைச் சின்னங்கள், அரசியல் மேம்பாடுகள், மிகமிக உயர்ந்தவையாக இருந்தன—இருக்கின்றன என்றும் கூறலாம்.

ஆனால், அந்தப் 'பொற்காலத்தின்" அடித்தளத்திலே எந்நாளும் மணக்கும் நறுமணமிக்க நிகழ்ச்சிகள் மட்டுமல்ல, என்றென்றும் மறக்க முடியாத நாற்ற மெடுக்கும் செயல்கள் பலவும் நடந்திருக்கின்றன.

காதலித்தவளுக்காகக் கொலைபாதகனானவன்;

காதலுக்கு என்றும் நின்று நிலவும் நினைவுச் சின்னம் அமைத்தவன்;

கண்ணால் பேசி, கருத்தால் மயக்கி அரசர்களை ஆடும் பம்பரங்களாக்கிய அழகு சுந்தரிகள்;

கண்வழி புகுந்து கருத்தில் மேவியவனுக்காக உயிரையும் தரச் சித்தமானவள்;

மதுவும், மங்கையுமே மகேஸ்வரன் என்று இருந்தவன்;

மங்கையர் உருவிலே நடமாடிய வேங்கைகள்;

—இப்படி விதவிதமான உருவாரங்கள் அந்தப் "பொற்காலத்தில்" நடமாடி யிருக்கின்றன.

"அந்த அரசுகள்" சரசவல்லிகளெனும் சாட்டையால் ஆடிய பம்பரங்களாக இருந்திருக்கின்றன,—இதைத்தான் "சேரன்" தேன் தமிழில்—"வடநாட்டு ராணிகள்"-ஆக்கித் தந்திருக்கிறார்.

வரலாற்றை அடிப்படையாக வைத்து, கற்பனை எனும் கற்கண்டை அதனோடு சேர்த்து இனிக்கும் நூலாக அவர் ஆக்கித் தந்திருக்கும் இதனை, தமிழகத்திற்குப் பெருமையோடு அளிக்கிறோம்.

—பதிப்பகத்தார்.

முன்னுரை

வாள் வீச்சும், வேல் வீச்சும் சாதிக்காத பல காரியங்களைக் கன்னியரின் கண் வீச்சு சாதித்திருக்கின்றன!

மாபெரும் சாம்ராஜ்யத்தின் மணிமுடி, மங்கையரின் மடியிலே தவழ்ந்து விளையாடி யிருக்கிறது!!

நாடாளும் நாயகர்கள் நாயினும கடைய ராகி, நங்கையரின் காலடியை முத்தமிட்டிருக் கின்றனர்!!!

களத்திலே வீரர் பலரைப் புறமுதுகிட்டு ஓடச் செய்த கர்ம வீரர்கள், கட்டழகிகளின் கட்டிலறையிலே கதியற்றுக் கிடந்திருக்கின்ற னர்—தங்களது கடமையும் மறந்து!!!!

மன்னாதி மன்னரையும், வீராதி வீரரை யும் தங்கள் முன் மண்டியிட்டு வணங்கச் செய் யும் அளவுக்கு ஆற்றல் பெற்றிருந்தனர் அந்த அழகு ராணிகள். அகிலம் போற்றும் அரியா சனத்தை அரை நொடியில் கைப்பற்றி யிருக் கின்றனர் வாள் கொண்டு அல்ல, ஈட்டி முனை காட்டி அல்ல—தங்கள் அழகினை ஆயுதமாகக் கொண்டு!

உருவத்திலே அலங்காரம், சொல்லிலே சிங்காரம், கண்ணிலே காம வித்தை — இவை களைக் கலவைச் சரக்காகக் கொண்ட அந்த சரசாங்கிகளின் உதட்டிலே உறவும், நெஞ் சிலே நஞ்சும், கருத்திலே கள்ளத் தனமும் மறைந்து கிடந்ததை அந்த வீராதி வீரர்கள் அறியாமல் போயினர்! எப்படி அறிய முடி யும் — கோமள வல்லிகளின் கொஞ்சு மொழி

யும், மோகனப் புன்னகையும் அவர்கள் கண்ணையும் கருத்தையும் மஞ்சள் திரையிட்டு மறைக்கும் போது!

பெரும் புகழும் பெற்ற முகலாயப் பேரர சில் இத்தகைய விசித்திரங்கள் பல நிகழ்ந்தி ருக்கின்றன எனச் சரித்திரம் நமக்கு அறிவிக் கின்றது. அந்த அடிப்படை உண்மைகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு உருவாக்கப் பட்டது தான் இந்த '**வட நாட்டு ராணிகள்!**'

அழகு தரும் உயிரோவியத்திற்கு வண் ணப் பூச்சுகள் அவசியம் தேவைப் படுவதைப் போல, உண்மைச் சம்பவங்களோடு கற்பனைச் சரக்கும் கொஞ்சம் சேர்க்கப் பட்டிருக்கிறது— உண்மை உருக்குலையாத அளவுக்கு.

* * *

இதிலே நடமாடும் நாலு ராணிகளும் நாலுவித குணபேதம் கொண்டவர்கள்!

பேரழகி எனப் பெயர் பெற்ற பேர ரசி நூர்ஜஹான், பொறாமைப் பேய் பிடித் தலைந்தாள்! அரியாசனத்தைக் கைப்பற்ற அந்த அழகரசி செய்த அக்கிரமம்—அடடா! எழுதுவதற்கு ஏடு கொள்ளாது.

காதலித்தவனையே கணவனாகக் கொண்ட வடிவழகி **மும்தாஜின்** வாழ்க்கைப் பாதையிலே நெரிஞ்சி முட்கள் தூவப் பட்டன. சிறையிலே பிடித்துத் தள்ளப் பட்டாள் — சித்ரவதைக் காளானாள். அப்போதும் சித்தம் குலைந்தாளா சிங்காரி. இல்லை...கணவனே தன் உயிர் என மதித்து துன்பமனைத்தையும் துரும்மென எண் ணினாள். இந்த மாசற்ற மணியை மண்டலம்

என்றென்றும் மறக்கக் கூடாத அளவுக்கு அழகான மணி மண்டபம் கட்டினான் மன்னர் மன்னன் **ஷாஜஹான்**. அதுதான் தரணி வியக்கும் **தாஜ்மஹால்**!

'பெண்ணாய்ப் பிறந்தவள் ஆளுடை பூண்டு அரசாள்வதா?' எனச் சீறி யெழுந்தனர் சீமான்கள். அது கண்டு அச்சங் கொள்ளவில்லை இந்த ஆரணங்கு வீறு கொண்டெழுந்தாள். வேங்கையெனப் பாய்ந்தாள் புயலெனக் கிளம்பிய புல்லர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தாள். அத்தகைய வீராங்கனை யாரைத் தன் காதலனைத் தேர்ந்தெடுத்தாள் தெரியுமா? ஒரு சாதாரண குதிரைப் பாகன்—**ஆலம்**!......ஆம், அவனைத்தான் காதலித்தாள் அரசு செலுத்தும் அழகி!! அவள் தான் வீராங்கனை **ரஜியா**!

❀

உருவத்திலே அழகியாகவும், உள்ளத்திலே கொலைகாரியாகவும் வாழ்ந்தாள் வஞ்சகி **ரோஷனரா**. சூதும், சூழ்ச்சியும் அந்தச் சுந்தரியின் சதுரங்க விளையாட்டாக இருந்தது. இவளை யார் என்று நினைக்கிறீர்கள்; பேரரசர் ஔரங்கசீப்பின் தங்கை!

இந்த நாலு நங்கையரின் வாழ்க்கையிலே என்னென்ன பயங்கர நிகழ்ச்சிகள் நடந்தன என்பதைப் படித்துப் பாருங்கள்!

அன்பன்.

'சேரன்'

பேரழகி நூர்ஜஹான்

நூர்ஜஹான்!

அகிலம் வியக்கும் அழகி! முகலாய சாம்ராஜ்யத்தின் எழிலரசி! பேரரசர் ஜஹாங்கீரின் அன்பிற்குப் பாத்திரமான ஆரணங்கு! சாகசம் தெரிந்த சரசி. அலங்காரி, சிங்காரி; அது மட்டுமல்ல, ஆணவக்காரியுங் கூட!

நூர்ஜஹான்!

பிறவியில் அரச குடும்பத்தைச் சார்ந்தவளல்ல; அவளது அழகு, அவளை அரசியாக்கிற்று. சாகசத்தால் மாபெரும் சாம்ராஜ்யத்தைத் தனது காலடியை முத்தமிடச் செய்தாள் இந்த வடநாட்டு வடிவழகி!

நூர்ஜஹான்!

இதுவல்ல அவளது பெயர்; மேகர் உன்னிசா என்பதுதான் அவளது இயற் பெயர். பாரசீகத்தினின்று இந்தியாவுக்குக் குடியேறிய வியாபாரி ஒருவனின் அருமை மகள்தான் இந்த மேகர் உன்னிசா. அக்பர் ஆண்ட காலத்தில், அவரது சமஸ்தானத்தில், குறிப்பிடத் தக்க பதவியை அவ் வியாபாரிக்கு அளித்து, மேகர் உன்னிசாவைத் தனது அரண்மனையின் அந்தப்புரத்தில் அழகுப் பதுமையாக வளரச் செய்தார் அக்பர் பெருமான்.

சலீம்! அக்பரின் மகன்—முகலாய சாம்ராஜ்யத்தின் கோமகன்—வருங்காலப் பேரரசன். அரண்மனை வாழ்வு, அரச போகம், ஆனந்தக் களியாட்டம்; இவைகளை சலீம் மட்டுமல்ல, சரித்திரத்தில் நாம் கடண் அத்தனை கோமகன்களும் ஆண்டு அனுபவித்தவர்கள்

தான். நாட்டை மட்டுமல்ல. நாட்டின் பாசறையான கோட்டையை மட்டுமல்ல அவர்கள் ஆண்டது; அழகு படைத்த ஆரணங்குகளையும் சேர்த்துத்தான் அவர்கள் ஆண்டனர்—அனுபவித்தனர்!

'ஆண்டான்—அடிமை' என்றும், 'உயர்ந்தார்—தாழ்ந்தார்' என்றும், 'மேல் ஜாதி—கீழ் ஜாதி' என்றும் பாகுபாடு பார்க்க வில்லை அந்தக் காலத்துப் பாதுஷாக் கள். அழகி என்று அறிந்தாலே போதும், அவர்கள் புலிப்பார்வை அந்த அழகிமேல் விழுந்து விடும். அடுத்த கணமே, அந்தப்புரப் பதுமையாக, அரண்மனையில் குடியேற்றப் படுவாள் அந்த அழகு ராணி! அப்படிக குடியேற்றப் படுவோரில்—இல்லை இல்லை சிறைப் பட் டோரில் 'அதிர்ஷ்டம்' படைத்த யாராகிலும் சில சமயங் களில் பட்டத்தரசியாக மாறி விடுவதும் உண்டு……இத் தகைய சம்பவங்கள் அநேகம் நடப்பதுண்டு அந்த நாட்களில் — முகலாய சாம்ராஜ்யம் விரிந்து கிடந்த காலத்தில்……

பேரரசர் அக்பர் மகன்—இளவரசர் சலீம்—வணிகர் மகள் மேகரைக் காதலித்தான். மேகரின் வடி வழகு சலீமின் இளம் உள்ளத்தை ஆட்டு வித்தது. மேக ரின் கடைக்கண் வீச்சிலே வீழ்ச்சியடையலானர் இளைய கோமான் சலீம்!

* * *

"அடித்ததடி அதிர்ஷ்டம் உன்னிசாவுக்கு."

"அதிர்ஷ்டமா? மேகர் உன்னிசாவுக்கா? என்னடி உளறுகிருய்?"

"நானு உளறுகிறேன்? கோமகன் சலீமின் கோமளவல்லியாகி விட்டாளடி, உன்னிசா."

"உண்மையாகவா?"

"நான் எப்போதாவது பொய் சொல்லியதுண்டா?"

* * *

"நாமும்தான் இருக்கிறேமே அலங்காரிகளும், சிங்காரிகளுமாக; நம்முடைய அலங்காரமும், சிங்காரமும் இவ்வரசரைக் கவர்ந்ததா?"

"அடிப் பைத்தியக்காரி! அவ்வளவுதானு நீ! உன்னிசாவின் அழகும், அலங்காரமுமா அரசரை மயக்கியிருக்கிறது என்றெண்ணுகிருய்? அவள் செய்யும் சாகசமடி, சாகசம்!"

"சாகசமோ, சிங்காரமோ; எதுவானுலென்ன? வருங்காலப் பதுஷாவின் பட்டமகிஷியாகப் போகிறவள் மேகர். அரியணையில் அமரப் போகும் பாக்கியம் உனக்குக் கிடைக்குமா, எனக்குக் கிடைக்குமா!"

"என்னமோ, நாம்தான் கொடுத்து வைக்கா விட்டாலும், அவளாவது அரசியாகட்டும்."

* * *

"அந்தப்புரத்தில் இருக்கிருர்கள் ஆயிரம் அழகிகள். அவர்களைக் கண்ணெடுத்தும் பார்க்கிருரா இந்த சலீம்? என்னமோ, தனுக்கு நடையும், மினுக்கு மேனியும் இருக்கிறதென்ற காரணத்தால் அவளையே சுற்றி வட்ட மிடுகிறதே இந்த வண்டு?"

"வண்டுக் கென்னடி, மலருக்கா குறைவு? இந்த அந்தப்புர நந்தவனத்து மல்லியும்—முல்லையும், அல்லியும்—ஆம்பலும் இந்த வண்டின் பார்வைக்கு எப்படியிருக்கிறதோ? ரோஜாவைத் தேடுகிறது. ரோஜா என்ருலே, வண்டுக்குத் தனியின்ப மல்லவா?"

"அப்போது உன்னிசாவை ரோஜாவுக்கு ஒப்பிடுகிருய்; அப்படித்தானே?"

"நானு கூறுகிறேன் அதுபோல? சலீம் அல்லவா அழைக்கிருர் அவளை, 'என் ரோஜா மலரே, என் ராஜாத்தி, கண்ணே' என்று!"

"ராஜன் மெச்சினவள் ரம்பை!"

* * *

அக்பர் பாதுஷாவின் அரண்மனைச் சிங்காரிகள் சிலர் மேகர் உன்னிசாவைப் பற்றிப் பேசிக்கொள்ளும் உரையாடல்தான் மேலே பொறிக்கப் பட்டிருப்பவை.

'கோமகனின் பார்வை நம்மீது விழுமா' என ஏங்கிக் கிடந்து, பிறகு ஏமாந்தனர், எழிலரசிகள். 'என்றாவது ஒரு நாள், டில்லி அரியணையிலமர்ந்து ஆட்சி புரிவோம்' என்று ஆருடம் கணித்து விட்டு, இளைய மன்னரின் இருதயத்தில், இன்பவல்லியாக மேகர் இடம் பெற்று விட்டதையறிந்ததும், தாங்கள் போட்டது 'தப்புக் கணக்கு' என்று தங்கள் தவறுகளை யுணர்ந்து ஆயாசப்பட்டனர் அடிமை அழகிகள்.

மேகர்—சலீம்!

இருவரும் நேசித்தனர், அன்பு கொண்டனர், காதலித்தனர்!!

இச்செய்தி அந்தப்புரம் மட்டுமல்ல, டில்லிமா நகர் எங்குமே பரவியிருந்தது.

* * *

"விஷயம் விபரீதமாய் விட்டது. மகாராஜா."

"விஷயமாவது வி ப ரீ த மா வ து; விளங்கச் சொல்லும்."

"நம் இளவரசர் சலீம், அந்தப் பாரசீக நாட்டு மீர்சாவின் மகள் மேகருடன்......"

"நட்பு கொண்டிருப்பதைப் பற்றிதானே...?"

"நட்பல்ல அண்ணலே அவர்கள் கொண்டிருப்பது......"

"பின் என்னவாம்?"

"காதல் மன்னரே......காதல்......"

"காதலாவது, காராமணியாவது!...இன்று நேற்றா அவர்கள் சிநேகித்து வருகிறார்கள்? சின்னஞ்சிறு பிராய முதலே அவர்கள் ஒன்றாய்ச் சேர்ந்துதான் ஓடியாடி விளையாடி வருகிறார்கள்."

"அண்ணலே, தங்களுக்குத் தெரியாத ஒன்றை நான் கூற வரவில்லை; எ....ன்....று...ஆ...ம்...."

"என்ன இழுக்கிறீர். ஒளிவு மறைவின்றி மறைக்காது பேசும்."

"சிறு வயதில், ஆண்—பெண் வித்தியாசமின்றி இணைந்து பழகுவதில் தவறில்லை. மேகரும் சலீமும் அப்போது குழந்தைகளாயிருந்தனர்; 'உலகம் இது தான்' என்று அறியாத வயது; துள்ளித் திரியும் பிள்ளைப் பருவம். ஆனால், இப்போது நிலைமை அதுவல்ல. மேகர் பருவமடைந்த மங்கையாகி விட்டாள். சலீமும், முறுக்கேறிய காளையாகி விட்டான். இந்நிலையில், அவர்களிருவரும் நெருங்கிப் பழகுவது, 'ஏதோ விளையாட்டுத்தானே' என்று எண்ணுவதற்கில்லை. மேலும், சலீம் இன்றைய இளவரசர், நாளைப் பேரரசர்; இதை நாம் மறக்க முடியுமா?"

"அப்படியானால், அவர்கள் காதலர்களாகத்தான் பழகுகிறார்கள் என்கிறீர்களா?"

"சந்தேகமாயின், என்னுடன் நந்தவனம் வாருங்கள், அவர்கள் ஆடிப்பாடும் அந்தக் காட்சியைப் பார்க்கலாம்."

"சரி, வாரும்..."

2

நந்தவனத்தில்!

தாமரை மலர் தவழ்ந்து விளையாடும் அந்தக் தடாகத்தில், இளம் காதலர்கள் இன்ப கீதம் இசைத்துக் கொண்டிருந்தனர். தெளிந்த நீரை, சலீம் மீது வாரி வாரித் தெளித்தாள் மேகர். பதிலுக்கு சலீமும் தெளித்தான். உன்னிசாவின் பொன்னிற மேனியும், அதனை

மறைத்திருந்த அந்த நீல நிறச்சேலையும் நனைந்து விட்டன. கட்டழகின் கண்ணுடியாக, அப்போது அவளுடல் காட்சி யளித்தது. பருவத்தின் காரணமாகப் பூரித் தெழும்பும் அவளது அங்கங்கள் ஒவ்வொன்றும், விம்மி விம்மி யெழுந்தன. இத்தகைய கோலாகலக் காட்சியினை இமை கொட்டாது பார்த்துக் கொண்டிருந்த இளவரசன் சலீம், இன்பவானிலே பறந்து கொண்டிருந்தான். மீண்டும் ஒருமுறை தண்ணீரை சலீமின் மேல் வாரித் தெளித்து விட்டு, மின்னலைப் போல் ஓடி மறைந்து விட்டாள், அந்த மின்னல் கொடியாள். சலீம் அவளைத் தேடினன். தேடினன்...எங்கெங்கோ தேடினன். கடைசியில், ரோஜா செடியின் மறைவிலே அந்த ராஜாத்தி ஒளிந்திருப்பதை சலீம் கண்டு விட்டான்.

இதழ் விரித்து சிரித்துக் கொண்டிருந்தது ஒரு சிவந்த ரோஜா. அதன் அருகே, தெரிந்தும் தெரியாதது மாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது, மேகரின் ரோஜா வதனம். அதன் பக்கத்தில் சென்றுன் இளவரசன். கண்டும் காணுதவனைப் போல, செடியிலிருந்த மலரைப் பறித்துக் கையிலேந்திக் கொண்டு அதனை வானளாவ வர்ணித்தான். அதைக் கேட்டுக் கொண்டிருந்த மேகர் 'களுக்' கென்று சிரித்து விட்டாள்.

சிரிப்பொலியைக் கேட்டு, கேளாதவனைப் போல் நடித்தான் சலீம். ஏதேதோ பேசினன் அவன்:

"எல்லோரையும் எளிதிலே கவரக்கூடிய அழகும், அந்த அழகுடன், பரவச மூட்டும் நறு மணமும் உனக்குத் தந்து, உன்னைப் படைத்த அந்த ஆண்டவன், முள்ளை வேறு படைத்தானே, ஏன்?"—இவ்வாறு கூறியவாறு கடைக்கண்ணுல், மறைந்திருந்த மேகரைப் பார்த்தான் சலீம். உன்னிசா இம்முறை நகைக்க வில்லை, கொஞ்சும் மொழியால், தன் கோகிலக் குரலை எழுப்பினுள் கோமளவல்லி.

"நீல வானத்திலே, கோலமாய்ப் பவனி வரும் அழகு நிலாவே! உனக்கு அழகைத் தந்து, அமைதியைக் கொடுத்து, அதோடு குளிர்ச்சியையும் பரிசாகத் தந்தானே அந்த ஆண்டவன். இவ்வளவும் தந்தவன், உன்னுள்ளே களங்கத்தை ஏற்படுத்தி யிருக்கிறானே, ஏன்?"—இப்படி மேகர் கூறி முடிப்பதற்குள் அவளது கரங்களைப் பற்றினான் சலீம். அவள் ஓடினாள்; அவனும் ஓடினான்.

சலவைக் கல்லினாலான சிங்கார மேடை மீது அவர்கள் அமர்ந்தனர்.

உன்னிசாவின் கண்ணாடிக் கன்னங்களை மெதுவாகக் கிள்ளினான் சலீம். அவைகள் சிவந்தன. மேகர் ஏதோ கூறவாயெடுத்தாள்; பின் நாணத்தால் தலை குனிந்தாள்.

"என் மனதைக் கவர்ந்த மாசறு மணியே! உன் மனதிலுள்ளது என்ன?"—சலீம் கேட்டான்.

"ஒன்றுமில்லை கண்ணாளா......." மறைத்துப் பேசினாள் மங்கை.

"என்னிடம் கூடவா மறைக்க வேண்டும்; உன் விருப்பம் எதுவாயினும் சரி, அதை எப்போதும் நிறைவேற்றத் தயார். சொல்லடி கண்ணே, நீ சொல்ல வந்ததை!"

"இன்று, நீர் இளவரசர்; என்னைக் கண்ணே, மணியே என்று காதல் பாஷையில் கூப்பிடுகிறீர்கள். நாளை, நீங்கள் பட்டத்திற்கு வந்ததும்......"

"உன்னை மறந்து விடுவேன், என்கிறாய்; அது தானே நீ கூற வந்தது?"

மௌனம் சாதித்தாள் மேகர்.

"கண்ணே! என்னையுமா அப்படி நினைத்து விட்டாய்? என் இதய மாளிகையிலே நீ குடியேறி விட்டாய். நாளை இந்த நாட்டின் அரியாசனத்தில் அமர்ந்து ஆட்சி புரியப் போகும் மகாராணி நீ. காம வெறியால் கருத்

தமிழிந்து கூறும் கனிமொழி அல்லடி கண்ணே இவை. என் உள்ளப் பூர்வமாக உரைக்கும் உறுதி மொழி. நாம் உருவத்தால் இருவர்; உள்ளத்தால் ஒருவர். நம்மைப் பிரிக்க எந்தச் சக்தியாலும் முடியாது.''—இப்படிக் கூறிக் கொண்டே உன்னிசாவின் பொன்னுடலைத் தன் மடி மீது சாய்த்து கொண்டான். முல்லைக் கொடி போன்ற அவளது துடியிடையைப் பற்றி, குவளை யொத்த அவள் குவிந்த அதரங்களில் தன் இதழ்களைப் பொருத்தினன் இளவரசன். அக்காட்சியைக் காணக் கூசிய சந்திரன், நாணத்தால் வெட்கி, மேகத்தில் மறைந் தான்!

இன்ப வானிலே சிறகடித்துப் பறந்துகொண் டிருந்தனர் இன்பக் காதலர்கள். அந்தச் சிங்காரக் காட்சியை, அவர்களைத் தாங்கிக்கொண்டிருந்த அந்த அழகு மேடை பார்த்தது! மலர் நிறைந்த செடி—கொடி களும் கண்டன! வானவெளியிலே மின்னிக் கொண் டிருந்த விண் மீன்களும் பார்த்துக்கொண் டிருந்தன. அத்துடன், அமைதி தரும் அம்புலியும், அவ் இன்பக் பக் காட்சியினைக் கண்டு ரசிக்கத்தான் செய்தது! இவைகள் மட்டுந்தானு கண்டன அக் காதலரின் காம லீலைகளை. நாட்டை யாளும் நாயகரும், அவர் தம் அமைச்சரும் கூடப் பார்த்துக்கொண்டிருந்தனர் கோமக னின் கோலாகல லீலைகளை! நாணத்தால் வெட்கி மேகத்தில் மறைந்தானே சந்திரன், அது போன்றே அக்பர் பாதுஷாவும் அமைச்சர் பெருமானும் அவ் விடத்தைவிட்டு அப்புறம் சென்றனர்.

காதலர்கள் பேசிய கனிமொழிகள், காவலன் காதிலே ரீங்காரம் செய்துகொண்டிருந்தன. அந்தச் சரச வார்த்தைகள், அக்பர் மனதில் பெரியதொரு போராட்டத்தை யெழுப்பி விட்டது.

அரண்மனையில் அங்கும் இங்குமாக நடந்தார் அக்பர் பாதுஷா.

மனப்போர் இறுதி பெற்றது. அதன் விளைவு, அவர் உள்ளத்தில் ஒரு 'முடிவு' பிறந்தது.

3

மறு நாள்!

காலை மலர்ந்தது.

அந்தரங்க மண்டபத்தில், அக்பர் பெருமானும், உன்னிசாவின் தந்தை மிர்சாவும் பரம ரகசியமாக உரையாடிக் கொண்டிருந்தனர்.

"உமது மகள் மேகரின் திருமண விஷயமாக இன்னும் முடிவு செய்யவில்லை போலிருக்கிறதே?"—பேரரசர் அக்பரின் கேள்வி இது.

"இல்லை மன்னரே. மேகரின் மண விஷயம் மன்னர் பெருமானின் கையில்தா னிருக்கிறது."—மீர்சாவின் பதில்.

"மணமகனைக் குறித்துத்தானே நீர் கவலைப் படுவது?"

"ஆம், பாதுஷா! என் மகளின் எதிர்கால வாழ்க்கை, தங்களால்தான் மலர்ச்சி பெறவேண்டும்."

"உமது மகளுக்கேற்ற கணவனை நாமே தேர்ந் தெடுத்து விட்டோம்."

"என் மகள் பெற்ற பாக்கியம்—நான் அடைந்த பேறு."

"வரன், யார் தெரியுமா?"

"அறியேன் ஐயனே."

"உன்னிசாவின் வடிவழகுக் கேற்ற வரன், வங்கத்தி லிருக்கிறான்."

"வங்கத்திலா?!"

“ ஆம்,.........ஷெர்கான்...! உம் மகளுக்கேற்ற ஜோடி !!”

“ ....?!”

“ உமக்குத் தடை எதுவுமில்லையே?”

“ பாதுஷாவின் சித்தம், எனது பாக்கியம்.”

* * *

அக்பர் ஆணைக்கு அடிபணிந்துவிட்டான் மீர்சா. வங்கத்திற்கு ஓலை அனுப்பப்பட்டது. பாதுஷாவின் ஆணையை யார்தான் மறுக்க முடியும். பெண்ணுடன், பொன்னும் மணியும் கிடைக்கிற தென்றால், ஷெர்கான் மட்டுமென்ன, யார்தான் இணங்கமாட்டார்கள்.

குறிப்பிட்ட நாளில் திருமணம் நடந்தேறியது— வெகு விமரிசையாக! டில்லிமா நகரில் பேரரசர் அக்பர் பாதுஷாவின் அரண்மனையில், ஆடம்பரமாக நடந்தேறியது மேகர் உன்னிசாவின் திருமணம்!!

பொன்னுடை பூண்டு, பொலிவுடன் காணப்பட்டான் ஷெர்கான். மதிமுகம் வாடச் சோகமுற்றிருந்தாள் மேகர்.

பொங்கும் பூரிப்பு, ஷெர்கானுக்கு !

துக்கமும் ஏக்கமும், மேகருக்கு !

ஆனந்தம், களிப்பு, கோலாகலம் அவனுக்கு !

சோகம், கலக்கம், கண்ணீர் இவளுக்கு.

மணமகள், கணவன் இல்லம் ஏகும் நாள். அரண்மனை யெங்கும், ஒரே அலங்காரமும், ஆர்ப்பாட்டமுமாக இருந்தது. எங்கெங்கு காணினும் சிரிப்பு, களிப்பு, ஆரவாரம்! இன்பக் ‘களை’ எங்கும் தாண்டவமாடியது.

ஆனால்..........?

அங்கோர் மூலையில், அழுத கண்ணீரோடு தன்னந் தனிமையாக நின்றிருந்தான், இளவரசன் சலீம். அவன் கட்டிய காதற் கோட்டை, தகர்த்தெறியப்

பட்டதை யெண்ணி, வருந்திக்கொண் டிருந்தான். கிடைத்தற்கரிய பேரழகி—தனக்கென்றே வளர்க்கப் பெற்ற வடிவழகி—உன்னிசாவை, எவனே, நேற்று வந்தவன் கவர்ந்து செல்கின்ருனே, என்று அவன் இதயம் வேதனைப் பட்டுக்கொண்டிருந்தது.

'ஏமாற்றி விட்டாளே எழிலரசி' என்று ஏங்கினன் சலீம். "பாவம், அவள் என்ன செய்வாள்; அரசரின் ஆணை என்ற கூண்டு, பெற்ருேரின் நிர்ப்பந்தம் என்ற கம்பிகள்; அதனுள் அடைக்கப்பட்ட கிளி, கண்ணீரைத் தான் உனக்குக் காணிக்கையாகச் செலுத்த முடியுமே தவிர, கூண்டை விட்டு வெளியேற முடியுமா? அல்லது அக் கூண்டை உடைத்தெறிந்துவிட்டு, உன்னிடம் ஓடி வந்துவிடத்தான் முடியுமா?"—இப்படிக் கூறி அவனுக்குச் சமாதானம் செய்தது அவன் மனம். என்ன இருந்தாலும் பிஞ்சு மனம்தானே; ஏதேதோ எண்ணி யெண்ணி ஏங்கத்தான் செய்யும்!

அரண்மனை வாயிலில் அலங்காரமான பல்லக்கு ஒன்று கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

அரச குடும்பத்தைச் சேர்ந்த, ஆண், பெண் அனைவரும் வரிசையாக இரு மருங்கிலும் நின்றிருந் தனர். அவர்கள் ஒவ்வொருவரிடமும் சென்று வணங் கினுள் மேகர். அவர் கண்ணில் நீர் வழிந்துகொண் டிருந்ததை யாரும் பார்க்காமலில்லை 'கணவன் வீடு செல்லும் மணமகள் எல்லாருமே ஒரு சொட்டுக் கண்ணீ ராவது விடுவது சகஜம்—சம்பிரதாயமும் கூட' என்று தான் எண்ணினர். ஆனல், அவள் கண்ணீர்விடும் காரணத்தை அவளுடைய கண்களையும், புண்பட்ட அவளது மனத்தையு மல்லவா கேட்கவேண்டும்!

கடைசி முறையாக, மேகர், அக்பர் மன்னரிடம் வந்து நின்ருள்—வணங்கினுள். ஆசி கூறி, அவளது அழகிய கூந்தலைத் தடவினர் அரசபெருமான். அழு தாள் மேகர்; தேம்பினுள் சிறு குழந்தையைப் போல. தேற்றினர் பாதுஷா.

விடைபெறும் விழா இறுதி பெறும் கட்டம்.

உன்னிசாவின் கண்கள் யாரையோ ஊடுருவித் தேடியலைந்தன. 'எங்கே? எங்கே?' எனக் கேட்டது அவளது ஏங்கும் உள்ளம். 'இதோ இருக்கிறேன்' என்று கூறுவதைப்போல மெதுவாகக் கனைத்தான், கலங்கும் கண்ணீரோடு காட்சியளித்த கோமகன் சலீம். அவனை ஒரு முறை பார்த்தாள், கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சியளித்த மேகர். சற்று நேரம் அந்த 'இழந்த காதலர்'களின் கண்கள் ஏதோ பேசிக் கொண்டன.

"விடை பெற்றுக் கொள்ளுகிறேன்—வணக்கம்" என்று மேகரின் கண்கள் கூறியிருக்கும்; அதற்கு சலீமின் கண்கள், "சென்று வா, மீண்டும் சந்திப் போம்," எனக் கூறி விடையளித்திருக்கும். இல்லா விட்டால், "அன்பரே, என்னை மன்னித்து விடுங்கள். இவ்வளவுக்கும் காரணம் நானல்ல—உங்கள் தந்தையார் தான்," என்று கூறுமல் கூறியிருக்கும் அவளது அழகிய கண்கள். அதற்கு இளவரசனின் கண்கள், "பேரழகியே, இன்று நீ போய்வா; ஆனல், என்றைக் காவது ஒரு நாள், உன்னை என் பட்டத்தரசியாக்கி, என் பக்கத்தில், பதுமையாக வைத்துக் கொள்வேன்," என்று ஏன் சொல்லியிருக்கக் கூடாது??

மங்கள வாத்தியம் முழங்க, பல்லக்குத் தூக்கப்பட் டது. அனைவரும் ஆசி கூறி, மேகரை வழியனுப்பி வைத்தனர்.

'பறந்து செல்லும் பைங்கிளியே, என்னை மறக்க லாகுமா?' என சலீம் மனம் ஏங்க, கண்ணீர் மல்கிக் கொண்டிருந்தான். வழிந்தோடும் அவன் கண்ணீரைத் துடைத்து ஆறுதல் கூறி அழைத்துச் சென்ருன், இளவரசனின் நண்பன் ரத்தன் சிங்.

கட்டிலறையில் சென்று 'கோ' வெனப் புலம் பினன் கோமகன். ரத்தன்சிங் எவ்வளவோ தேற்றி னன்; அப்போதும் ஆறுதல் பெறவில்லை சலீம்.

"எங்கள் காதல் களங்கமற்றது என்றுதான் எண்ணியிருந்தேன்; கடினமான கருங்கற் கோட்டை என்றுதான் நினைத்தேன்; எங்கள் காதல் கோட்டையை. ஆனால், சிறு கல் பட்டு உடைந்துவிடும் கண்ணாடி வீடு என்று அப்போது எனக்குத் தெரியாமல் போய் விட்டது. என்னை ஏமாற்றிவிட்டாள் அந்தக் காதகி. அவளை நான் சும்மாவிடப் போவதில்லை; பழிக்குப் பழி வாங்கியே தீருவேன்," என்று துடித்தான் காதல் வெறிபிடித்த சலீம். 'இழந்த காதல்' இளவரசனின் இதயத்தைச் சுக்குநூறாக்கியது. சலீம் படும் பாடு அவன் நண்பனுக்கு என்ன தெரியும். சமாதானம் கூறிப் பார்த்தான்.........கேட்டால்தானே சலீம்.

"உனக்கென்ன தெரியும் என் மனம் படும் வேதனை? அவள் பேரழகி; என் உள்ளத்தைக் கவர்ந்த உன்னத ஜோதி! அழகின் கண்ணாடியாக, கவர்ச்சியின் கடலாக அவள் என் முன் தோன்றி என் மனதைப் புண்ணாக்குகிறாள். அது உனக்கெப்படித் தெரியப் போகிறது."—கூறினான் சலீம் இது போல.

"மேகர் பேரழகிதான்; அழகின் கண்ணாடிதான், கவர்ச்சியின் கடல்தான்; மறுக்கவில்லையே நான்...?"—ரத்தன் சிங் கூறினான் இப்படி.

"உன் கண்ணில் என் கண்ணை வைத்துப் பார்; உன் உள்ளத்தில் என் உள்ளத்தை வைத்துப் பார்; அப்போது தெரியும் என் வேதனை எத்தகையது என்பது."—சலீம் முணுமுணுத்தான்.

"எல்லாம் சரிதான்; ஆனால், பழிவாங்கும் படலத்தை நிறைவேற்றக் கூடிய நேரம் இதுவல்லவே?"—நண்பன் நவின்றான் இது போல.

"நேரம் இதுவல்ல என்றால், பின் எப்போது நிறைவேறுவது என் எண்ணம்?" கோமகனின் கேள்வி.

"காலம் வரும்" என்று ஆறுதல் கூறினன் ரத்தன் சிங்.

"காலமாவது கோலமாவது..........."—இவ்வாறு கூறிக்கொண்டே, வெறிபிடித்தவனைப் போல ஓடினன் இளவரசன் நந்தவனத்தை நோக்கி.

* * *

4

அக்பருக்குப் பின், சலீம் அரியணை யேறினன், '**ஜஹாங்கீர்**' என்றப் பட்டப் பெயருடன்.

சலீம் இன்று சாமான்யனல்ல; முகலாய சாம்ராஜ்யத்தைக் கட்டியாளும் பேரரசன்! இளவரசன் சலீம், **பேரரசர் ஜஹாங்கீராக** மாறினர்.

கோலோச்சும் காலம் பிறந்ததும், கோலாகல வாழ்வும் தன்னல் வந்து விடுமல்லவா. பேரரசர் நினைத்தாலே போதும், அவரது சாம்ராஜ்யத்தில் நடவாதது கிடையாது. அவரது கண் பார்வைக்காகக் காத்துக் கிடந்தனர் காவலாளிகள்; அத்தகைய அர்த்தம் பொதிந்திருக்கும் ஜஹாங்கீரின் பார்வையில். மனத்திலே ஒரு காரியத்தைப் பற்றி எண்ணினலே போதும்; அடுத்த கணமே அந்த 'எண்ணம்' எண்ணத்தோடு நிற்காது, செய்கையிலே காரியமாற்றப்படும். படை பலம், ஆள் பலம் போதாதென்று, மனத்தில் நினைத்த காரியத்தை மறைமுகமாகச் செய்திட இரகசிய ஏவலாளர்கள் ஏராளம்! ஏராளமாக இருந்தனர் அவ ரிடம்!!

ஜஹாங்கீர் பட்டத்திற்கு வந்ததும், அவர் உடனடியாகச் செய்த காரியம் என்ன தெரியுமா? 'நில வரி, நீர் வரியைக் குறைத்திடுக' என்று நிர்வாகிகளுக்கு ஆணை பிறப்பித்தாரா? 'மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வேறு பல வரிச் சுமையைக் குறைத்து மக்

களுக்கு சுபீட்சத்தை உண்டாக்குக' எனக் கட்டளை யிட்டாரா? அல்லது, அந்தப்புரத்தில் சிறை வைக்கப் பட்டுள்ள அழகிகளைச் சுதந்திரப் பட்சிகளாகத் திரிய விட்டாரா? அல்லது, 'அரசியல் கைதிகளை விடுதலை செய்க' என்று உத்தரவிட்டாரா? இல்லவே யில்லை; இத்தகைய எண்ணங்கள் மன்னர் பரம்பரையினர் மனதில் உதிப்பது எட்டிக் காயிடம் இனிப்பை எதிர் பார்ப்பது போல்தான்! கடும் புலியிடம் கருணையை எதிர்பார்ப்பது போல்தான்!!

முகலாயப் பேரரசர் ஜஹாங்கீர் முடிதரித்ததும், முதலாவதாக அவர் மேற்கொண்ட காரியம், தான் இளவரசனாகயிருந்த போது, இழந்துவிட்ட தன் காதலி மேகரை, வங்கத்து ஷெர்கானிடமிருந்து மீட்கும் பணிதான்! அதாவது, ஷெர்கானின் இன்றைய மனைவியான மேகர் உன்னிசாவைத் தன் காமக் கிழத்தியாக்குவது என்ற அரும் பெரும் எண்ணம்தான் ஜஹாங்கீர் மனத்தில் தலைதூக்கி நின்றது. ஷெர்கானின் மனைவியைப் பலவந்தப் படுத்தியேனும்—முடிந்தால் ஷெர்கானின் உயிரைப் பறித்தேனும்—மேகர் உன்னிசாவைத் தன் வசப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஆவல், 'எப்போது அரியணையேறப் போகிறோம்' என்று சந்தர்ப்பத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்த இளவரசன் சலீம், இப்போது பேரரசர் ஜஹாங்கீராக மாறியதும், சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொள்ளச் சற்றும் தாமதிக்கவில்லை.

ஆருயிர்த் தோழனைத் தம் அருகே அழைத்தார் ஜஹாங்கீர். அந்தரங்க மண்டபத்தில் ஆலோசனை நடத்தினர் இருவரும். ஆம், சதியாலோசனைதான் அது. நீண்ட நேர ஆலோசனைக்குப் பின், அருமையான 'திட்டம்' ஒன்று பிறந்தது.

அடுத்த நாள் காலை, அரண்மனைக் கணக்கன், பேரரசர் முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டான்.

என்ன நேருமோ! ஏது வந்திடுமோ! என ஏக்கமுற்றுப் பணிவுடன் நின்றான் கணக்கன்.

"பேரரசருக்குக் 'கப்பம்' கட்டத் தவறிய கயவர்கள் யார் யார் உள்ளனர்?" ஆத்திரத்தோடு கேட்டார் ஜஹாங்கீர்.

"சித்தம் பிரபு......" என்று கூறி, ஒரு நீண்ட பட்டியலை வாசித்து முடித்தான் கணக்கன்.

ஷெர்கானின் பெயரும் அந்தப் பட்டியலில் இடம் பெற்றிருந்தது. மன்னரின் முகம் மலர்ந்தது மகிழ்ச்சியால். பயங்கரச் சிரிப்பு ஒன்று வெளிப்பட்டது—'பேய்ச் சிரிப்பு' என்பார்களே, அந்த ரகத்தில்!

சிரிப்பு மறைந்து, கோபம் பிறந்தது பேரரசருக்கு. அதையடுத்து, 'யார் அங்கே' என்ற பேரொலி யெழுந்தது. வந்து நின்றான் ஒரு ஏவலாளி. சமிக்கை ஏதோ செய்தார் மன்னர். அடுத்த விநாடியே அரசர் முன் தோன்றினான் மன்னரின் மெய்க்காப்பாளன் **குத்புதீன் கோகோ**

"வங்கத்து ஷெர்கான் நமக்குச் சேரவேண்டிய திறையை இதுகாறும் செலுத்தாம லிருக்கிறான். நீ வங்காளத்துக்குச் சென்று நமக்குச் சேர வேண்டிய திறையை வசூலித்து வா! ஒருவேளை, அவன் தர மறுத்தால், அவனது உடைமைகளைப் பறித்துவா." என்று ஆணையிட்டார் பேரரசர். அதுமட்டுமல்ல, மேற்கூறிய வாசங்களைக் கூறிவிட்டு, தன் கண்ணிமைகளைச் சற்று அசைத்தார். அதன் உட்பொருளை உணர்ந்து கொண்டவனைப் போல, "அங்ஙனமே ஆகட்டும்," என்று தலையசைத்துச் சென்றான் குத்புதீன் கோகோ.

5

வங்காளத்தில்!.........

டில்லியிலிருந்து, பேரரசரின் மெய்க்காப்பாளன் குத்புதீன் கோகோ வங்காளத்திற்கு வருகிறான், என்ற செய்தியைத் தன் ஒற்றர் மூலம் அறிந்த ஷெர்கான், குத்புதீனை ராஜோபசாரமளித்து வரவேற்க, தகுந்த ஏற்பாடுகளைச் செய்தான்.

குத்புதீன், வீரர் சிலருடன் தன் குதிரையை விட்டிறங்கினான் அரண்மனைக்கு முன்.

அரண்மனை வாயிலில் நின்றபடியே குத்புதீனை அன்புடன் வரவேற்றான் ஷெர்கான்.

"வரவேற்புக் கிடக்கட்டும், வந்த காரியத்தை முதலில் கேள்"—சற்று மிடுக்காகவே பகன்றான் குத்புதீன்.

குத்புதீனுடைய துடுக்கான பேச்சும் துடுக்கான பார்வையும் ஷெர்கானின் நரம்பை முறுக்கேறச் செய்தது. "சரி, நீர் வந்த காரியத்தைக் கூறும்," என்றான் ஷெர்கான். அவனது குரலில் கம்பீரம் தொனித்தது; முகத்தில் வீரம் செறிந்து நின்றது.

"பேரரசருக்கு நீர் செலுத்த வேண்டிய திறையை, உம்மிடமிருந்து உடனடியாக வசூலித்து வருமாறு என்னை அனுப்பியுள்ளார் மன்னர் பெருமான்; எங்கே திறை?" கோபமாகக் கேட்டான் கோகோ. அதைக் கேட்டதும் ஷெர்கான் சினங்கொண்டான்.

"திறையா?"—ஷெர்கானின் கேள்வி.

"ஆம்!"—குத்புதீன் பதில்.

"திறை, நான் செலுத்த வேண்டுமா?"

"ஆம்......ஆம்......"

"அக்பர் வசூலிக்காத தியையை— பாதுஷா பெருமான் கேட்டறியாத திறையை. அவர் மகனுக்கு

நான் செலுத்த வேண்டுமோ?!" கேலியும் கோபமும் கலந்த பாணியில் கூறினன் ஷேர்கான்.

"ஆம்... ஆம்... செலுத்த வேண்டும்—இல்லவிடில்... ..."—கண்டிப்பாகவே கூறினன் குத்புதீன.

"செலுத்தத்தான் வேண்டும்... இல்லாவிடில்?"—கோபாவேசத்தோடு கேட்டான் ஷேர்கான்.

"இல்லாவிடிலா?... ...இதோ பார்... ..." என்று கூறிக் கொண்டே, தயாராக மறைத்து வைத்திருந்த வாளை ஷேர்கான் மீது வீசினன் கோகோ.

எச்சரிக்கையாக நின்றிருந்த ஷேர்கான், அவ்வாள் வீச்சினின்றும் தப்பினன். அடுத்த விநாடியே தன் உடைவளையுருவிக் கொண்டான்.

இரு வாட்களும் ஒன்ருேடொன்று மோதின. தீப்பொறிகள் வாட்களினின்றும் தெறித்தன. அரண்வாயில் வாட்போர் நிகழும் செய்தியறிந்த மேகர் உன்னிசா வெளியே ஓடி வந்தாள்.

செங்குருதி அவர்களிருவர் உடலினின்றும் பீறிட்டுக்கொண்டு வந்தது; அப்போதும் அவர்கள் போரை நிறுத்தவில்லை. இக்கோரக் காட்சியினைக் கண்ட மேகர், உள்ளே சென்று ஈட்டி யொன்றை எடுத்து வந்தாள். அதனை எப்படியோ பார்த்துவிட்ட முகலாயப் போர்வீரன் ஒருவன், மேகர் அறியாவண்ணம், அவளுக்குப் பின்புறமிருந்து அவளுடைய கரங்களைப் பிடித்துக் கொண்டான்.

வாட்போர் இறுதி பெறும் கட்டம்... ...

முடிவாக குத்புதீன் கோகோ தரையில் சாய்ந்தான். அவனருகிலிருந்த ஆட்களில் ஒருவன், தனது வாளை ஷேர்கான் மீது வீசினன். எதிர்பாராத தாக்குதலைத் தாங்காத ஷேர்கான், புழுவைப் போலத் துடித்துப் பூமியில் விழுந்தான். இந்தக் கோரச் சம்பவம் உன்னிசாவின் உள்ளத்தை ஒரு உலுக்கு உலுக்கி விட்டது. 'கோ' வென அலறி விழுந்தாள் அவ்

வனிதாமணி. ஷெர்கானின் சவத்தின் மீது படுத்துப் புரண்டாள். அழுதழுது தேம்பினாள் அவ் வடிவழகி. அவளருகில் அப்போது கொண்டுவரப்பட்ட அவளது அருமை மகள் **லூர்ஷித்**தும் அழுதாள். அரண்மனையே அழுதது; வங்கமே அழுதது, ஷெர்கானின் மறைவு கண்டு. எங்கும் அழுகுரல்! எங்கும் ஏக்கம்!! எங்கும் கலக்கம்!!!

அதன்பின் நடந்ததென்ன?.........?

கணவனைப் பறி கொடுத்துப் பரிதவிக்கும் மேகர் உன்னிசாவை, மூகலாய வீரர்கள் கைது செய்து, டில்லிக்கழைத்துச் சென்றனர்.

0 • 0 0

பேரரசர் ஜஹாங்கீரின் மனம் மலர்ந்தது; பூரித்தது அவருடல்! 'நினைத்த காரியம் நிறைவேறியதே' என்ற மகிழ்ச்சி மன்னருக்கு; 'கணவனைப் பிரிந்து மகளை அனாதையாக விட்டோமே, என்ற ஏக்கம் எழிலரசிக்கு.

அரண்மனையில், மேகர் உன்னிசாவுக் கென்று, ஒரு தனி அறையை ஏற்படுத்தித் தந்தார் ஜஹாங்கீர். சிறைப்படுத்திய அந்தச் சிங்காரிக்கு, அறுசுவையுண்டியும், அரச போகமும் அளிக்கப் பட்டது. ஆடையுடுத்தவும், அலங்காரஞ் செய்யவும் அரண்மனைத் தாதியர் அமர்த்தப் பட்டிருந்தனர் அவளருகே! எல்லாம் இருந்தன......ஆனால் தன்னை மணந்த மணாளன் மாண்டு போனானே; அதை நினைக்கும் போது அவளுள்ளம் என்ன பாடுபடும்!

பதியைப் பிரிந்த சோகம் உன்னிசாவை மிகவும் வாட்டி வதைத்தது. இந்த வேதனை அந்தக் காம சுந்தர வேந்தனுக்கு என்ன தெரியப் போகிறது. அஞ் சுகத்தைப் பிடித்துத் தன் அருகே வைத்துக்கொண்டு கொஞ்சு மொழி பேச முடியவில்லையே, என்கிற சிந்தனைதானே அவன் நெஞ்சில் கூத்தாடிக் கொண்டிருந்தது!

அன்று பௌர்ணமி! வெண்ணிலா, விண்ணிலே ஒய்யார நடை போட்டுக் கொண்டு கிளம்பிற்று.

பூங்காவிலே பூத்திருந்த பூக்கள் மோகனப் புன்னகை காட்டிக் கொண்டிருந்தன. மெல்லிய பூங்காற்று உல்லாசமாக வீசிக் கொண்டிருந்தது. பறவைக் கூட்டம் பாட்டிசைத்துப் பரவசமூட்டிக் கொண்டிருந்தன.

அப்போது......

மனத்திலே பெரும் பாரத்தைச் சுமந்தவராய், நந்தவனத்திலே சோக நடை போட்டுக் கொண்டிருந்தார் பேரரசர் ஜஹாங்கீர். கவலையின் சின்னமாக அவர் முகம் அப்போது காணப்பட்டது.

பூத்துக் குலுங்கும் சோலையின் அழகும், வானத்து வட்டமதியும் மூகலாய மன்னரின் மனதைச் சற்றும் மகிழச் செய்யவில்லை. கண்ணுக் கெட்டாத உயரத்தில், அவரது சிந்தனை சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தது.

குளிர் மதியின் குளிர்ச்சி, தகிக்கும் தணலாகத் தோன்றியது அவருக்கு; மலரின் மந்தகாசம், மருந்தின் வாடையை நினைவுறுத்திற்று; சில்லென்று வீசிய மென்காற்று, கொதிக்கும் கொப்புறையாக இருந்தது; பறவைகளின் பாட்டு மொழியோ, ஆந்தையின் அலறலாகத்தான் கேட்டது மன்னர் பெருமானுக்கு.

ஏன்?......எதற்கு?......

வேந்தருக்கு விரகதாப நோய்! கரும்பு கூடக் கசக்குமாமே விரகதாபத்தால் வேதனைப் படுவோர்க்கு! தேவாதி தேவர்கள்கூட இந்த நோய் கண்டு, படாத பாடு பட்டிருக்கிறார்கள், என்று இந்துமதப் புராண இதிகாசங்கள் கூறிகிறதென்றால், கேவலம், இந்த மானிடர் மனம்தானா கட்டுப்படப் போகிறது! பாவம்! அவர் என்ன செய்வார்!

பூங்காவனத்திற்குச் சென்ருல், தன் நிலை மாறும்,—செடியும் கொடியும், மலரும் மணமும், நிலவும் பிறவும் அவர் தம் மனதை மாற்றும், மனதிற்கு மகிழ்ச்சியை யூட்டும், என்ற எண்ணத்தில்தான் நந்தவனத்தை நாடிச் சென்ருர் நாடாளும் பூமான். ஆனல் அங்கு அவர் கண்டதென்ன? நேர் மாற்றம்! காம நோயல்லவா; தீராத நோய் ஆயிற்றே!

வெறிபிடித்தவரைப் போல அங்குமிங்குமாக உலாவிக் கொண்டிருந்தார் பேரரசர்.

திடீரென்று அவர் நடை நின்றது; அந்தப்புரத்தை நோக்கி விரைந்தன அவரது கால்கள்.

* * *

மேகர் உன்னிசா சிறை வைக்கப்பட்டிருந்த அறைக்கதவு திறக்கப்பட்டது.

மன்னர் வருகையை யறிந்த பணிப் பெண்கள், அறையினின்றும் வெளியேறி விட்டனர். உள்ளே சென்று, கதவைத் தாளிட்டுக் கொண்டார் ஜஹாங்கீர்.

அப்போது மேகர், சாளரத்தில் தன் தலையைப் பொருத்தியவாறு கண்ணீர் மல்கிக் கொண்டிருந்தாள். அவளது குழந்தை குர்ஷித் தங்கத் தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்தாள்.

தம் வருகையைத் தெரிவிக்கும் முறையில், மெதுவாக இருமினர் மன்னர் பெருமான்......மேகர் திரும்பிப் பார்க்கவில்லை அரசரை—அவர் வந்திருப்பதையறிந்தும் கூட.

லேசாகக் கனைத்தார் அரசர்; எதற்கும் சட்டை செய்யவில்லை அந்தச் சரசி.

அடிமேல் அடிவைத்து, அருகே சென்ருர் அரசர்.

'கண்ணே' என்ருர்; 'மணியே' என்று கூறியும் பார்த்தார்; அப்போதும் அவரை ஏரெடுத்துப் பார்க்கவில்லை அந்த எழிலரசி.

"கனிரசமே, என் கற்கண்டே!" என்று அவள் கரங்களைப் பற்றினார் காவலர். மேகரின் கண்கள் நீரையுகுத்தன. அதைக் கண்டார் அரசபெருமான்.

"குறுநகை காட்டி, குதூகலமாய் என்னை நீ வரவேற்பாய் என்று பார்த்தால், உன் கண்ணீரைக் காட்டி என் மனதைப் புண்ணுக்குகிறாயே," என்றார் மன்னர். அவர் குரல் தழுதழுத்தது. உண்மையில் அவர் உருகித்தான் போனார், உன்னிசா விடும் கண்ணீரைக் கண்டு.

விழியினின்றும் வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் மேகர். மீண்டும் பேச்சைத் துவங்கினார் பேரரசர்.

"நான் என்ன செய்வேன்? இளமையின் நினைவுகள் என் உள்ளத்தை வாட்டும்போது, பித்தனைப்போல நான் பிதற்றுவது உனக்கென்ன தெரியும். மயிலைப் பார்த்தாலும், குயிலைப் பார்த்தாலும் உன் நினைவு தானே எனக்கு வருகிறது. நீரிலும் நீயே, நிலவிலும் நீயேதான் நிழலாடிக் கொண்டிருக்கிறாய். ரோஜாவைப் பறித்துக் கையிலேந்திப் பார்த்தாலும், உன் சிவந்த வதனமும், சிங்காரத் தோற்றமும் அதிலே நான் காண்கிறேன். என் மனமேடையிலே அழகுற நடமாடும் உன் திருவுருவை என்னால் எப்படியடி மறக்கமுடியும்." இவ்வாறு கூறிய வண்ணம் அவள் கார்குழலைத் தடவினார் ஜஹாங்கீர்.

மேகர் தன் கையை மெதுவாகத் தளர்த்திக் கொண்டு பேசினாள்: "இளமையில் நாம் பழகிய காரணத்தை வைத்துக் கொண்டு, மாற்றான் மனைவியைக் கவர்வது அறிவுடையோரின் செயலென்று நான் எண்ணவில்லை," என்று சற்றுக் கோபத்தோடு கூறினாள் மேகர்.

"அப்போது நாம் கட்டிய அந்தக் காதல் கோட்டை சரிந்து போவதா?" உருக்கமாகக் கேட்டார் பேரரசர்.

"துள்ளி ஓடும் பிள்ளைப் பருவத்திலே நிகழ்ந்தன ஆயிரம் நிகழ்ச்சிகள்; அவைகளை நான்கூடத் தான் மறக்கவில்லை........."—இன்னும் ஏதோ கூற வாயெடுத்தாள் உன்னிசா; அதற்குள் அரசர் அவளை இடைமறித்துப் பேசலானார்!

"உண்மையை உரைத்தாய்; ஓராயிரமல்ல, ஒன்பதாயிரம் கூட அல்ல, கணக்கற்ற நிகழ்ச்சிகள்... அந்தக் காதல் நிகழ்ச்சிகளை........."

"அவைகள் வெறும் விளையாட்டுகள்!"

"குவளை மலர் போன்ற உன் குவிந்த அதரங்களில் முத்தமிட்டு மகிழ்ந்தேனே, அது விளையாட்டா? உன் கண்ணாடிக் கன்னங்களைக் கடித்துப் புண்ணாக்கிப் போட்டேனே, அதுகூட விளையாட்டுத்தானா? என் மார்புறத் தழுவி உன்னை மயக்கமுறச் செய்தேனே, அதுவும் விளையாட்டுத்தானா?" என்றார் பேரரசர்.

இவைகளைக் கேட்ட உன்னிசா தலைகுனிந்தாள்—நாணத்தால். சற்று நேர மௌனத்திற்குப் பின் மறுபடியும் பேச்சைத் தொடர்ந்தார் அரசர்.

"அதோ பார், நாம் இருவரும் சேர்ந்து வைத்த மாங்கன்றுகள், இன்று மாபெரும் மரங்களாகிப் பூத்துக் குலுங்கி நிற்கின்றன. நாம் ஓடியாடி மகிழ்ந்த அந்த நந்தவனத்தைக் கேட்டால் சொல்லுமே நம்மைப் பற்றிய காதல் கதைகளை! அதோ, நாம் அமர்ந்து சரசமாடும் அந்த அழகு மேடை;—அந்தச் சிங்கார மண்டபம்; அவைகளுக்கு மட்டும் வாயிருந்தால், இப்போதே அவைகளை இங்கு அழைப்பேன் சாட்சி கூறுவதற்கு!! நாளைப் பட்டத்திற்கு 'வந்தால் என்னை மறந்து விடுவீர்களோ' என்று என்னிடம் நீ கூறிய போது, நான் என்ன சொல்லி உறுதியளித்

தேன்? நினைவிருக்கிறதா?......'நாம் உருவத்தில் தான் இருவரேயன்றி, உள்ளத்தால் ஒருவராகி விட்டோம்; இனி நம்மை எந்தச் சக்தியும் பிரிக்க முடியாது என்றேனே, இதற்குள்ளாகவா மறந்து விட்டாய்? அதோ, விண்ணிலே பவனி வருகிறதே வெண்ணிலா, அது கூட மறந்திருக்க முடியாதே, நீ மறந்து விட்டாயே. உன்னிசா! என் அன்பே! மனமிரங்கி என்னை ஏற்றுக் கொள். பாராளும் மன்னன் உன் பாதங்களைப் பற்றிக் கெஞ்சுறேன். என்னை வதைக்காதே."

பேரரசர் ஜஹாங்கீர், வடிவழகி உன்னிசாவின் உள்ளத்தைத் தன் பக்கம் திருப்புவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகள் கொஞ்ச நஞ்சமல்ல; சிருங்கார சாஸ்திரத்தில் அவர் கற்ற பாடங்களை அப்படியே ஒப்புவித்தார். அதன் விளைவு மேகரின் மனம் சற்று இளகியது; அவளுடைய முகத்தில் படர்ந்திருந்த அந்தச் சோக ரேகை சற்று மறைந்து, நிம்மதியின் சாயல் அங்கங்கே காணப்பட்டது. காம சாஸ்திரத்தில் கரைகண்டவர் எனக் கூடிய ஜஹாங்கீர், அதையறிந்துதானோ என்னவோ, "இன்று சென்று, நாளை வருகிறேன்," என்று கூறி அவ்வறையினின்றும் வெளியேறினர்.

* * *

அன்றிரவு!

சப்ரகூட மஞ்சத்தில் சயனித்துக் கொண்டிருந்தார் பேரரசர் ஜஹாங்கீர். அவர் கண்களைத் தூக்கம் தழுவ மறுத்தது; அங்குமிங்குமாகக் கட்டிலில் புரண்டு கொண்டிருந்தார் புவியாளும் பூமான்.

அதே நேரத்தில்......!

அந்தப்புரத் தனியறையில், மேகரின் நிலையும் அதேதான்! உறக்கம் பிடிக்காதல் உன்மத்தம் பிடித்தவளைப் போல உளறிக் கொண்டிருந்தாள். அவளையுமறியாமல், அவளது வாய் ஏதோ முணு முணுத்துக் கொண்டிருந்தது.

சாளரத்தினருகே நின்று கொண்டிருந்தாள் மேகர். கடலைப் போன்ற அவளது அகன்ற கண்கள், சாளரத்தின் வழியாக எதையோ ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருந்தன. ஆம், வானத்திலே வட்டமிட்டுக் கொண்டிருந்த மேகக் கூட்டங்களும், அம் மேகக் கூட்டங்களை அவ்வப்போது கிழித்துச் செல்லும் அந்த வட்ட மதியும், அந்த வெண்மதியைச் சுற்றிலும் வைரக் குப்பைகள் போன்று ஆங்காங்கே சிதறிக் கிடந்த அந்த நட்சத்திரங்களையும் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் மேகர்.

சற்று நேரத்திற்கு முன் ஜஹாங்கீர் கூறிய வார்த்தைகள் அவள் காதிலே ரீங்காரஞ் செய்தன; மீண்டும், மீண்டும் ஒலித்தன அவ்வாசகங்கள். இளமையின் நினைவுகள், அந்த அழகு மேடை, அந்த மாங்கன்றுகள், அந்தக் குவிந்த அதரங்கள், அந்தக் கண்ணாடிக் கன்னங்கள், அந்த முத்தங்கள், அந்த ஆலிங்கனம், அந்த உறுதி மொழி ஆக அனைத்தும் ஒன்றன் பின் ஒன்ருக மாறி மாறி ஒலித்தன மேகரின் காதில்.

நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன, அவள் கணவனைப் பறி கொடுத்து—ஜஹாங்கீர் பேரரசரால் சிறை பிடிக்கப்பட்டு. இதுவரை, எவ்வளவோ சிரமப்பட்டுத் தன் மனத்தைக் கட்டுப்படுத்தி வந்தாள் அவ் வடிவழகி. இந்த நான்கு ஆண்டுக் காலமாக, சொர்க்க புரியிலேதான் அவள் வாழ்ந்து வந்தாலும், அவள் மனம் மட்டும் நரகத்தில் தான் வாசஞ் செய்தது! எத்தனையோ இன்னல்களுக் கிடையே, தன் 'பெண்மை'யை அடக்கி ஆண்டு வந்தாள் அப்பேரழகி.

ஆனல்......?

அன்று ஜஹாங்கீர் வந்து சென்ற பின், அவளது 'பெண் மனம்' சற்று வளைய ஆரம்பித்தது. அவளும் பெண்தானே!

தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த அவள் குழந்தையை ஒரு முறை பார்த்தாள். அவள் மூளை சுறு சுறுப்பாக வேலை செய்தது.

"பைத்தியக்காரி, உன் நிலையைக் கவனித்தால், உன் கண்மணியின் கதி என்ன ஆவது? மேலும் மன்னரை நீ மணப்பதால் முகலாய சாம்ராஜ்யத்தின் மணி மகுடம் உன் மடியில் தவழ்ந்து விளையாடும். ஊராளும் பேரரசர் உன் காலடியை முத்தமிட்டுக் கொண்டிருப்பார். உன் மனமே வழக்கு மன்றம், உன் சொல்லே சட்டம் என்ற நிலை உனக்குக் கிட்டும். அது மட்டுமா? உனது அருமை மகள் குர்ஷித்தின் வாழ்வு வளம் பெறும். பெருமை வாய்ந்த பேரரசு உனக்கும், வளமான வாழ்வு உன் மகளுக்கும் கிடைக்கிறது. இந்த அரிய சந்தர்ப்பம் மீண்டும் வராது. பொன்னான இந்த வாய்ப்பை நழுவ விடுவாயானால், நீ ஒரு பைத்தியக்காரி தான்."—இப்படிக் கூறி அவளது பெண்மையைப் பணிய வைத்தது அறிவு.

முடிவு.........?

மேகர் தோற்றாள்—அவளது அறிவு வென்றது.

மேகரின் தோல்வி, ஜஹாங்கீரின் வெற்றிதானே!

* * *

அன்றொரு நாள்!

வையகமே வியக்கும் படியாக வெகு விமரிசையாக நடந்தது திருமணம். பேரரசர் ஜஹாங்கீருக்கும், வடிவழகி உன்னிசாவுக்கும் நிகழ்ந்த அந்தத் திருமணம் சாமான்யமாகவா நடந்திருக்கும்? அதிலும் இழந்த காதல், மீண்ட காதலாகி, அதன் காரணமாக நடைபெற்ற திருமணமாயிற்றே; சிறப்புக்குச் சொல்லவா வேண்டும்!

மேகர், ஜஹாங்கீரை மணக்கும் பொழுது, அவள் இளம் குமரியல்ல, கன்னிப் பருவமுமல்ல; முதுமையை எட்டிப் பிடிக்கும் பெண்மணியாகத் தானிருந்தாள். அப்

பொழுது அவளுக்கு வயது முப்பத்தேழு! வயது தான் முப்பத்தேழே தவிர, தோற்றத்தில், அவள் ஒரு கன்னிப் பெண்ணாகத்தான் காட்சியளித்தாள். அவளது அழகிய வதனமும், அலங்கார நடையும், பொன்னிற மேனியும், சிவந்த கன்னங்களும், முல்லைப் பற்களும் ஆக இவைகளின் 'தரம்' சிறிதும் குறைய வில்லை அவளிடம். பதினாறும் நிரம்பாத பச்சிளம் பாவையாக இருந்த போது அவள் காணப்பட்ட அதே நிலையில் தான், இன்றும் அவளது அங்கங்கள் ஒவ்வொன்றும் பூரித்து விளங்கிற்று.

மேகரை மணந்து கொண்டதும், அவளுடைய பெயரை மாற்றியழைத்தார் ஜஹாங்கீர்.

இப்போது அவள் மேகர் அல்ல; **நூர்ஜஹான்!** அவளது திருவுருவத்திற் கேற்ற ஒரு திருப் பெயர் வேண்டாமா? அதனால்தான், **'உலகத்தின் ஜோதி'** என்ற சிறப்புப் பெயரை அந்தச் சிங்காரிக்குச் சூட்டினார் பேரரசர். நூர்ஜஹான் என்பதற்கு 'உலகத்தின் ஒளி' என்று பொருளாம் வட சொல்லில்!

நூர்ஜஹான்—ஜஹாங்கீர்!

'ஆஹா! என்ன பொருத்தம்! என்ன பொருத்தம்,' என்று பாராட்டிப் பேசினர் பாரிலுள்ளோர்.

இப்போது, நூர்ஜஹான் பேரரசரின் நாயகி மட்டுமல்ல, பட்டத் தரசியும் கூட!

முதுமை வராமலிருப்பதற்கும், மேனியின் பளபளப்புக் குறையாமலிருக்கவும், கழுதைப் பாலில் தினமும் தன்னைக் குளிப்பாட்டிக் கொண்டாளாமே யாரோ, ஒரு ரோமாபுரி ராணி', அது போல இந்த வட நாட்டு ராணி கழுதைப் பாலில் 'ஸ்நானம்' செய்ய வில்லை. ஆனால், தன் பேரழகு குறையாமலிருப்பதற்காக அந்த வடிவழகி எடுத்துக் கொண்ட முயற்சியும் செலவிட்ட பொருளும் கணக்கிட்டால், அந்தக் கழுதைப் பால் கட்டழகி ஐந்நூறு கழுதைகள் கரக்கும் பாலுக்குச் செல

விட்ட தொகையை எட்டிப் பிடிக்கும், என்று மதிப்பிடலாம். அத்தகைய பெருந் தொகையைச் செல விட்டாள் இந்த வடநாட்டு ராணி, தன் அழகைப் பெருக்கவும் மேனியை மெருகேற்றவும்!

இயற்கையழகு போதாதென்று, செயற்கையழகு வேறு செய்து கோண்டாள் இந்தச் சிங்காரி. ஸ்நானம் செய்வித்து, பொன்னுடை போர்த்தி, ஆபரணங்கள் சூட்டி அவளுக்கு அலங்காரம் செய்விக்க ஆயிரம் அழகிகள் தேவைப் பட்டனராம்! புதிய புதிய முறையிலே அவள் தன்னை அழகு செய்து கொண்டாள்.

அவளது அழகுத் தோற்றமும், அலங்கார நடையும் ஒய்யாரச் சிரிப்பும் கண்டு மெய்மறந்து போனார் பேரரசர்! மேனியின் மினுக்கிலே, நடையின் நளினத்திலே, கடைக்கண் வீச்சிலே மயங்காதவருமுண்டோ! வீழ்ந்தார் வேந்தர்!!

நாடாளும் நாயகரை, இந்த அழகு ராணி இன்று அடக்கி ஆளுகிருள்! மூகலாய சாம்ராஜ்யத்தின் மணி மகுடம் மங்கையின் காலடியிலே புரளுகிறது விந்தையல்ல, வேடிக்கையுமல்ல; உண்மையே தான்!!

பேருக்குத் தான் பேரரசர் ஜஹாங்கீர்; ஆனல் ஆட்சியுரிமையோ அழகியின் கைக்கு மாற்றப்பட்டது. திரை மறைவிலிருந்து கொண்டே ஒரு சாம்ராஜ்யத்தைக் கட்டியாண்டாள் நூர்ஜஹான்!

'மதுவும் மங்கையும் தவிர, வேறொன்று மறியேன் பராபரமே' என்று நூர்ஜஹானின் மடியிலே புரண்டு கொண்டிருந்தார் பேரரசர்; சில பல சமயங்களில் அவளது காலடியிலுங் கூட!

தான் பட்டத்தரசியானதும், தனது உற்றார் உறவினர் எல்லோருக்கும் பொறுப்புள்ள—மிகப் பெரிய உன்னதப் பதவிகளில் அமர்த்தினுள் நூர்ஜஹான்.

'போடு நமஸ்காரம்' என்ருல், 'எண்ணிக் கொள்ளுங்கள் தேவி' என்று கும்பிட்டுக் கூத்தாடும் பேரரசருக்கு நாட்டின் நிலை எப்படித் தெரியப் போகிறது?

6

ஒரு சமயம், படைத்தலைவன் மகபத்கான் அரசரைக்காண அந்தப்புரம் சென்றான்.

"அவசரமான காரியம், அரசரைக் காண வேண்டும்," என்று வாயிலில் நின்றிருந்த பணிப் பெண் ஒருத்தியுடம் கூறினன் தளபதி.

உள்ளே சென்று, இதனை அரசியாருக்கு அறிவித்தாள் தாதிப்பெண். அதைக் கேட்டதும், அரசர் முகத்தைப் பார்த்தாள் நூர்ஜஹான். 'இன்னுமொன்று போடு!' என்றார் மன்னர். மதுக்கிண்ணத்தில் கனிரசத்தை ஊற்றி மன்னரிடம் கொடுத்துக்கொண்டே, "வரச்சொல், தளபதியை" என்று தாதிக்கு உத்திர விட்டாள் பேரரசி. நிலை குலைந்திருந்த தன் ஆடையைச் சரி செய்து கொண்டாள்.

ராஜ மரியாதை செய்து ராணியின் எதிரே நின்றான் பயைத்தலைவன், மகபத் கான்.

"அவசரமான காரியம் அப்படி என்ன பேச வேண்டும் இப்போது?"—அரசியார் கேட்டாள் சற்று ஆணவத்தோடு, மன்னருக்கு மதுவைக் கொடுத்துக் கொண்டே.

"பாரசீகத்திற்குச் சென்று போரிட்ட நம் படைகள் தோல்வியுடன் திரும்பி வந்து விட்டன,"—தலை குனிந்த வண்ணம் கூறினன் மகபத் கான்.

அச் செய்தியைக் கேட்ட அரசி ஆத்திரமடைந்து ஆவேசத்தோடு பேசினள். "ஆ! நம் படைகளுக்குத் தோல்வியா? போரிட முடியாமல் திரும்பி விட்டனவா நம் படைகள்? ஆச்சரியம்! சரித்திரம் கண்டிராத புதுமை!!"—கண்ணிலே கனல் பறக்கக் கூறினள் நூர்ஜஹான்.

"ஆம், புதுமைதான்!" — 'ஆமாம்' போட்டார் ஜஹாங்கீர் மதுவை யருந்திக் கொண்டே.

"புதுமை மட்டுமா, இத்தோல்வி நம் வம்சத்திற்கே பெரும் இழுக்கல்லவா?"—ராணி மொழிந்தாள்.

"ஆம், கேவலம்தான்!"—மீண்டும் அதே பல்லவி பாடினார் பேரரசர்.

"இதைப் பார்த்துக் கொண்டு நாம் சும்மாயிருப்பதா?" அரசரைப் பார்த்துக் கேட்டாள் அழகி.

"சும்மாயிருக்க முடியாதுதான்; அதற்காக என்னை என்ன செய்ய வேண்டுமென்கிறாய்? ஆவன காரியங்களை நீயே கவனித்துக் கொள்ளேன். என்னை ஏன் தொந்தரவு செய்கிறாய்......கிண்ணம் காலியாய் விட்டது, மதுவைக்கொஞ்சம் ஊற்று," என்று கட்டழகியின் கரங்களைப் பற்றித் தடவினார் ஜஹாங்கீர்.

மதுக் கிண்ணத்தில் மதுவை யூற்றி அரசருக்குக் கொடுத்து விட்டு, மகபத் கானை நோக்கி, "தேர்ச்சி பெற்ற தளபதிகள் இம்போதே புறப்பட வேண்டும் பாரசீகத்தை நோக்கி," என்றாள் நூர்ஜஹான்.!

'சரி' என்று பதில் கூறும் பாணியில், விரைந்து நின்றான் மகபத் கான்; வீரனுக்குரிய சின்னம் போலும்! அவனிடம் மீண்டும் கூறினாள் அரசி:

"நீயும், இளவரசர் **குர்ரமும்** இப்போதே பாரசீகத்திற்கு அணிவகுத்துச் செல்லுங்கள். பாரசீகத்தின் அரண்மனையும், அலங்கார மாளிகைகளும் தரை மட்டமாக்கப்பட வேண்டும். நம்மை எதிர்க்கும் படைகளைத் தவிடு பொடியாக்குங்கள். அதுமட்டுமல்ல, பாரசீக மன்னரின் மணி முடி நமது பேரரசரின் காலடியில் உருள வேண்டும்; தெரிகிறதா?" என்று வீரகர்ஜனை புரிந்தாள் வடிவழகி நூர்ஜஹான்.

"அப்படியே ஆகட்டும்," என்று வாயினால் கூற வில்லை, தலையை அசைத்தான் தளபதி.

அடுத்த கணமே, அரசாங்க ஆணைப்பத்திரத்தை அரச பெருமானிடம் நீட்டி, அதிலே கையொப்ப மிடும் இடத்தையும் சுட்டிக் காட்டினாள் சுந்தரி. தன் கையில் வைத்திருந்த மதுக்கோப்பையை நூர்ஜஹானிடம் தந்து விட்டு, தட்டுத் தடுமாறிக் கையொப்பமிட்டு முடித்தார் ஜஹாங்கீர்.

கையொப்பத் திருப்பணி முடிந்தானதும், அந்த 'அரசாங்க ஆணை'யை அரசரிடமிருந்து வெடுக்கென்று பிடுங்கி, ஆத்திரமாய்க் கீழே எறிந்தாள் எழிலரசி. கீழே குனிந்து அதனை எடுத்துக் கொண்டு, மரியாதை வணக்கம் செய்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தான் மகபத் கான். அப்போது அவன் முகத்தில் வியர்வைத் துளிகள் முத்துக் கோர்த்திருந்தன; அவைகளைத் துடைக்கத்தான் அவனுக்குத் துணிவு ஏது!

படைத் தலைவன் வெளியே சென்றதும், மலர்ந்த முகத்தோடு மன்னர் பக்கத்திலே அமர்ந்தாள் மங்கை. மற்றுமொரு முறை மதுவை அந்தக் கோப்பையிலே ஊற்றினாள் அந்தக் கோமளவல்லி. அதைப் பருகினார் அரசர். அவர் கண்கள் கர்ணம் போட்டன. பேச்சுத் தடுமாறிற்று; தன் உணர்வே தன்னிடம் இல்லாத நிலை மன்னர் பெருமானுக்கு. இந்தச் சூழ்நிலையை அறிந்த அழகி, நீண்ட நாட்களாகத் தன் மனத்தில் அடக்கி வைத்திருந்த 'எண்ணக் குவியலை' மன்னர் முன் குவிக்க எண்ணினாள்.

"எப்படி யிருக்கிறது?" என்று தன் முல்லைப் பற்களைக் காட்டி மோகனப் புன்னகை புரிந்தாள் அந்தப் பேரழகி.

"எதைக் கேட்கிறாய்? மதுவைத்தானே? அமுதத்தை மிஞ்சுகிறது கண்ணே. உன் அழகு கரங்களால் ஆலகால விஷத்தைக் கொடுத்தாலும், அதை நான் அமுதமென்றே பருகுவேன். அந்த அமுத சுவை உனது அலங்காரக் கரங்களில் தானடி உண்டா

கிறது!" என்று கூறிக்கொண்டே, வடிவழகியின் வதனத்தைக் கிள்ளினார் ஜஹாங்கீர்.

நூர்ஜஹான், மன்னர் பெருமானின் தலையை வருடிய வண்ணம் கொஞ்சும் மொழியிலே தன் எண்ணத்தைக் கூறத் தொடங்கினாள்.

"நெடு நாட்களாக எனக்கொரு ஆசை; அதைத் தங்களிடம்......" முடிக்கவில்லை மோகனாங்கி.

"அதை என்னிடம் ஏன் கூறாமலிருந்து விட்டாய்? வானத்து முழுமதி வேண்டுமா? உலகம் போற்றும் உன்னதப் பொருள் வேண்டுமா? நீ விரும்புவது எது? சொல், இப்போதே நிறைவேற்றி வைக்கிறேன்."—குடி வெறியில் கூறினார் பேரரசர்.

மன்னரின் மயக்க நிலையையறிந்த மகாராணி மெதுவாக அவர் மனதைத் தடவினாள்.

"இப்போது நான் கூறப் போகும் விஷயம் என்னைப் பற்றியதல்ல; குழந்தை குர்ஷித்தைப் பற்றியதாகும்," என்று பீடிகை போட்டாள்.

"குழந்தை குர்ஷித்தா அவளுக்கென்ன குறை? அவளுக்கு அழகு செய்யத்தான் ஆயிரம் அழகிகளை அமர்த்தி யிருக்கிறேனே, அந்தப்புரத்தில்?"—மன்னர் கேட்டார் தடுமாறிக்கொண்டே.

"அழகு இருந்தென்ன, அழகு செய்யும் ஆரணங்குகள் இருந்துதான் என்ன பயன்? தக்க பருவத்தில், அவளுக்கு மணம் செய்வித்து மகிழவேண்டாமா?" பேரரசி நூர்ஜஹான் கூறினாள்.

"மண விஷயத்தைப் பற்றி என்னிடம் ஏன் கேட்கவேண்டும்? நீயே பார்த்து முடிவு செய்துவிட்டால், நான் 'சரி' என்று சம்மதிக்கவா மாட்டேன்?"

"என்ன இருந்தாலும், கணவரைக் கேட்காமல் ஒரு காரியத்தைச் செய்வது, நல்ல பெண்மணிகளுக்கு அழகாகாதே என்றுதான்......"

"நம் இருவர் மனதும் ஒன்றுபட்ட பின், நான் வேறு, நீ வேறு என்று கூற முடியுமா? உன் இஷ்டம் எதுவோ, அதுவே என் இஷ்டமும். இதில் அபிப்பிராய பேதத்திற்கு இடமே இல்லையே?" என்று கூறிக் கொண்டே மதுக் கிண்ணத்தை நீட்டினார் மன்னர் பெருமான்.

புள்ளிமான் ஒன்று வலையில் விழுந்தது; வேடன் மனம் மலரத்தானே செய்யும்!

வெற்றியின் அறிகுறி, வேல் விழியாளின் முகத்திலே பிரதிபலித்தது!

வாள் வீச்சுக்கு அஞ்சாத பேரரசர், கனகாங்கியின் கண்வீச்சுக்குப் பணிந்து போனார். சுழன்று கூத்தாடும் அந்தக் கயற் கண்களுக்குத்தான் எத்தனை சக்தி!!

7

ஷாரியர்! நல்ல அழகன். வாள் பிடிக்க இவனுக்குத் தெரியாவிட்டாலும், வனிதையரின் தோள் பிடிக்கத் தெரியும்! போர்க் களம் அவன் கண்டறிய மாட்டான். ஆனல், அந்தப்புரத்தை அவன் நன்கு அறிவான். போர் வீரர்கள் அவன் எதிரில் தோன்றக் கூடாது; ஆனல், சதிராடும் சரசிகளும், இசைபாடும் இன்பவல்லிகளும் இவன் முன் சதா 'தரிசனம்' தந்து கொண்டிருக்க வேண்டும். இவன் வேறு யாருமல்ல; பேரரசர் ஜஹாங்கீரின் கடைசி மகன்! இவனைத்தான் தேர்ந்தெடுத்தாள் நூர்ஜஹான். தன் மருமகனாக—குர்ஷித்தின் கணவனாக.

நூர்ஜஹானுக்கும் ஷெர்கானுக்கும் பிறந்த பெண்தான் இந்தக் குர்ஷித்! முகலாய சாம்ராஜ்யத்தின் மகுடம் மாற்றான் கைக்கு மாறக்கூடாது;

அதாவது, ஜஹாங்கீரின் மூத்த மகனை **குர்ரம்** அரியணையேறக் கூடாது. ஜஹாங்கீருக்குப் பின், தன் சந்ததியில் யாராவது பேரரசராக வரவேண்டும், என்பது நூர்ஜஹானின் பேராசை. அதனுல்தான், தன் மகளை மன்னரின் இளைய மகனுக்கு மணமுடித்து, முகலாயப் பேரரசைத் தன் மகள் அனுபவிக்க வேண்டும் என்று திட்டம் தீட்டினுள்.

இதற்கு முன்பு ஒரு முறை, மூத்த மகனை, குர்ரம் இளவரசனுக்குத் தன் மகள் குர்ஷித்தைக் கொடுத்து, மணமுடிக்க எவ்வளவோ முயன்ருள் நூர்ஜஹான். ஆனுல், முடிவில், அவள் கண்டது தோல்வியே! ஆகவேதான். கடைசி மகன் ஷாரியாருக்காவது குர்ஷித்தைக் கொடுத்து, முகலாயப் பேரரசைத் தன் வசப்படுத்த முடிவு கட்டினுள். அதற்கான சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். சாகஸக் கள்ளி.

இத்தகைய சூழ்நிலையில்தான், பாரசீகத்திற்குச் சென்ற படைகள் தோல்வியுற்றுத் திரும்பின, என்ற செய்தியை அறிவிக்கத் தளபதி மகபத் கான், மன்னர் முன் தோன்றினுன். பழம் நழுவிப் பாலில் விழுந்து, அதுவும் நழுவி வாயில் விழுந்ததைப்போல் ஆகிவிட்டது, இச் செய்தி பேரழகிக்கு. சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்ளும் நோக்கத்தில்தான், தளபதி மகபத் கானும், இளவரசர் குர்ரமும் போர்க் களம் புகவேண்டும், என்று கண்டிப்பான உத்தரவு போட்டு, அரசாங்க ஆணைப் பத்திரத்தையும் வீசியெறிந்தாள் அந்த வடிவழகி.

இளவரசர் குர்ரம் இல்லாத நேரத்தில்—வடமேற்கு எல்லையில் குர்ரம் கடும் போரிலே ஈடுபட்டிருந்த அந்த நேரத்தில்தான் இங்கே, டில்லிமா நகரிலே புதுமணத் தம்பதிகள் யானை மீதிலே ஒய்யாரப் பவனி வந்து கொண்டிருந்தனர்.

அங்கே—பாரசீகத்திலே போர்!

இங்கே—டில்லியிலே திருமணம்!!

*   *   *

பாரசீகம் சென்ற இளவரசன் குர்ரம், டில்லி திரும்பினன்; வெற்றி முரசு கொட்டிக் கொண்டு அல்ல—சோகக் 'களை' தன் முகத்திலே தாண்டவ மாடத்தான் தலைநகர் திரும்பினன் குர்ரம்.

தன் தம்பி ஷாரியர், நூர்ஜஹானின் மகள் குர்ஷித்தை மணந்து கொண்ட செய்தியை அறிந்தான் குர்ரம். இச் செய்தி இளவரசன் உள்ளத்தை உலுக்கி விட்டது. அவன் மனம் பெரும் போர்க் களமாகி விட்டது. ஏனெனில், பட்டத்திற்குரிய உரிமையைத் தான் இழந்துவிடும் நிலை ஏற்பட்டுவிடும் என்று அவன் உணர்ந்தான். நூர்ஜஹான் தன் சூழ்ச்சியால் தன் மருமகனை ஷாரியாரை அரியணை யேற்றி—அதாவது, முறைப்படி, ஜஹாங்கீரின் முதல் மகனும், இளவரசனுமான தனக்குக் கிடைக்க வேண்டிய மகுடத்தை, தன் தம்பி ஷாரியாருக்குக் கிடைக்கும்படியாக நூர்ஜஹான் சூழ்ச்சி செய்வாள், என்கிற எண்ணம் அவன் உள்ளத்திலே தோன்றி பெரும் புயலை எழுப்பிவிட்டது. அதன் விளைவு, அடுத்த விநாடியே இளவரசனின் இளம் உள்ளம் கிளர்ச்சி பீடமாக மாறியது! கிளர்ச்சி செய்தாவது, தன் அரசுரிமையைப் பெற்றே ஆக வேண்டும், என்று வீர கர்ஜனை புரிந்தான் குர்ரம்.

அதன் எதிரொலி, டில்லிமா நகரம் எங்கும் ஒலித்தது. போர் வீரர்கள் ஒன்றுபட்டனர். படைத் தலைவர்களை ஒன்று திரட்டி, பெரியதொரு கிளர்ச்சியைத் துவக்கினன் இளவரசன் குர்ரம்.

அதையறிந்த வடிவழகி நூர்ஜஹான். வீறு கொண்ட வேங்கையானள். போர் வீரர்களின் கலகத்தை அடக்குவதற்கு, பேரரசி எடுத்துக்கொண்ட

முயற்சிகள் சாமான்யமானதல்ல; தந்திரங்கள் பலவற்றைக் கையாண்டு, அக் கிளர்ச்சியை அடக்கினாள்.

கலகத்தின் கர்த்தாவான குர்ரம் தக்காணத்தை நோக்கி ஓடினான்.

தளபதி மகபத் கான் சிறையி லடைக்கப்பட்டான்.

இவ்வாறு கிளர்ச்சியை அடக்கி அமைதியை நிலவச் செய்தாள் அவ்வழகு ராணி.

*　　　*　　　*

அமைதி அதிக நாட்கள் நீடிக்கவில்லை.

பேரழகி நூர்ஜஹானின் ஆசை மருமகனை ஷாரியர்— 'மதுவும் மங்கையுமே எனது ஜீவநாடி' என்ற போக்குடைய ஷாரியர்—கடும் நோயிலே வாடினான்.

அது மட்டுமா; பேரரசர் ஜஹாங்கீரும் உடல் நலம் குன்றி, படுத்த படுக்கையாகி விட்டார். உடல் சுகத்தைத் தேடிக்கொண்டு, லாகூர் சென்றார் மன்னர் பெருமான். பேரழகியோடுதான்! பேரரசர் தனியாகவா செல்வார்?!

நாட்டைப் பாதுகாக்கத் தகுதியும் திறமையும் படைத்தவர்கள் ஒருவரும் அப்போது இல்லாத காரணத்தால், சிறை வைக்கப்பட்டிருந்த மகபத் கான், விடுதலை செய்யப்பட்டு, மீண்டும் தளபதியாக ஆக்கப்பட்டான்.

நீண்ட நாட்களாக சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்த மகபத் கானுக்கு, இவ்வரிய வாய்ப்பு, மகிழ்ச்சியை யூட்டியது! தாக்குண்ட களிறு, தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளத் தக்க சமயத்தை எதிர்பார்ப்பது போல்தான், தான் சிறையிலிருந்த போது தருணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தான் மகபத் கான். சிறையினின்றும் விடுதலை பெற்று, 'அதிகாரம்' தன் கைக்கு வந்ததும், நெடுநாளாக அவன் மனத்திலே புகைந்து கொண்டிருந்த எரிமலை வெடிக்கத் தொடங்கிற்று.

ஒரு நாள்!

மாலை நேரம்; மலர் வனத்தின் மந்தகாசம், மெல்லிய பூங்காற்ருேடு கலந்து, நறுமணத்தை எங்கும் பரப்பிக் கொண்டிருந்தது. நன்கு அலங்கரிக்கப்பட்ட ஓடம் ஒன்றிலே ஜீலம் நதியிலே, உல்லாசப் பவனி வந்து கொண்டிருந்தாள் பேரழகி நூர்ஜஹான்.

அதே நேரத்தில்.......!

பேரரசர் ஜஹாங்கீர் தங்கியிருந்த கூடாரத்தை மகபத் கானின் படைகள் சூழ்ந்து கொண்டன.

மதுமயக்கத்தில் மயக்கமுற்றிருந்த மன்னர் பெருமான்முன், புன்னகை பூத்த முகத்துடன் காட்சியளித்தான் மகபத் கான். அவனைக் கண்ட அரசர் அஞ்சவில்லை, அதிர்ச்சியடையவில்லை, — அவர்தான் குடிவெறியில் போதையுண்டு கிடந்தாரே!

பேரரசரின் கைகள் விலங்கிடப்பட்டன; அப்போதும் அவர் கலங்கிஞரில்லை! மதுக கிண்ணத்தில் மதுவை யூற்றி மன்னருக்கு ஊட்டிக் கொண்டிருந்தான் மகபத் கான். மதுவருந்தும் மகிழ்ச்சியிலே, தன் மனத்தைப் பறி கொடுத்திருந்த அரசர் பெருமான், தன் கரங்களில் விலங்கிடப் படுவதைக்கூட உணரவில்லை—உணர முடியவில்லை!

* * *

ஜீலம் நதிக்கரையிலே!

படகைவிட்டு இறங்கிஞள் இன்பவல்லி. கரையேறிய கட்டழகி, ஆச்சரியமும் திகிலும் அடையக் கூடிய அளவுக்கு, அங்கு திடீரெனத் தோன்றிஞன் படைத்தலைவன் மகபத் கான், சில வீரர்களுடன்! சிங்காரியின் முகம் சிவந்துவிட்டது.

"அரசியார் அவர்களே! தங்களைக் கைது செய்யவே இங்கு நான் வந்திருக்கிறேன்," என்று தளபதி மகபத் கான் கூறவும், போர் வீரர்கள் பேரரசியை நெருங்கிச் சூழ்ந்து கொள்ளவும் சரியாகிவிட்டது.

இக் காட்சியைக் கண்ட காரிகை, உள்ளூறத் திடுக்கிட்டாள் எனினும், அதை மேலுக்குக் காட்டிக்கொள்ளாமல், மறைக்க முயன்றாள். தனது சாகசத்தால், மகபத் கானை மயக்கிவிட வேண்டுமென மனதிற்குள்ளேயே திட்டமிட்டுக் கொண்டாள் மனோகரி. போர்க்களத்திலே நின்று ஆயிரமாயிரம் படைவீரர்களை அணிவகுத்துச் சென்று, எதிரிகளை முறியடிக்கும் ஆற்றலைத்தான் மகபத் கான் பெற்றிருந்தானே தவிர, சிரித்துச் சித்திரவதை செய்யும் சிங்காரிகளின் சாகசத்தைப் புரிந்துகொள்ளும் '**சக்தி**' அவன் பெற்றிருக்கவில்லை.

தன்னைச் சூழ்ந்து நின்ற வீரர்களையும், மகபத் கானையும் ஒரு முறை பார்த்தாள் அந்தச் சரசாங்கி. தன் மோகனப் புன்னகையை வீரகளின் விழிகளுக்கு விருந்தாக்கி, கடைக்கண் வீச்சை மகபத் கான் மீது வீசினாள். வீரர்களின் மனம், அசைந்தாடும் மூங்கிலாக மாறி, அவைகள் வளைந்து கூத்தாடின—மகபத் கானைத் தவிர. அதையறிந்துகொண்ட அழகி, மகபத் கானை நோக்கி, "என்னைக் கைது செய்ய வேண்டும் என்கிறாய் நீ; அதற்கு நான் மறுப்புக் கூறவில்லை—கூற முடியாத நிலையிலிருக்கின்ற காரணத்தால். ஆனால், ஒரு வேண்டுகோள்......" என்று பசப்பினாள் பாவை.

"என்ன வேண்டுகோள்?" என்று கர்ஜனை புரிந்தான் மகபத் கான்.

"என் கணவரைத் தனியாக விட்டு வந்தேன். அவரை ஒரு முறை காண வேண்டுமென்று ஆசிக்கிறேன். ஆகவே, அவர் இருக்கும் இடத்திற்கு, அதாவது, அந்தக் கூடாரத்திற்கு என்னையழைத்துச் சென்று, அங்கே கைது செய்யுங்கள் என்னை," என்று கூறி முடித்தாள் அந்தக் கோமளவல்லி.

பசப்புக்காரியின் பாவனையை உண்மை என்று ஏமாந்த தளபதி, அவள் வேண்டுகோளுக்கிணங்கி,

தன் வீரர் சகிதம் நூர்ஜஹானைப் பின் தொடர்ந்தான் கூடாரத்தை நோக்கி.

கூடாரத்தையடைந்ததும், அங்கு கண்ட காட்சி அந்தக் கனகாங்கியின் உள்ளத்தை உலுக்கி விட்டது. பேரரசர் ஜஹாங்கீர் கைவிலங்குடன் அங்கு நின்றிருந்தார். பயங்கரமிக்க அந்தச் சூழ்நிலையினின்றும் தப்பவேண்டுமென்ற எண்ணம் எழிலரசியின் உள்ளத்தில் தலை தூக்கி நின்றது. வழியேதும் தோன்றாதவளாய், மகபத் கானின் காலடியில் விழுந்து கண்ணீர் விட்டழுதாள், கட்டழகி நூர்ஜஹான்.

"ஜீலம் நதி வழியாக நானும் பேரரசரும் தப்பிச் சென்றுவிடுகிறோம். கருணை காட்டி எங்களைக் காப்பாற்று," கண்கலங்க கூறினாள் நூர்ஜஹான்.

"பஞ்சாப் பிரதேசத்தை உன் ஆதிக்கத்தின் கீழ் விட்டு விடுகிறேன். உன் படைகளை இங்கிருந்து வெளியேற்றி விடு," என்று கருணைப் பிச்சை கேட்டாள் கனகாங்கி.

"என் கண்ணீரைக் கண்டும் உன் கல் நெஞ்சம் கலங்கவில்லையே?" என்று கெஞ்சினாள்.

கட்டழகியின் கண்ணீரைக் கண்டும், கெஞ்சல் கொஞ்சல் மொழிகளைப் பார்த்தும் கூட மகபத்கானின் மனம் மாற்ற மடையவில்லை. "நான் சொன்னது சொன்னதுதான்; அதை மாற்றமாட்டேன்," என்று கூறிவிட்டுத் தன் ஆட்களைப் பார்த்து, "ஏன் நிற்கிறீர்கள், கைது செய்யுங்கள்," என்று ஆணையிட்டான் மகபத் கான்.

ஏற்கனவே தன் சாகசத்தால் மயக்கிய வீரர்களைப் பார்த்து, சிங்காரச் சிரிப்பொன்றை வீசினாள் சிங்காரி. வேல்விழியாளின் வீச்சிலே வீழ்ந்து போயினர் வீரர்கள்! அவ்வளவுதான்; அடுத்த விநாடியே, தளபதி மகபத் கான் மீது பாய்ந்தனர் வீரர்கள். மகபத் கான் கைது செய்யப்பட்டான்!

மகபத் கானை சிறைப்படுத்தி விட்ட மகிழ்ச்சியோடு, கூடாரத்தின் வெளியே வந்து நின்று, "தாக்குங்கள் தளபதியின் ஆட்களை; நிர்மூலமாக்குங்கள் துரோகிக் கும்பலை," என்று உத்தர விட்டாள் உலகின் ஒளி நூர்ஜஹான்.

கட்டழகியின் கட்டளை பிறந்த மறுவினாடியே, ஜீலம் நதிக்கரை பயங்கரப் போர்க்களமாக மாறிவிட்டது.

வாளோடு வாள் மோதிற்று; கேடயத்தோடு கேடயம் முத்தமிட்டது. இருதரப்பின் படைகளும் ஆவேசத்தோடு போரிட்டனர்! படைவீரர்கள் மட்டுமல்ல மாண்டது, குதிரைகள், யானைகள்கூட வாள் வீச்சுக்கிரையாகிச் செத்தன!

போரின் காரணமாகச் சிந்தப்பட்ட ரத்தம், வெள்ளமாக ஓடி, ஜீலம் நதி நீரிலே கலந்தது. நிர்மலமான ஆற்று நீர், செந்நீராக மாறியது. இக் கோரக் காட்சி நிகழ்ந்து கொண்டிருக்கும்போதே மகபத் கானின் ஆட்கள் சிலர் சென்று தங்கள் தளபதியை விடுவித்தனர்.

கூண்டிலிருந்து விடுபட்ட சிங்கம்போல, வீர கர்ஜனை புரிந்து வெளியே வந்தான் மகபத் கான். "அரசரையும் அழகியையும் தேடிப்பிடித்துச் சிறை செய்யுங்கள்," என்று வெறி பிடித்தவனைப்போலக் கூவினன் மகபத் கான். கூவியும் கூத்தாடியும் பயன் என்ன? அவர்கள் அங்கு இருந்தால்தானே! போர் கடுமையாக நடந்து கொண்டிருக்கும்போதே, யானை மீதேறித் தப்பிச் சென்று விட்டனரே, மன்னரும் மங்கையும்! இன்னேரம், அவர்கள், ஜீலம் நதியைக்கூடக் கடந்து விட்டிருப்பார்களே!

சிறிது நேரப் போருக்குப்பின், மகபத்கானின் படை ஆட்கள் சின்ன பின்னமாக்கப்பட்டு, சிதறியோடினர். தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும்

பொருட்டுப் போர்க்களத்தைவிட்டு மறைந்த மகபத்கான் தக்காணத்தை நோக்கி ஓடினான்.

பாவம்! மகபத்கான கட்டிய மனக்கோட்டை மண்மேடாயிற்று.

*   *   *

8

லாகூர் சென்றிருந்த மன்னரும் மகாராணியாரும் டில்லி திரும்பினர்.

பேராபத்திலே சிக்கி, அதனின்றும் ஒருவழியாகத் தப்பி வந்த பேரரசரும், பேரழகியும் டில்லியிலே மகிழ்ச்சியைக் காணவில்லை. அவர்கள் எண்ணியபடி, ஆனந்தக் 'களை' அரண்மனையிலே காணேம்; துக்கத்தின் அறிகுறி எங்கும் பிரதிபலித்தது.

அரண்மனையை நெருங்கியதும், அரசரை ஆனந்த கீதம் பாடி வரவேற்கவில்லை அமைச்சர்கள்; கருப்புடை தரித்திருந்தனர் அனைவரும். சோகத்தின் சாயல் அவர்கள் முகத்திலே காட்சியளிக்க, வழிந்தோடும் கண்ணீர் அவர்கள் விழியிலே தேங்கிநிற்க, தடுமாற்றப் பேச்சுக்கள் அவர்கள் வாயினின்றும் வெளிவர, ஆக இத்தகைய சோக நாடகத்தைதான் அரசர் பெருமான் கண்டார், அரண்மனை வந்ததும். அழுகையின் குரல் அரண்மனையெங்கும் எதிரொலிப்பதைத்தான் காண முடிந்தது அவர். அதைக்கண்டு அவரது மனம் புழுங்கிற்று. 'என்ன காரணமோ, ஏது நேர்ந்ததோ' என மன்னர் தன் மனத்திலே நினைப்பதற்குள், "என்ன நடந்தது?" என்று அரசியார் கேட்டார் அமைச்சர்களைப் பார்த்து.

"உம்முடைய மருமகன்—மன்னர் பெருமானின் மைந்தன் ஷாரியர் மாண்டு போனர்," என்று கூறினன் ஆசப் கான்.

அதைக் கேட்டதும் நூர்ஜஹானின் கண்கள் சுழன்றன. தலை சுழன்றது; இந்த உலகமே சுழலு வதுபோலத்தான் இருந்தது பேரழகிக்கு. 'கோ' வெனக் கதறிய வண்ணம் யானையை விட்டிறங்கினுள் நூர்ஜஹான். "மெதுவாக இறங்கு," என்று கூறிக் கொண்டே தன் கையிலே வைத்திருந்த மதுக் கிண்ணத்தைப் பாகனிடம் கொடுத்துவிட்டுக் கீழே இறங்கினுர் ஜஹாங்கீர்.

உள்ளே சென்றதும், தன் அருமை மகள் குர்ஷித்தை யணைத்துக் கொண்டு அழுதாள் அழகி. தேம்பித் தேம்பி யழுதாள். அரசர் அவளைத் தேற்றினுர். அரசியின் அதிகாரப்போதை தெளிந் தது. மமதைக் கோட்டை சரிந்தது. அவள் மனத் தில் குடிகொண்டிருந்த சூழ்ச்சியும் சுயநலமும் கொஞ் சங் கொஞ்சமாகக் குறைய ஆரம்பித்தது.

அதே சமயத்தில், "இளவரசர் குர்ரம் மன்னர் ஆவார்" என விளம்பரப் படுத்தி, ஆனந்தப் பள்ளுப் பாடினுன் ஆசப் கான். அந்தச் செய்தி கேட்டு, அரண்மனை மட்டுமல்ல, டில்லிமாநகரமே ஆனந்தக் கண்ணீர் சொரிந்து அகமகிழ்ந்தது. ஆனுல்...... நூர்ஜஹானின் மனம் என்ன வேதனைப்பட்டது என்பதை அவளையல்லவா கேட்க வேண்டும்!

துன்பம் வந்தால் தொடர்ந்துதானே வரும்...! சின்னுட்களுக்குப்பின், பேரரசர் ஜஹாங்கீர் கடும் நோய் வாய்ப்பட்டு, படுத்த படுக்கையாய் விட்டார். இரத்த ஓட்டம் குறைந்து போய், எந்த நேரத்தி லும் அது நின்றுவிடும், என்ற நிலை.

அன்றொரு நாள்.........!

மன்னரின் முகம் சவம்போல் வெளுத்திருந்தது. மூச்சு விடமுடியாமல், மிகவும் திணறினுர். அவர் கண்கள் மூடிமூடித் திறந்தன; பேச்சுத் தடுமாறிற்று. ஏதோ பேச வாயெடுத்தார். அவர் பக்கத்திலே

அமர்ந்து அழுது கொண்டிருந்த வடிவழகி நூர்ஜஹான், 'என்ன வேண்டும்?' என்று கேட்டாள். பேச இயலாத வேந்தரின் வாய் மூடிக் கொண்டது. கண்கள் நிலையாக நின்று விட்டன. ஊசலாடிக்கொண்டிருந்த அந்த மூச்சும் நின்று விட்டது.

"கண்ணாளா, என்னை விட்டா போய் விட்டீர்கள்?" என்று தலையிலடித்துக் கொண்டு அழுதாள் அரசியார். இறந்த மன்னர் பேசவா போகிறார்!

* * *

ஜஹாங்கீர் மன்னர் இறந்த செய்தி கேட்டு, தச்காணத்திலிருந்து டில்லி திரும்பி வந்தான் குர்ரம்.

அரண்மனை முன் கம்பீரமாக வந்திறங்கினான் குர்ரம். கண்ணீரும் கம்பலையுமாக அவன்முன் நின்று, அவனை வரவேற்றாள் அழகுராணி நூர்ஜஹான். சோகமே உருவெடுத்தாற்போல் அவள் காட்சியளித்தாள். அவள் கண்களில் நீர் தாரை தாரையாய் விழுந்தது. காரிகை விடும் கண்ணீரைக் கண்ட இளவரசன் குர்ரம் கலங்க வில்லை; மாறாகப் புன்னகையொன்றை அவள்மீது வீசினான். "அதிகாரம், ஆணவம் அஸ்திவாரமில்லாத கோட்டை, என்று உணராமல், மமதை கொண்டு அலைந்தாயே, இப்போது பார்த்தாயா, ஆட்டங்கொடுத்து விட்டது உன் ஆணவக் கோட்டை?!" என்ற ஆழமான 'பொருள்' அந்தப் புன்னகையில் புதைந்திருந்ததைப் பேரழகி உணராமல் இல்லை.

* * *

9

குர்ரம் **ஷாஜஹான்** என்ற பட்டப் பெயருடன் அரியாசன மேறினான்.

குர்ரம் மன்னரானதும், நூர்ஜஹானுக்கென்று தனியறை ஒன்றை அமைத்துத் தந்தான்.

ஜஹாங்கீர் இறந்த பின், பதினெட்டு ஆண்டு கள் உயிர் வாழ்ந்தாள் பேரழகி நூர்ஜஹான்.

'அதிகாரப் பேய்ப் பிடித்தலையும் ஆணவக்காரி' என்று ஊரார் பழித்தும் இழித்தும், பேசியகாலம் போய், இப்போது, 'நல்ல பெண்மணி' என்று 'புகழ்ச்சிப் பண்' பாடக்கூடிய அளவுக்கு வடிவழகி நூர்ஜஹான் தன் நடத்தையை மாற்றியமைத்துக் கொண்டாள்.

அவளது ஆடம்பரமும் அலங்காரமும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. அழகு செய்து கொள்வதில்லை; புத்தாடை பூணுவதில்லை; பட்டாடை போய்ப் பருத்தியாடை உடுத்தலானாள்!

தூய்மையான வெண்ணிற ஆடை பூண்டு, அமைதிமிக்க எளிய வாழ்க்கையை மேற்கொண்டாள் மோகனாங்கி. கோலாகல வாழ்வை மாற்றி, துறவி யாகக் காட்சியளித்தாள் கோமளவல்லி! எளியோருக் குத் தானம் வழங்கினாள். சதாசர்வ காலமும் '**குரானை**' வாசித்தாள்.

இவ்வாறாக, அமைதிமிக்க வாழ்வின் பதினெட்டு ஆண்டுகளைக் கழித்துவிட்டு, ஒரு நாள், இவ்வைய கத்தைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டாள் வனிதா மணி நூர்ஜஹான்!

நூர்ஜஹான் இறந்ததும், பேரரசர் ஜஹாங்கீரின் கல்லறைக்குப் பக்கத்திலேயே புதைத்தார் **ஷாஜஹான்.**

உலகத்தின் உன்னத ஒளி மறைந்தது!

பேரழகி நூர்ஜஹான் மாண்டு போனாள்!!

ஆனால், அந்தக் கட்டழகியின் பெயர் காலம் உள்ளவரை உலக வரலாற்றில் அழியாத இடம் பெற்று விட்டதை யாரேனும் மறுக்க முடியுமா?

வடிவழகி மும்தாஜ்

அன்று டில்லி மாநகரமே குதூகலத்திலாழ்ந்திருந்தது. பேரரசர் ஜஹாங்கீரின் பிறந்த தின விழா, அன்று, எங்கும் கொண்டாடப்பட்டன.

அரண்மனையிலும் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அரண்மனை வாயிலில் அழகான பொருட்காட்சிசாலையொன்று அலங்காரமாக அமைக்கப்பட்டிருந்தது. அந்தப்புரத்து அழகிகளால் ஆக்கப்பட்ட அந்தப் பொருட்காட்சிசாலையில் மிக விலையுயர்ந்த பொருள்கள் விற்கப்பட்டன. பொன்னும் மணியும் போர் போராகக் குவிந்தது காட்சிசாலைக் கடைகளில். ஒவ்வொரு கடையிலும் ஒவ்வொரு அழகி நின்றுகொண்டு, வியாபாரம் செய்து கொண்டிருந்தாள்.

கடைகளில், பொன்னும் பொருளும் இருந்தன! விலையற்ற வைரங்கள் குப்பையாகக் குவிந்திருந்தன; மதிப்பிட முடியாத மரகதக் கற்கள் அங்கங்கே விற்கப்பட்டன. தங்கத்தாலான ஆபரணங்களும், மென்மையான பட்டாடைகளும் அங்கே ஏராளம், ஏராளமாகக் கிடந்தன! எல்லாவற்றிற்கும் மேலாக, அவைகளை விற்கும் ஆரணங்குகள், அலங்காரப் பதுமைகளாகக் கடைமுன் நின்று வியாபாரம் நடத்தும் அவ்வரிய காட்சி, வாலிபர் விழிகளுக்கு விருந்தாக இருந்தது!

காட்சிசாலையினைப் பார்வையிடவந்த இளவரசன் **குர்ரம்**, ஒவ்வொரு கடையாக நுழைந்து, நுழைந்து, கடையில் வைக்கப்பட்டுள்ள பொருள்களையும், அப்

பொருட்களை விற்கின்ற வனிதாமணிகளையும் மாறி மாறிப் பார்த்து ரசித்துக் கொண்டே சென்றான். பொருள்களின் விலையோடு பூங்கொடிகளின் அழகையும் மதிப்பிட்டு, அவை இரண்டுக்குமுள்ள வித்தியாசத்தை, தன் மனமாகிய தராசில் எடை போட்டு ஏளனம் செய்தான். கோலாகல வாழ்விலே ஊறிப் போன கோமானுக்கு, கோமள வல்லிகளோடு குலாவத் தானா தெரியாது!

பல கடைகளைப் பார்வையிட்ட பின், வைரக் கடை ஒன்றினுள் நுழைந்தான் குர்ரம். விதவிதமான வைரங்கள் அங்கே காணப்பட்டன. வெவ்வேறு நாட்டுக் கமலங்கள் அக்கடையை அழகு செய்தன. ஒவ்வொரு வைரமாக எடுத்துப் பார்த்து, அவைகளின் விலையை மதிப்பிட்டுக் கொண்டிருந்த இளவரசரின் பார்வை வழக்கம்போல், அக்கடைக் குரியவளான அழகியின்மேல் பாய்ந்தது. அப்பேரழகியைக் கண்டதும் குர்ரம் ஆச்சரியத்தால் மலைத்துப் போனான்! அவ் அழகி வேறு யாருமல்ல, வடிவழகி **மும்தாஜ் பேகம்** தான்!

இளவரசன் குர்ரம் எத்தனையோ வடிவழகிகளைக் கண்டிருக்கிறான்; ஆனால், மும்தாஜைப் போன்ற ஒரு பேரழகியை அவன் அதுவரைக் கண்டதில்லை. 'சிறந்த சிற்பியின் கைத் திறனால் உருவான சிங்காரப் பதுமையோ; திறமை மிகுந்த கலைஞனின் கற்பனையால் தீட்டப்பட்ட ஒப்பற்ற ஓவியமோ!' என ஆச்சரியப் பட்டான் அவ்விளவரசன். இமை கொட்டாமல் அவ்வழகியைப் பார்த்தான். கோமகனின் காமப் பார்வையினை அறிந்து கொண்ட கட்டழகி, "விலையற்ற கமலங்கள் இதோ, இங்கே இருக்க, என் முகத்தைப் பார்க்கிறீர்களே!" என்று குறும்பாகவே கேட்டாள்.

"ஆம்; உன் முகத்தில் தான் இருக்கின்றன இரு கமலங்கள். இதோ, இங்கிருப்பதாக நீ கூறும் இந்தக் கமலங்கள் இருக்கிறதே, அவைகளுக் கெல்லாம் விலை

உண்டு, 'மதிப்பு' உண்டு; ஆனல், உன் முகத்தின் வைரங்கள் விலையற்றவை, மதிப்பற்றவை," எனக் கூறிய வாறு, கடைக் கண்ணுல் அந்தக் கனகாங்கியைப் பார்த்தான் இளவரசன் சூர்ரம்.

"என் முகத்தில் வைரங்களா?!"—ஒன்றும் புரியாத வளாய் ஆச்சரியத்தோடு கேட்டாள் மும்தாஜ்.

"ஆம் பெண்ணே, உன் முகத்தில் தான் மின்னு கின்றன வைரங்கள்—விலை நிர்ணயிக்க முடியாத வைரங் கள். அதோ என்னை விழுங்கி விடுவதைப் போல், என்னை உற்று நோக்கும் உன் கரிய விழிகளிருக் கின்றனவே,அவை இரண்டும் இருகமலங்கள்! அவைகளைத் தான் நான் கூறினேன் விலையற்ற வைரங்கள், என்று. அது மட்டுமல்ல, அவைகள் மதிப்பிட முடியாத மாணிக் கக் கற்கள்!" என்று தன் கள்ளப் பார்வையை அந்த எழிலரசியின் மேல் வீசினுன் சூர்ரம்.

விஷயத்தை ஒருவாறு புரிந்து கொண்டாள் மும் தாஜ் பேகம். அப்போது அவள் முகம் முழுவதும் சிவப் பேறி கோவைப் பழம் போல் காட்சியளித்தது. அதைக் கண்டு ரசித்து ஆனந்த மடைந்தான் அந்தப் பெண் வேட்டைக்காரன்.

அரச உடையிலே காணப்பட்ட சூர்ரமைப் பார்த்த உடனே, அவன் இளவரசனுகத் தானிருக்க வேண்டு மென யூகித்துக் கொண்டாள் மும்தாஜ். மேலும், சூர்ரம் அக்கடையினுள் நுழைந்ததும், அப்போது அங்குக் கூடியிருந்த இளைஞர் சிலர், "இளவரசர் வருகிருர், இளவரசர்" என்று கூறிய வண்ணம் அவ்விடத்தை விட்டு நழுவி விட்டதை மும்தாஜ் கவனித்தாள். ஆக இதன் காரணத்தாலும், சூர்ரமை இளவரசன் என அறியலானுள் அவ்வழகு நங்கை.

வந்தவன் இளவரசன் என்று அறிந்த பிறகு— அந்த இளவரசனே தன்னிடம் மறைபொருள் வைத்து மனம் விட்டு மகிழ பேசுகிருன், என்று அறிந்த பிறகு— தன் கைச்சரக்கினை அவனிடம் காண்பிக்கத்தானே

வேண்டும், என்று அவளது 'மங்கை மனம்' இடித்துக் கூறிற்று. அடுத்த விநாடியே ஆரம்பித்து விட்டாள் தன் குறும்புத் தனத்தை!

"உங்களுக்கு வேண்டியது வைரம் தானே?" என்ருள் வந்திருப்பவன் இளவரசன் என்று அறியாதவளைப் போல.

"எனக்கு வேண்டியது வைரம்தான்; ஆனல், இந்த வைரமல்ல; சாதாரண வைரங்களை விலை கொடுத்து வாங்கும் ஏமாளியல்லடி பெண்ணே நான்," என்ருன் இளவரசன்.

"சாதாரண வைரங்களுக்கில்லாத ஒரு தனிச் சிறப்பினைப் பெற்றிருக்கும் வைரத்தை வாங்க நினைக்கிறீர் போலும்?"

"ஆம்; அப்படித்தான்"—இறுமாப்புடன் கூறினன் இளவரசன் குர்ரம்.

அவன் கூறிய மொழிகளைக் கேட்ட மும்தாஜ், தனியாக ஒரு புறத்தில் மறைத்து வைத்திருந்த பேழையொன்றை எடுத்து, அதிலிருந்த வைரக்கல்லினை இளவரசன் கையில் கொடுத்தாள்.

வனிதாமணி தந்த அந்த வைரம் சுடர் விட்டுப் பிரகாசிக்க வில்லை. திருப்பித்திருப்பி அதனைப் பார்த்தான்; மங்கலாகவே அது காணப்பட்டது. அலட்சியப் பார்வையை அதன் மீது வீசினன் குர்ரம். மட்டரகமான வைரம் என அவன் மதித்தான்.

"இதற்குப் பெயர் வைரம் என்று நீ பெயர் சூட்டியிருக்கிருய் போலும்!" என்று குறும்பாகக் கேட்டான் இளவரசன்.

"ஏன்? வைரத்திற்கு என்ன?" என்ருள் எழிலரசி.

"இதன் தரம் மகா மட்டமாயிருக்கிறதே?"

"இதன் தரத்தை அறிய வேண்டுமாயின், இதனை வாயில் போட்டு சுவைத்தால் தான் தெரியும்," என்று கூறி, தன் தலையைத் தாழ்த்திக் கொண்டாள் மும்தாஜ்.

மூம்தாஜ் கூறியதை வெறும் கேலிச் சொற்கள் என எண்ணிய குர்ரம், அவளைப் பார்த்து, "பெண்ணே, நீ அழகி மட்டுமல்ல, அலங்காரி, அகங்காரி, ஆணவக் காரியுங்கூட!" என்ருன்.

"எதைக் கண்டு கூறுகிறீர்?" என்று கேட்டாள் வடிவழகி.

"வைரத்தை வாயில் மோட்டு சுவைக்கச் சொல்லு கிருயே?"

"இல்லை பிரபு, நான் சொல்வதைப் போல் அதை வாயில் போட்டுத்தான் பாருங்களேன்!" என்ருள் மூம்தாஜ் மிக்க பணிவுடன்.

அவள் கூறியபடி அவ்வைரத்தை வாயில் போட்டு சுவைத்தான் குர்ரம். இனிமையான உமிழ் நீர் அவன் வாயில் சுரப்பதை உணர்ந்தான். இளவரசனின் முகம் மலர்ந்து விரிந்தது.

"எப்படி இருக்கிறது இளவரசே, வைரம்?" என்று நயமாக வினவினுள் நங்கை.

"இனிக்கும் வைரம் ஒன்று உலகில் இருப்பதாக இன்று தான் அறிந்தேன் பெண்ணே!" என்று அசடு வழிய கூறினர் இளவரசர்.

"ஐயையோ! ஏமாந்து விட்டீர்களே!!" எனக் கூறி கை கொட்டி சிரித்தாள் சிங்காரி.

"ஏமாந்தேனு? நானு?"

"ஆமாம்; நான் தங்களிடம் கொடுத்தது கமலமல்ல, கற்கண்டு. கமலத்திற்கும் கற்கண்டுக்கும் வித்தியாசம் தெரியாத படி, அதனை வைரத்தைப் போல் செதுக்கி உமக்குத் தந்திருக்கிறேன். மன்னிக்க வேண்டும்," என்று, தன் கையைப் பிசைந்தாள் வடிவழகி மூம்தாஜ்.

என்ன நேருமோ, ஏது சொல்வானே இளவரசன், எனப் பயந்த பைங்கிளியைப் பார்த்து, புன்னகை யொன்றை லேசாக அவள் மீது வீசி விட்டு, "பெண்ணே, நீ கொடுத்த வைரமே இவ்வளவு இனிக்

கும் போது, வைரத்தை யளித்த வனிதையின் கரங்கள் எவ்வளவு இனிமையாக இருக்குமோ!! அந்தக் கரங்களைக் கொண்ட கட்டழகி எத்தனை இனிமை வாய்ந்தவளாக இருப்பாளோ, என்று என் இதயம் கூறுகிறதடி" என்று காதல் கனிந்த பார்வையை அந்தக் கனகாங்கியின் மேல் வீசினன் வருங்கால மன்னன்—குர்ரம்.

இருவர் கண்களும் ஒன்றோடொன்று சந்தித்தன. அவைகள் ரகசியமாக சற்று நேரம் ஏதேதோ பேசிக் கொண்டன.

தூண்டிலில் சுரு ஒன்று சிக்கிக் கொண்டது!

* * *

2

அரண்மனை சென்றதும், தன் மனதை வேறு பக்கமாகத் திருப்ப முயன்ருன் முகலாய இளவரசன் குர்ரம். ஊண் மீது செல்ல வில்லை அவன் மனம். உறக்கம் கொள்ள வில்லை அவனது கண்கள். அவன் கண்ணிலே, வேடிக்கை காட்டி விளையாடிக் கொண்டிருந்தாள் கட்டழகி மும்தாஜ். அவளை மறக்கவே முடிய வில்லை அவனல்.

மும்தாஜ் கதியும் அதேதான்!

அவளது பிஞ்சு மனத்தில் இளைய கோமானின் கம்பீரத் தோற்றம் நிழலாடிக் கொண்டிருந்தது. மிடுக்கான உருவமும், துடுக்கான பேச்சும் அவளுடைய இளம் உள்ளத்தைக் கவர்ந்து விட்டது. எதைக் கண்டாலும் இளவரசனின் திரு உருவமே அவள் கண்ணில் படுவதாக உணர்ந்தாள். அவள் மனம் இருப்புக் கொள்ள வில்லை. சுருங்கச் சொல்லின், மும்தாஜின் மனம் ஒரு போர்க் களமாகவே மாறி விட்டது எனலாம். கடைசியில் இச் செய்தியைத் தன் தந்தையிடம் தெரிவிப்பது,

என்று முடிவுறுத்தினள். மனதிலுள்ள பாரத்தை மற்றவரிடம் கூறினால்தான், சற்று குறையுமல்லவா!

மறுநாட் காலை, விடிந்ததும், தன் தந்தையிடம் கூறினள் தன் மனதிலுள்ளதை, மும்தாஜ்.

ஆசப்கான். நூர்ஜஹானின் உடன் பிறந்த சகோதரன். பேரழகி, பேரரசியாக மாறியதும், தன் உற்றார் உறவினரை அரண்மனையில் பெரும் பதவிகளில் வைத்தாளல்லவா. அந்த வகையிலே தான் ஆசப்கான் அமைச்சர் பதவி பெற்றான். அவனுடைய அருமை மகள் தான், இந்த வட நாட்டு வடிவழகி மும்தாஜ் பேகம்.

இளவரசன் குர்ரம் தன்னைக் காதலிப்பதாகவும், தன்னையே இளவரசர் மணந்து கொள்வதாக வாக்குறுதி யளித்திருப்ப தாகவும் தன் தந்தையிடம் கூறினள் மும்தாஜ். இச் செய்தியைக் கேட்ட ஆசப்கானின் உள்ளம் மலர்ந்தது. பட்டத்திற்குரிய இளைய கோமானை மணப்பதால், தன் மகள் மகாராணியாகி விடுவாள், என மகிழ்ச்சியால் அவன் மனம் பொங்கிற்று; உடல் பூரித்தது.

பேரரசர் ஜஹாங்கீர் மது வெறியில் தன் அறிவை அடகு வைத்திருந்த நேரமாகப் பார்த்து, இச் செய்தியை மன்னர் பெருமானிடம் கூறினன் ஆசப்கான். அரச பெருமானும், வாய் மூலமே, 'சரி' என்று 'சம்மதம்' தெரிவித்து விட்டார்.

திருமணத்திற்கு நாள் குறிப்பிடப் பட்டது. நூர்ஜஹான் அதைக் கண்டு பொருமினள். அவளது பொறாமையுள்ளம் வேலை செய்தது. தன் மகள் குர்ஷித்தைக் குர்ரமுக்குக் கொடுத்து, மகளை மகா ராணியாக்க திட்டமிட்டுக் கொண்டிருந்த நேரத்தில், காத்திருந்தவன் பெண்ணை நேற்று வந்தவன் அடித்துப் போனதைப் போல, திடீரென மும்தாஜுக்கும் குர்ரமுக்கும் திருமணம் என்ற செய்தியினைக் கேட்டதும் பேரரசி நூர்ஜஹானின் தலை சுழன்றது. தனது தந்திரங்கள் அனைத்தும் பணயம் வைத்துப் பார்த்தாள் அந்தத் திரு

மனத்தை நிறுத்த. ஆனால், அவளது எண்ணம் ஈடேற வில்லை. ஆசப்கானை எதிர்க்க அவளுடைய 'தந்திர சக்தி' பயன்பட வில்லை. கடலில் கரைத்த காயமாகி விட்டது அவளது தந்திர யுக்திகள். எனினும் தன் எண்ணத்தை வேறு வழியில் நிறைவேற்றிக் கொண்டாள்—ஜஹாங்கீரின் கடைசி மகனை ஷாரியருக்குத்தன் மகளை மணம் முடிக்கும் முறையில்.

* * *

காலம் சுழன்றது!

முகலாய சாம்ராஜ்யத்தில், என்றும் நிகழும் '**அரசுரிமை போட்டி**' நிகழ்ந்தது—வழக்கம் போல.

அப் போட்டியில் இரு பலத்த கைகள் கலந்து கொண்டன. இளவரசன் குர்ரம் ஒரு புறம்; பேரரசி நூர்ஜஹான் மற்றோர் புறம்!

தன் மருமகன் ஷாரியாருக்காக சூழ்ச்சிகள் பல வற்றைக் கையாண்டாள் பேரழகி நூர்ஜஹான். முறைப்படி குர்ரம்தான் ஜெயிக்க வேண்டும் என்ற எண்ணத்தில், தன்னுடைய மருமகனுக்காக வேலை செய்தான் ஆசப்கான்.

போட்டி பலமாக இருந்தது. எனினும், நூர்ஜஹானின் கையே பலத்திருந்தது—பதவியில் அப்போது நூர்ஜஹான் இருந்த காரணத்தால்.

அரசுரிமைப் போட்டியின் காரணமாக சில பல கலகங்கள் பிறக்கலாயின. இளவரசன் குர்ரம் தான் அக்கலகங்களைத் தூண்டி விட்டான் என்று அவன் மீது குற்றஞ் சாட்டப் பட்டது.

தான் படைத்திருந்த பேரழகின் காரணமாக வலிமை மிக்க விரிந்த சாம்ராஜ்யத்தைத் தன் உள்ளங் கையிலே அடக்கி வைத்திருந்த நூர்ஜஹானுக்கு, சிறு சிறு கலகங்களை யடக்கி, அவைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பது தானா பெரிய காரியம்!

கலகத்திற்குக் காரணமாயிருந்த குர்ரமை, எங்கு கண்டாலும் கொன்று விடும்படி தனது ஒற்றர்களுக்கு ஆணையிட்டிருந்தாள் அழகு சுந்தரி. ஆகவே, குர்ரம், தலை மறைவாகவே வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது.

* * *

ஒரு நாள்! நள்ளிரவு!!

தன் காதலி மும்தாஜுடன், கட்டிலறையில், இன்பத்தின் எல்லையை அடைந்து கொண்டிருந்தான் குர்ரம்.

திடீரென்று அமளி துமளி ஏற்பட்டது அரண்மனையெங்கும். 'திருடர்கள், கொலை காரர்கள் பிடியுங்கள்' என்ற கூச்சல் கிளம்பிற்று அரண்மனையே அதிரும்படி.

இக் கூச்சலைக் கேட்ட குர்ரம், கட்டிலை விட்டிறங்கி உடைகளை யணிந்து, வீரவாளைத் தன் இடுப்பில் கட்டினன். மும்தாஜ் அதைக் கண்டு நடுங்கினள்.

"கண்ணளா, வெளியே போகாதீர்" என்று அவனைத் தடுத்தாள் மும்தாஜ். அவள் கூறிய வாய் மூடுவதற்குள், யாரோ கதவை யிடிக்கும் ஓசை கேட்டது. மறைவான அறையில் மும்தாஜ் பேகத்தை விட்டுக் கதவைத் தாளிட்டுக் கொண்டு, "யாரது?" என்றான் இளவரசன்.

"நான் தான் இளவரசே, கதவைத் திறவுங்கள் சீக்கிரம்," என்று அவசர அவசரமாகக் கூறினன் ஆசப்கான்.

கதவைத் திறந்தான் குர்ரம்; ஆசப்கான் உள்ளே சென்று கதவைத் தாளிட்டுக் கொள்வதற்குள் ஒற்றர்கள் அறைக்குள் நுழைந்து விட்டனர். இரு தரத்தாருக்கும் பலத்த போர் நிகழ்ந்தது. போர் புரிவதில் கைதேர்ந்த குர்ரம் இளவரசனும் ஆசப்கானும் சேர்ந்து அவ்வீரர்களை முறியடித்ததில் ஆச்சரிய மென்ன!

நிலைமையை ஒருவாறு சமாளித் தானதும், தன் மனைவி மும்தாஜை யழைத்துக் கொண்டு வெளியே வந்தான் குர்ரம், ஆசப்கானுடன். இரண்டு குதிரைகள் அங்கே தயாராகக் காத்திருந்தன.

ஆசப்கான், இளவரசனை மட்டும் தனியே யழைத்துச் சென்று, "தக்காணத்திற்கு உடனே புறப்பட்டுச் செல்" என்று காதோடு காதாய்க் கூறினன்...... இளவரசன் சற்றுத் தயங்கினன் அது கேட்டு.

"நான் தக்காணத்திற்குச் சென்றால், என் கண் மணி மும்தாஜின் கதி என்ன ஆவது?" என்றான் குர்ரம்.

"அவளைப்பற்றி நீ கவலைப் படாதே; மும்தாஜை நான் கவனித்துக் கொள்கிறேன் உன்னை நீ காப் பாற்றிக் கொள்," என்று கூறி இளவரசனைப் பரியின் மீதமர்த்தினன் ஆசப் கான். கவலை தோய்ந்த முகத் துடன் மும்தாஜை நோக்கினன் இளவரசன் அவன் கண்களில் நீர் மல்கியிருந்தது. அதைக் கண்ட வடி வழகி அவன் கண்ணீரைத் துடைத்து நல்லாசி கூறி வழியனுப்பி வைத்தாள்.

பிரியாமல் பிரிந்தான் குர்ரம். குதிரை மறையும் வரை அவனையே உற்று நோக்கிக் கொண்டிருந்தனர் மும்தாஜ் பேகமும், ஆசப் கானும். குதிரையும் இருட் டோடு இருட்டாய் மறைந்துவிட்டது. இளவரசன் சென்றதும், மும்தாஜைத் தன் இருப்பிடத்துக்கு அழைத்துச் சென்றான் ஆசப்கான்.

3

தன் மகள் மும்தாஜை மிக மிக ஜாக்கிரதை யாகத் தான் பாதுகாத்து வந்தான் ஆசப் கான். நூர்ஜஹானின் புலிப் பார்வையினின்றும் தப்புவது அவ்வளவு சுலபமான காரியமா என்ன!

இளவரசன் குர்ரம் தப்பிச் சென்ற இரண்டாம் நாள், ஆசப் கான் வீட்டின் முன் குதிரைப் பட்டாளம் தோன்றி அவ் வீட்டைச் சுற்றி வளைத்துக் கொண்

டார்கள். வீரர்களைக் கண்டதும் பயமிகுதியால் ஓடி யொளிந்தனர் பெண்மணிகள். எவருக்கும், எவ்விதத் துன்பமுமளிக்காமல், மும்தாஜை மட்டும் கைது செய்து கொண்டு வரும்படி அரசியார் ஆணையிட்டிருந்தாள். ஆகவேதான், கோஷாப் பெண்களை ஒன்றுஞ் செய் யாமல், மும்தாஜ் பேகத்தை மட்டும் கைது செய்தனர் வீரர்கள்.

"ஐயா, என்னை ஏன் கைது செய்தீர்கள்? யாருக்கு என்ன தீங்கு செய்தேன் நான்?" என்று கண்ணீர் விட்டுக் கூறினாள் கட்டழகி மும்தாஜ்.

"உங்கள் கண்ணீரைக் கண்டு, கருணை காட்ட அல்ல நாங்கள் இங்கு வந்தது; எங்கள் கடமையை நிறைவேற்றவே வந்தோம்," என்று கூறிய வண்ணம், அவளை வெளியே அழைத்துச் சென்றனர் அரசியா ரின் ஆட்கள்.

"என்னை எங்கே இட்டுச் செல்கிறீர்கள்?" எனக் கெஞ்சினாள் கோமளாங்கி.

"அரண்மனை விருந்தாளியாக்கவே உங்களை யழைத்துச் செல்கிறோம். பேசாமல் நடவுங்கள்" என்று இறுமாப்புடன் கூறி யழைத்துச் சென்றனர் அவ் வீரர்கள்.

* * *

சிறையிலே அந்தச் சிங்காரி அடைக்கப்பட்டாள். இன்பத்தினூடே வளர்ந்த இன்பவல்லி, இன்று இரும் புக் கம்பிகளை எண்ணிக் கொண்டிருக்க வேண்டி வந்து விட்டது. வேதனையறியாத வனிதாமணி, இன்னலைக் காணாத இன்ப ராணி சிறைச்சாலையிலே வாடினாள்.

பட்டினி இருந்தறியாதவள், பசி நோய் தெரியா தவள்; பாவம்! பத்து நாட்களாகப் பட்டினியும் பசியு மாக வேதனைப் பட்டாள். எவ்வுயிர்க்கும், எவ்விதத் தீங்கும் செய்தறியாத—தீங்கு செய்ய மனத்திலும் நினைத்தறியாத — மும்தாஜ், உண்ண உணவின்றி வாட்ட முற்றாள்.

அநீதியின் சிகரமாக—அக்ரமத்தின் அவதாரமாக உள்ள அயோக்கிய சிகாமணிகள் அணுவளவும் துன்பமின்றி வாழ முடிகிறது. பாவமே செய்தறியா நிரபராதிகள், படுந் துன்பத்திலே உழலுகிருர்கள். என்ன உலகமடா!

பத்து நாட்களாகப் பட்டினியால் பரிதவிக்கும் பாவைக்குப் பதிஞேரும் நாள் உணவளிக்கப்பட்டது; அதுவும் அரச குடும்பத்தினருக் களிக்கப்படும் அரசாங்க உணவு. பசிதீர அதனை உண்டாள் பாவை. அரச குடும்பத்தினர் எவராவது சிறைச்சாலைக்கு விஜயம் செய்வதா யிருந்தால் தான் சிறையி லுள்ளோருக்குச் சிறந்த உணவு பரிமாறப்படும், என்ற உண்மையை மும்தாஜ் அறிவாள். ஆகவே, பதிஞேரும் நாள் தனக் களிக்கப்பட்ட அறுசுவை யுண்டிக்குக் காரணம், யாராவது அரச குடும்பத்தினர் சிறைக்கு விஜயம் செய்வார்கள், என யூகித்துக் கொண்டாள் மும்தாஜ்.

எழிலரசி எண்ணியதைப் போல், அன்று மாலை, சிறைச்சாலையைப் பார்வையிடும் பொருட்டு, அரசியாரின் அருமை மகள் **குர்ஷித்** தேவியார் விஜயம் செய்யப் போவதாக அறிவிக்கப் பட்டதைக் கேள்வியுற்ருள் மும்தாஜ்.

அன்று மாலை! 'அரசிளங் குமாரி வருகிருர்' என்று அறிவித்தான் 'பராக்' கூறுபவன்.

வாளேந்திய வீரர் முன்னே செல்ல, ஆணவத்தின் அணிகலமாக, அன்ன நடை போட்டுக் கொண்டு வந்தாள் குர்ஷித்!

வந்த சிங்காரி சிறையில் வாடும் கைதிகளைப் பார்வையிடவில்லை; பரட்டைத் தலையும், குழிவிழுந்த கண்களும் எலும்பும் தோலுமான உடலையும் கொண்ட சிறைக் கைதிகளைக் காண விரும்பவில்லை அந்தக் கனகாங்கியின் கமலக் கண்கள்!

வடிவழகி மூம்தாஜ் பேகத்தைப் பார்க்கவே, அந்த ஒய்யாரி வந்தாள். வந்தவள் நேராக, மூம்தாஜ் அடை பட்டுக்கிடந்த அறைக்குத்தான் சென்றாள். சிறைக் கம்பிகளுக்கப்பால் நின்று கொண்டு, தன் கவனத்தை எங்கோ செலுத்திக் கொண்டிருந்த சோக வல்லியை நோக்கி, 'மூம்தாஜ்', என்று அதிகாரம் கலந்த குரலில் அழைத்தாள் ஆணவப் பேய் பிடித்த குர்ஷித். அதைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள் மூம்தாஜ்.

புன்னகையைப் பலவந்தமாக வரவழைத்துக் கொண்டு "அருகில் வா" என சமிக்கை செய்தாள் சாகஸக் கள்ளி. கண்ணீரும் கம்பலையுமாகக் கம்பிக் கருகில் வந்து நின்றாள் மூம்தாஜ். குர்ஷித்தைக் கண்டதும், அவளுக்கு அடக்க முடியாத அழுகை பீறிட்டு வந்தது. வழிந்தோடும் கண்ணீரைத் துடைக்காமலே, "குர்ஷித், நான் என்னம்மா தவறு செய்தேன்? குற்ற மற்ற நிரபராதியைக் கூண்டிலடைப்பது நியாயமா? நீதியா?" என்று கண்கலங்கக் கூறினாள், குற்றம் புரியாத நிரபராதிகள் கூட, சில பல சமயங்கள் சட்டத் தின் பெயரால் தண்டிக்கப் படுகிறார்கள், என்ற உண்மையை அறியாத உத்தமி.

மூம்தாஜ் கூறியவற்றைக் கேட்ட குர்ஷித், கம்பி களின் வழியாகத் தன் கரத்தை விட்டு மூம்தாஜின் கூந்தலைத் தடவினாள். மூம்தாஜுக்கு மேலும் மேலும் அழுகை வந்தது. பருவ முறுக்கிலே பூரித்து நிற்கும் அவளது மார்பகம் விம்மி விம்மி எழுந்தது.

தன் புலம்பலுக்குச் சற்றும் செவி கொடுக்காத சாகசக் காரியைப் பார்த்து, "அம்மா, நான் இப்படிக் கண்ணீர் விட்டுக் கதறுவதெல்லாம், என் துயருக்காக அல்ல; 'இளவரசரின் மனைவி ஒரு காரணமுமின்றி சிறையி லடைக்கப்பட்டாள்' என்ற இழி சொல் வர லாற்றுச் சுவடியிலே பதிந்துவிடுமே, என்றுதான்

வருந்துகிறேன்," என்று கூறிய வண்ணம் கண்ணீர் சொரிந்தாள் காரிகை.

மும்தாஜ் மொழிந்த மொழிகளைக் கேட்டு, மனம் வருந்துபவளைப் போல் பாவனை காட்டினுள் பசப்புக் காரி. "மும்தாஜ், வருந்தாதே; துன்பமும் இன்பமும் வாழ்க்கையில் மாறி மாறித்தான் வரும். இன்பத்தைக் கண்டு மகிழ்வதைப் போல், இன்னலையும் வரவேற்பது தான் புத்திசாலித்தனம் — அறிவுடைமையுங் கூட. அமைதியைத் தரும் அம்புலியைப் பாரேன்; வளர்வதும் தேய்வதுமாகத் தானே இருக்கிறது? இதிலிருந்தே தெரியவில்லையா, 'வாழ்வு சில நாள், தாழ்வு சில நாள்' என்று?" இவ்வாறு வேதாந்த போதனை செய்து அவள் கண்ணீரைத் துடைத்தாள், இரும்பு இதயம் படைத்த குர்ஷித்.

'வெளுத்த தெல்லாம் பால்' என்று எண்ணும் வடிவழகி, குர்ஷித் கூறிய போதனை மொழிகளைக் கேட்டு ஆறுதலடைந்தாள். ஆனல், சிறையினின்றும் வெளியே வந்ததும், அந்தப் பாதகி, சிறைக் காவல ரிடம் கூறியது என்ன தெரியுமா? "சிறைவாசஞ் செய் யும் அந்தச் சிறுக்கிக்குச் சிங்கார உடைகளை ஏன் அளித்தீர்கள்? இளவரசன் மனைவி என்ருலும் கூட, சிறையிலிருக்கும் வரை அவள் ஒரு சாதாரணக் கைதியேதான். ஆகவே, எல்லாக் கைதிகளைப் போல் தான் அவளையும் நடத்தவேண்டும். தெரிகிறதா?" என வீரக் கர்ஜனை புரிந்துவிட்டுச் சென்ருள் கருணையே இல்லாத காதகி.

4

நாட்கள் நகர்ந்தன!

காரிருளுக்குப் பின்னர் கோடிச் சூரியன் உதிக்காமலா போகும்? இருள் சூழ்ந்த இரவுக்குப் பின் நிச்சயம் காலை மலர்ந்துதானே ஆகவேண்டும்?

சுழன்றடிக்கும் சூறுவளி ஒய்ந்து, அமைதி நிலவும் காலம் நெருங்கிவிட்டது.

நூர்ஜஹானின் அருமை மகள் குர்ஷித், தன் கணவனைப் பறிகொடுத்து விட்டு, கைம்பெண்ணாக, வாழ்க்கை நடத்துகிருள். கசக்கி வீசப்பட்ட காட்டு மல்லிகை யாகிவிட்டாள் குர்ஷித். பெற்ற மனம் அதைக் கண்டு அலை மோதுகிறது.

மூகலாய சாம்ராஜ்யத்தின் பேரரசர் ஜஹாங்கீர், மரணப் படுக்கையிலே கிடக்கிருர். எந்த நேரத்திலும் அவரது 'ஆத்மா' அவர் பூத உடலைவிட்டுப் பறந்து விடும், என்ற அவல நிலை. மன்னர் உள்ள நிலையைப் பார்க்கும் போது, மகாராணியின் மனம் புழுங்காமலா இருக்கும்.

ஒரு புறம், கைம்பெண்ணாகக் காலம் கழிக்கும் தன் மகளின் பரிதாபமிக்க நிலை; மற்ருெரு புறம், சாவின் அணைப்பிலே அகப்பட்டுக் கொண்டு, மரணப் படுக்கையிலே நெளிந்து கொண்டிருக்கும் மன்னர் பெருமானின் சோகமிக்க நிலை. இந்த இரண்டுக்கு மிடையே, தன் பேராசைக் கோட்டை சரிந்துவிடுமோ' என்ற பயம்! ஆக இத்தகைய வேதனை தரும் நிலையிலிருந்த பேரழகி நூர்ஜஹானின் உள்ளத்தில் எண்ணற்ற எண்ணச் சுழல்கள், சுழன்றவண்ண மிருந்தன.

நூர்ஜஹானின் ஆணவக் கோட்டை ஆட்டங் கொடுத்து விட்டதையறிந்த, ஆசப்கான், தக்கசணத்தில்

தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டிருந்த தன் மருமகனும், இளவரசனுமான குர்ரமுக்குத் தகவல் அனுப்பி அவனை டில்லிக்குத் திரும்பும்படிச் செய்தான்.

டில்லி திரும்பிய குர்ரம் பக்கம் போர்வீரர்கள் பலர் சேர்ந்தனர். அந்தோ! நூர்ஜஹான் அனாதை யானாள்!

டில்லி வந்து சேர்ந்ததும், முதல் வேலையாக இளவரசன் செய்தது, நேரே சிறைச்சாலை சென்று, தன் அருமைக் கண்மணி மும்தாஜை விடுவித்ததுதான்.

* * *

காலச் சக்கரம் சுழன்றதைப் போல், யோகச் சக்கரமும் சுழன்றது.

குர்ரம் இப்போது இளவரசனல்ல; மணிமுடி தரித்த மன்னர் மன்னன். குர்ரம் என்ற அவனது பெயர் மறைந்தது. **ஷாஜஹான்** எனப் பெயரிடப்பட்டான்.

ஆம், ஷாஜஹான் என்ற பட்டப் பெயருடன் முகலாய சாம்ராஜ்யத்தின் மண்டலாதிபதியானான் குர்ரம்! அரியணையிலே ஷஜஹான் வீற்றிருக்க, அவனருகே வடநாட்டு வடிவழகி மும்தாஜ், அழகின் சிகரமாக அமர்ந்திருந்தாள். பல நாள் துன்பத்திற் குப் பின், எவரும் அடைய முடியாத 'இன்ப புரியை' அடைந்தனர் இளம் தம்பதிகள்.

ஆனல், இந்த இன்பபுரியிலே நெடுநாட்கள் அவர் கள் வாழ முடியவில்லை.

இருண்ட இரவு—அதற்குப் பின் பரவசந் தரும் பட்டப் பகல்—மீண்டும் பயங்கரமிக்க இருண்ட இரவு! இன்னலைத் தரும் துன்பம்—அதற்குப் பின் இன்னமு தூட்டும் இன்பம்—மீண்டும் இன்னல் தரும் துன்பம்!! என்னே இயற்கையின் சக்தி!

இருண்ட அமாவாசைக்குப் பின்னர், பிறைச் சந்திரன் வளர்ச்சியுற்று, பௌர்ணமி தினத்தன்று, பூரணஒளியுடன் வானவீதியிலே ஒய்யாரமாகப் பவனி

வரும் முழுமதி, வரவரத் தேய்ந்து மீண்டும் அமாவாசை தினத்தன்று இருண்ட வட்டமாகி விடுவதைப் போல் அமாவாசையிலிருந்து பௌர்ணமியாக மாறிய மும்தாஜின் வாழ்விலும், அமாவாசை தோன்றலாயிற்று. ஒளி பெற்றுத் திகழ்ந்த அவளது வாழ்வு திடீரென்று இருண்ட பாலைவனமாகிவிட்டது.

பூரண கர்ப்பிணியான மும்தாஜ் மரணப் படுக்கையிலே வேதனைப் பட்டுக்கொண் டிருந்தாள். அவளருகே கண்ணீரும் கம்பலையுமாக அமர்ந்திருந்தார ஷாஜஹான்.

"பருகக் கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள்," என்ருள் வடிவழகி மும்தாஜ். தங்கக் கோப்பை யொன்றில் தண்ணீரை யூற்றி அவளுக்குத் தந்தார் பேரரசர் ஷாஜஹான். நீரைப் பருகியபின் மிகக் கஷ்டப்பட்டுக் கொண்டே பேசலானுள் மும்தாஜ்.

"பதினெட்டு ஆண்டுகள் இன்பபுரியிலே என்னை உலவவிட்டு, 'இன்பத்தின் எல்லை இதுதான்' என எனக்குக் காட்டினீர்கள். கரையற்ற கடல் போன்ற செல்வக் குவியலில் என்னைப் புரள விட்டீர்கள். உலகம் கண்டு வியக்கும் முகலாய சாம்ராஜ்யத்தின் பட்டத்தரசி யாக்கினீர்கள். அரண்மனை வாழ்விலும் அரசபோகத்திலும் உழன்ற நான் இப்போது நிம்மதி யின்றி இறக்கப் போகிறேன், என்று நினைக்கும் போதுதான் அளவற்ற கவலையாக இருக்கிறது," என்று கண்ணீர்விட்டுக் கூறினுள் மும்தாஜ்.

அதைக்கேட்ட ஷாஜஹான் மனம் கலங்கினுர். "கண்ணே, நீ சாகமாட்டாய்; நான் இறந்த பின்னர் தான் உனக்கு மரணம் ஏற்படும். அதைரியப் படாதே," என்று கூறி அந்த அழகோவியத்திற்கு ஆறுதல் மொழிந்தார் அரச பெருமான்.

அப்போதும் ஆறுத லடையவில்லை மும்தாஜ். "இல்லை கண்ணுளா, நான் பிழைக்கமாட்டேன்.

கருவிலுள்ள குழந்தையின் அழுகுரலைத் தாய் கேட்டால், மரணம் சம்பவிக்கும், என்று பெரியோர் கூறக் கேட்டிருக்கிறேன். இன்று என் வயிற்றிலுள்ள குழந்தையின் அழுகுரலை நான் கேட்டேன். இனி என்னை நம்பாதீர்கள்,'' என்று கூறும்போது ஷாஜஹான் கண்களில் ஊற்றுப்போல் நீர் சுரந்தது! மும்தாஜ் மீண்டும் பேசினாள்:

"அன்பரே, இறக்கப் போகும் இந்த அபாக்யவதிக்கு தாங்கள் ஒரு 'வரம்' தரவேண்டும்,'' என்று கூறியவாறு, மன்னரின் கரங்களைப் பற்றினாள் மங்கை நல்லாள்.

"வரமா? என்ன வேண்டும்? கேள் கண்ணே.'' என்று மும்தாஜின் மலர்க்கரங்களை வருடினார் வேந்தர்.

"நான் இறந்தபின், இவ்வுலகம் உள்ளவரையில், உலகோர் கண்டு அதிசயிக்கும்படியான **நினைவுச் சின்னம்** ஒன்று என் பெயரால் எழுப்பித்தர வேண்டும். இரண்டாவது, எனக்குப் பின் எந்த மங்கையையும் நீர் மணந்து கொள்ளக்கூடாது. இவை இரண்டும் தான் நான் தங்களிடம் கோரும் கோரிக்கை—இந்த ஏழை வேண்டும் வரம்......என்ன செய்வீர்களா தாங்கள்?''—மூச்சுத் திணறிய வண்ணம் கூறி முடித்தாள் மும்தாஜ்.

"இவ்வளவுதானே கண்ணே, அப்படியே ஆகட்டும். நீ கோரும் கோரிக்கைகள் இரண்டையும் நான் நிறைவேற்றுகிறேன், இது சத்தியம்,'' என்று அவள் கரங்களைப் பற்றி உறுதியளித்தார் வேந்தர் பெருமான்.

மன்னரின் உறுதி மொழியைக் கேட்டதுதான் தாமதம், மும்தாஜ் பேகத்தின் மனம் குளிர்ந்தது; அதே நேரத்தில் அவளது பொன்னுடலும் குளிர்ந்து விட்டது.

அப்போது மணி இரண்டாயிருக்கும்—இரவு இரண்டு. கடைசி முறையாகப் பேரரசர் ஷாஜஹான் கையால் கொஞ்சம் தண்ணீர் பருகினுள் மும்தாஜ். அவ்வளவுதான், அதற்குமேல் அவள் பேசவில்லை. "வையகமே, வருகிறேன்." என்று கூருமல் கூறிச் சென்றுவிட்டாள் **வடிவழகி மும்தாஜ் பேகம்.**

பர்ஹான்பூரிலிருந்து, ஆக்ராவிற்குக் கொண்டு போகப்பட்டது அந்த வடிவழகியின் உடல்!

அழகு நகர் ஆக்ராவிலே, யமுனை நதி தீரத்திலே, அகிலமே வியக்கும் அளவிலே, அற்புத மண்டபம் ஒன்றைக் கட்டி முடித்து, அதிலே அடக்கம் செய்தார் ஷஜஹான், தன் அருமைக் காதலி மும்தாஜ் பேகத்தை. மண்டபம் கட்டுவதற்கு ஐந்து மாதங்கள் ஆயின. இந்த ஐந்து மாதங்களும், மும்தாஜ் வைக்கப் பட்டிருந்த சவப் பெட்டியைத் தன் பக்கத்திலேயே வைத்துப் பாதுகாத்தார் பேரரசர். என்னே, அவரது காதல் தன்மை! இதுவன்றே உண்மைக் காதலின் உயர்வு!

பேரழகு படைத்த காரணத்தால், முகலாயப் பேரரசியான மும்தாஜ் பேகம், ஷாஜஹானை மணந்து பதினெட்டாண்டுகள் இன்ப வாழ்வு நடத்தினுள். இந்தப் பதினெட்டு ஆண்டுகளில் பதினைந்து குழந்தைகளை அவள் ஈன்றெடுத்தாள். கடைசியில் 'உலகமே விடை பெற்றுக் கொள்கிறேன்' என்று உலகைவிட்டுப் பிரிந்து விட்டாள்.

அந்த வடிவழகியின் உடல்தான் உலகைவிட்டுப் பிரிந்ததேயன்றி உலகம் அழிந்தொழியும் வரை அவளது நினைவுச் சின்னமாகிய அந்த **'தாஜ் மஹால்'** அழியாதே!

சரித்திரப் பிரசித்தி பெறத்தக்க செயல் அவள் ஏதும் செய்யாவிட்டாலும், யமுனை நதிக்

கரையிலே கம்பீரமாகத் தோற்றமளிக்கும் 'தாஜ் மஹால்' சரித்திரப் பிரசித்தி மட்டுமல்ல; உலகப் பிரசித்தி பெற்றுவிட்டதே!!

வீரமங்கை ரஜியா

அடிமை வம்சத்து அரசிளங்குமரிதான் இந்த வீரமங்கை ரஜியா.

அல்டாமிஷ் சுல்தான் என்பவனுக்குப் பின்னர் அவன் மைந்தன் ருக்றுதீன் நாடாளும் உரிமை பெற்றான்; எனினும், அதிக நாட்கள் அவன் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கவில்லை.

ருக்றுதீன் மாபெரும் குடியன். நடனமாடும் கனிரைாணிகளின் நண்பன். அரண்மனையிலே பிறந்து, அரசபோகத்திலே ஊறித் திளைத்துப் போன ருக்றுதீன், மதுவும் மங்கையுமே தன் மனத்தில் கொண்டு பூஜித்தான்! ஆடிப் பாடும் ஆடலழகிகள், மதுக்கிண்ணமேந்தும் மங்கையர், இன்பமூட்டும் இன்ப வல்லிகள் அவனைச் சுற்றி சதா வட்டமிட்டுக் கொண்டிருக்க வேண்டும்; அதைக் கண்டு அவன் களிப்படைய வேண்டும். இதைத்தான் அந்த இன்ப சாகரன் விரும்பினன்.

நாட்டைப் பற்றி அவன் கவலை கொள்ளவில்லை. மக்களைப் பற்றி அவன் மனம் நினைக்கவில்லை. ஆட்சியைப் பற்றியும் அவன் சிந்திக்கவில்லை. ஆனல் அவனது பேச்சிலே, மூச்சிலே, எண்ணத்திலே எந்த நேரத்திலும், மயக்கும் மங்கையரின் திருவுருவம் தான் நிழலாடிக் கொண்டிருந்தது.

பேரரசை நடத்திச் செல்லும் பொறுப்பினை ருக்றுதீன் அறவே மறந்துவிட்டான். ஆகவே, அவனது விதவைத் தாயார்தான் அரசங்க அலுவல் களைக் கவனித்துவந்தாள். எப்போதாவது அமைச்சர்

மார், அரசனோடு ஆலோசனை நடத்தவேண்டுமாயின், அவனது அந்தப்புரத்தின் வாயிலில் நின்று, அகோரத் தவமிருக்கவேண்டும். ஆகவே, ஆட்சியை நடத்தும் அமைச்சர்களுக்கே அரசரின் அக்ரமமும், அநீதியுமான போக்கும் பிடிக்காமல், அவனுக்குத் தெரியாமலேயே, அவன் பின்னால் அழிவுக்குழி தோண்டலாயினர். சந்தர்ப்பத்தைத்தான் அவர்கள் எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர். அமைச்சர்கள் மிக்க ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்த அரிய வாய்ப்பும் கிடைத்துவிட்டது. அதன் விளைவு, ரூக்றுதீன் அரியாசனத்தைவிட்டு இறக்கப்பட்டு, அவனது தங்கை **ரஜியா** சுல்தானாவாக ஆக்கப்பட்டாள்!

ரஜியா ராணியான செய்தி கேட்டு டில்லி மாநகரமே புகழ்ந்தது. அக்ரமத்தின் அவதாரம் ஆட்சியினின்றும் நீங்கியதே நாட்டு மக்களின் மகிழ்ச்சிக்குக் காரணம். அக்ரமக்காரர்கள் ஆட்சியிலமர்ந்து கொண்டு, எத்தனை காலத்திற்குத்தான் அரசோச்ச முடியும். அவர்கள் ஆட்சியின் ஆயுள் காலம், மிக மிகக் குறைவாகத்தானே இருக்கும்! உலக வரலாறு நமக்குக் கற்பிக்கும் பாடம்—காலம் காட்டும் உண்மை கூட—இதுதானே!!

ரஜியா சுல்தானாவாக—ராணியாக மாறிய செய்தியைக் கேட்டு நாட்டு மக்கள் ஆனந்தப்பள்ளு பாடி அகமகிழ்ந்தபோது, கோலாகல வாழ்வினர்களில் ஒரு சிலர் அதாவது பிரபுக்களில் ஒருசிலர் மட்டும் சீறியெழுந்தனர் சிறுத்தையைப்போல.

“அரச குடும்பத்தைச் சார்ந்த ஆண்களில், ஆட்சி செலுத்தும் ஆற்றல் படைத்தோர் ஆயிரம் பேர் இருக்க, கோஷா தரிக்கும் பெண்ணொருத்தி அரசியாக அரியணை ஏறுவதா? இது அரசியல் வட்டாரத்திற்கே அபகீர்த்தி யல்லவா? அதிலும் நம் போன்ற பழுத்த அரசியல் வாதிகளுக்குப் பெரும்

இழுக்கல்லவா?"—இவையும், இவைபோன்ற இன்னும் காரசாரமான சொற்றொடர்களும் பலமாக உதிர்ந்தன பிரபுக்களின் வாயினின்றும். இது மட்டுமா? வேறு விதத்திலும் வார்த்தைகள் உதிர்ந்தன!

"மனதை மயக்கும் இந்த மனோகரியை நாம் மணந்து கொண்டாலாவது, அடிமை சாம்ராஜ்யத்தின் அதிபதியாகலாம்," என மனக் கோட்டை கட்டினர் கட்டழகியின்மேல் கண்ணோட்டம் கொண்ட வேறு பல பிரபுக்கள்.

"அந்தப்புரத்து அழகுப் பதுமையாக அடை பட்டுக்கிடக்க வேண்டிய இந்த அழகு சுந்தரியின் கடைக்கண் பார்வை நம் மீது விழாதா." என ஏங்கினர் —பின் ஏமாந்தனர் மற்றும் சில பிரபுக் கள்!

ஆனல் ரஜியாவின் மனம் எவரையும் நாட வில்லை—பிரபுக்கள் எவரையும் சட்டை செய்யவில்லை அவளது உள்ளம். ஆனல், ஒரு சாதாரணக் குதிரை வீரனைத்தான் தேர்ந்தெடுத்தது அவளது பெண் உள்ளம்.

சீமான்களையும் செல்வந்தர்களையும் சீற்றப் பார்வையோடு பார்க்கும் அந்தச் சிங்காரி, எவனோ அந்நிய நாட்டுக் காரனை—அபிசீனியா நாட்டுக் குதிரைக் காரனை—ஒரு ஆணழகனோடு அரசி அடிக்கடி அளவளாவிப் பேசுகிறாள், என்பதை யறிந்த பூமான்கள், கூடிக் கூடிப் பேசினர்—முணு முணுத்தனர். அதற்கும் அஞ்சவில்லை அவ்வழகு ராணி.

ஆலம்! அபிசீனியாவைச் சேர்ந்தவன்; அவனது வசீகரத் தோற்றமும், குறும்பான பேச்சும் அரசி யின் உள்ளத்தைக் காந்தம் போல் கவர்ந்துவிட்டது. உண்மைக் காதலுக்கு உயர்வு ஏது, தாழ்வு ஏது, ஜாதியேது, மதமேது! கண் நிறைந்த உருவம், காரிகையின் கருத்தைக் கவர்ந்ததில் ஆச்சரியமென்ன!

ஆலம், ஒரு சாதாரணக் குதிரைப்படைத் தலைவன்; ரஜியா டில்லி சாம்ராஜ்யத்தின் பேரரசி. இருவரும் நேசிக்கின்றனர், காதலிக்கின்றனர், காதல் மொழி பேசிச் சல்லாபிக்கின்றனர்!

குதிரைப்படை வீரனானலென்ன, கோமான் வீட்டுப் பிள்ளையானலென்ன; காதல் ஜாதியைப் பார்க்கிறதா, அந்தஸ்தைப் பார்க்கிறதா; அல்லது பணம், பட்டம், பதவி இவைகளைத்தான் பார்க்கிறதா! எல்லாவற்றையும் கடந்ததல்லவா காதல்! இதை ஏனோ அறியாமல் அல்லது உணராமல் போயினரோ அரசியல் சூதாட்டத்தில் அனுபவம் வாய்ந்த சீமான்கள்.

காரணம் ஏதுமின்றி, குதிரைத் தளத்திற்குச் செல்வாள் கோமளாங்கி. அவளைக் கண்டதும் அடக்கமும் நடுக்கமுமாக எழுந்து நின்று, '**வணக்கம்**' செய்து வரவேற்பான் ஆலம். புன்னகையொன்றைப் **பதிலாக** அவனுக்களித்துக் கடைக்கண்ணால் அந்தச் சுந்தரனைப் பார்ப்பாள் அந்தச் சுந்தராங்கி. கம்பீரமான குதிரைகளை அந்தக் கட்டழகிக்குக் காட்டுவான் ஆலம். அவைகளின் பெயரையும், 'எந்தெந்த நாட்டைச் சார்ந்தவை' என்றும் கேட்பாள் எழிலரசி. தக்க பதிலளிப்பான் அந்தத் தையலர்தாசன். வாய் பேசும்; அதே நேரத்தில், இருவரது விழிகளும் பேசும். விழியால் மொழிபேசும் இரகசியம் காதலர்களுக்கல்லவா தெரியும்!

* * *

ஒரு நாள்! 'பேரரசி வேட்டைக்குப் புறப்படுகிறாள்' என அறிவிக்கப்பட்டது.

அரண்மனை முன், அழகான குதிரையொன்று அலங்காரமாக நின்றிருந்தது. ஆணுடை தரித்து, வீரநடை போட்டு அங்கு வந்தாள் வடிவழகி ரஜியா. அவளது சிவந்த மேனியை அழகு படுத்திக் காட்டிற்று. அவள் உடுத்தி யிருந்த அந்தக் கருநிற ஆடை,

அரசியோடு ஆரண்யம் செல்வதற்காக அணிவகுத்து நின்றனர் ஆடம்பரச் சீமான்கள்.

வனிதாமணி வெளியே வந்ததும், அவளது பேரழகைக் கண்டு வியந்தனர் வீரர்கள்! கட்டழகின் கண்ணாடியாகக் காட்சியளித்த அந்தக் கனகாங்கியை வைத்த கண் மாறாமல் பார்த்தனர்—பரவசப் பட்டனர் பிரபுக்கள்! வாயை அகலப் பிளந்தவண்ணம் அவள் அழகின் ஆழத்தை அளந்தனர் அரச குடும்பத்தைச் சார்ந்த வேறு பலர். தன் வடிவழகினைக் கண்டு விழுங்கி விடுவதைப் போல் பார்க்கும் இத்தனை சீமான்களில் எவரையும் அந்த எழலரசி ஏறெடுத்துப் பார்த்தாளில்லை. எங்கோ தூரத்தில், தனிமையாக நின்றிருந்த குதிரை வீரன் ஆலமைத்தான் அவ்வழகியின் கண்கள் தேடிச் சென்றன. கண்ணால் ஏதோ பேசினாள் காரிகை; புன்னகை பூத்தான் ஆலம்! அருகிலிருந்தோர், தூரத்திலிருந்தோர் அனைவருமே இக்காட்சியைக் கண்டனர்—மனம் நொந்தனர்.

குதிரையருகில் சென்று, அதன்மீது ஏற முயன்றாள் ரஜியா; முடியாதவளைப் போல் பாவனை செய்தாள். அவளைத் தூக்கிக் குதிரையின் மீதமர்த்தி உதவி செய்யத் துடியாய்த் துடித்தனர் அங்கிருந்த பிரபுக்கள். ஆனால், அவர்களது உதவியை நாடவில்லை அந்த உல்லாசி. அண்மையிலிருந்த அந்த ஆயிரம் பேரில் எவரும் அவள் கண்ணுக்குப் புலப்படவில்லை போலும்! எங்கோ தூரத்தில் நின்றிருந்த ஆலமைத்தான் அழைத்தாள்உதவிக்கு! அதுவும் கடைக் கண்ணால் சமிக்கை செய்தழைத்தாள் அந்தக் கண்ணழகி!

கடைக் கண் பார்வையின் கருத்தைப் புரிந்து கொண்ட காளை, கட்டழகியினருகே சென்று, அவளது பூங்கரங்களைப் பற்றி குதிரை மீதமர்த்தினான். ஆலம் அவளை தூக்கிய போது, அரசியாரின் உடலே பூரித்து விட்டது!

இவ்வரிய காட்சியினைக் கண்ட பிரபுக்கள், மனம் பதைத்தனர். அவர்களது பொறாமையுள்ளத்தில் பெரியதொரு 'எரிமலை'த் தோன்றி, அது வெடித்து, அதன் ஜுவாலை அரண்மனை யெங்கும் பரவியது. பேரரசிரஜியாவா அதனைக் கண்டு நடுங்குபவள்!

வனத்தில் வேட்டையாடிய போது, ரஜியா ஆலமிடம் நடந்து கொண்ட 'விதம்', பிரபுக்களின் உள்ளத்திலே தோன்றியிருந்த அந்த எரிமலையின் ஜுவாலை முன்னிலும் அதிகமாகக் கொழுந்து விட்டெரிந்தது. ஆட்டமும் பாட்டமும், கேலியும் கிண்டலும், கொஞ்சலும் கெஞ்சலும் கொஞ்ச நஞ்சமல்ல! அந்த ஆரண்யம் என்றுமே கண்டிராத அளவுக்கு, அன்று சரச லீலைகள் நிகழ்ந்தன அங்கே!!

செல்வத்திலே புரளும் சீமான்கள் இதனைப் பார்த்து மனம் புழுங்கினர். தூண்டிற் புழுவினைப் போல் அவர்கள் உள்ளம் துடித்தது. புழுங்கத்தான் முடியும், துடிக்கத்தான் முடியும் அவர்கள்; பின் வேறென்ன செய்ய முடியும் அவர்களால்! அவளோ அரசி, இவர்களோ, அரண்மனையை அலங்கரித்து நிற்கும் அலங்காரப் பொம்மைகள். செங்கோல் முன் சங்கீதம் செல்லாக் காசுதானே!

வடிவழகியின் மேல் தமக்குள்ள வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு, சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர் பழிக்கஞ்சாப் பிரபுக்கள்.

2

பஞ்சாப் கவர்னர் **அல்தூனியா**, ரஜியாவை எதிர்த்துக் கலகம் செய்தான். கலகம் முற்றி வெடித்தது. ரஜியா அதைக் கேள்வியுற்று, சீறும் நாகம் போல் வீறு கொண்டெழுந்தாள்.

வாய்த்த சந்தர்ப்பத்தின் மூலம் தமது வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ள முனைந்தனர் சீமான்கள். பிரபுக்கள் அனைவரும் ஒன்று கூடினர்—பேசினர்; அதன் விளைவு, அற்புத 'சதி' ஒன்று உருவாயிற்று. ரஜியாவை எதிர்த்து, அல்தூனியா நடத்தும் போரில், தங்கள் 'ஒத்துழைப்பு' நிச்சயம் உண்டு, என உறுதி அளித்து, பஞ்சாப் கவர்னருக்குத் தூபம் போட்டனர், பிரபுக்கள்.

பஞ்சாபில் போர் முரசு எழுந்தது. அதன் எதிரொலி டில்லியெங்கும் ஒலித்தது. போர் முழக்கம் கேட்ட ரஜியா துள்ளி யெழுந்தாள். தன் காதலனையழைத்து, குதிரைப் படையினைத் தயார் செய்யும் படி கட்டளையிட்டாள் கட்டழகி. குதிரைப் படையினை, ஆயத்தப் படுத்தினான் ஆலம். தானே தளபதியாகப் போர் வீரர்களுக்குத் தலைமை தாங்கிச் சென்றாள் ரஜியா!

போர் மூளுவதற்கு முக்கிய காரணக் கர்த்தாக்களாக விருந்த பிரபுக் கூட்டத்தார், ஒன்று மறியாதவர்களைப் போல், சுல்தானா ரஜியாவுக்குப் பக்கபலமாக நின்று உற்சாகப் படுத்தினர். சூது வாது ஏது மறியாத சுந்தராங்கி, அவர்களை மனமார நம்பினாள்—பின் ஏமாந்தாள். அந்தோ! அரசியலில்தான் எத்தனை சூழ்ச்சிகள்! எத்தனை யெத்தனை சூதுகள்!! சூதும் சூழ்ச்சியும் நிறைந்த சூதாட்டம் தானா அரசியல்!!!

டில்லியிலிருந்து புறப்பட்டு விட்டன ரஜியாவின் படைகள் வீராங்கனை ரஜியா அதன் தளபதி.

கடும் வெயில்.

அந்த வெயிலையும் பொருட் படுத்தாமல், தனது படைகளை நடத்திச் சென்றாள், வீர மங்கை ரஜியா. வீரஞ் செறியும் போர்ப் பரணி பாடிக் கொண்டு பஞ்சாபை நோக்கி விரைந்தன முஸ்லீம் படைகள். ஆணுடை பூண்ட ஆரணங்கு அப்படையினை அழைத்துச் சென்றாள் வீரவுரையாற்றிக் கொண்டு.

கடும் வெயில் மறைந்து, இருண்ட மாலை வந்தது.

வீரர்கள் ஏறு நடை போட்டு சென்று கொண்டு தானிருந்தனர். அன்றிரவெல்லாம் சென்றனர்—சென்று கொண்டிருந்தனர். இரவு நீங்கிக் காலைக் கதிரவன் உதித்தான். அப்போதும் படை வீரர்கள் தளரவில்லை — நிற்கவில்லை—தங்கள் பிரயாணத்தைத் தொடர்ந்தனர். மீண்டும் இரவு வந்தது—கழிந்தது—காலை மலர்ந்தது. ஆக மூன்று நாட்களாக இரவு பகல் என்று பாராமல், மனம் சற்றும் தளராமல் தொடர்ந்து பிரயாணம் செய்ததால், போர் வீரர்களின் நடையிலே சற்று தளர்ச்சி யேற்பட்டது; அவர்கள் முகத்திலே 'களைப்பு' ரேகைப் படர்ந்திருந்தது. அதனை யறிந்தாள் வீர வனிதை ரஜியா. அப்போது அவர்கள் பஞ்சாப் எல்லையை நெருங்கிக் கொண்டிருந்தனர்; எனினும், போர் வீரர்களின் மன நிலையையறிந்த மனோகரி, அவர்களுக்குச் சற்று ஓய்வு தந்து உற்சாகப் படுத்த எண்ணி பஞ்சாப் எல்லைக்கு இப்பால் சற்று தூரத்திலேயே "கூடார மடித்துத் தங்கலாம்" என ஆணை பிறப்பித்தாள்.

பெண்ணாகப் பிறந்து, ஆண் உடை தரித்து மண்ணுலகைக் கட்டியாள முடியும், என்ற உண்மையை உலகம் உணரவேண்டும், என்று விரும்பினளோ என்னவோ அந்த வனிதாமணி; பயங்கர எதிர்ப்பு சக்திகளுக்கிடையே, சற்றும் மனம் தளராமல், சமர் புரிய புறப்பட்டாள் அந்த சரசி!

அவள் ஒரு பெண்தான்—பிறப்பால், ஆனால் வைர உள்ளம் அவள் படைத்திருந்தாள். அதைக் 'குற்றம்' என்றனர் பிரபுக்கள். வனப்பு மிகுந்த வடிவழகி தான், எனினும், அவ்வனப்புடன் வீரமும் பெற்றிருந்தாள் அவ்வனிதை. அதனைக் 'குற்றம்' என்று குறை கூறினர் அந்தக் குணசீலர்கள். பேரெழில் படைத்த ரூப சுந்தரியாகத் தான் விளங்கினள் அவள்; அத்துடன் கம்பீர மிக்க ஆணுடை தரிக்கின்றாளே! அதையும் 'குற்றம்'

என்று தான் முணு முணுத்தனர் அந்த முட்டாள் பிரபுக்கள்.

பெண்கள் என்று பிறந்து விட்டால், அவர்கள் படுக்கையறைப் பதுமையாகவும், குழந்தைகளைப் பெற்றெடுத்துத் தரும் யந்திரமாகவும் தான் காலங் கழிக்க வேண்டுமென்பது சமூகம் விதிக்கின்ற சட்டம் போலும்! "அடுப்பூதும் பெண்கள் ஆணுடை தரிக்கக் கூடாது; கொஞ்சும் மொழி பேசும் கோதையருக்கு வீரம் எதற்கு? ஆண்களுக்கு அடிமையாக அடங்கியிருக்க வேண்டிய ஆரணங்குகள், ஆண்களை யடக்கி ஆட்சி செலுத்துவதா?"—இப்படித் தான் முணு முணுத்தனர், பிரபுக்களின் கைப்பாவைகளாயிருந்த சில சிப்பாய்கள். பாவம்! அந்தப் பச்சிளம் பாவை இந்தச் சதிகாரக் கும்பலின் சூழ்ச்சியை அறியாள்!

மறு நாட் காலை.

ஆதவன் உதித்தான்! வீரர்கள் அனைவரையும் அணி வகுத்து நிற்கச் செய்தாள் அந்த வீராங்கனை. சிங்க ஏறு போலச் சிப்பாய்கள் முன் தோன்றினாள். வீரப் பெண் ரஜியா. ஒளி வீசும் அவளது கண்களில் வீரம் தெரிந்தது. குயில் மொழி பேச வேண்டிய அக் கோமளவல்லியின் வாய், கனல் தெறிக்கும் வீர வார்த்தைகளை உதிர்த்தன. பேரரசி பேசினாள்:

"சிப்பாய்களே! இந்த நாட்டின் செல்வங்களே! நம் எதிரிலே இப்போது நிற்கும் பிரச்னை, சாதாரணமானதல்ல. எதிர்பாராத விதத்திலே, நம்மை யழைத்திருக்கிறது இந்தப் போராட்டம். களத்திலே நாம் இறங்கியிருக்கிறோம். கருணைக்கோ, அல்லது கோழைத் தனத்திற்கோ சற்றும் இடமளிக்கக் கூடாது. நாம் வீரர்கள்—கோழைகள் அல்ல. வெற்றி கண்டவர்கள்—தோல்வி என்றும் பாராதவர்கள் நாம். கப்பம் வாங்கியவர்கள் தான் நாமும் நமது முன்னோர்களும்—கட்டியவர்கள் அல்ல. சிற்றரசுகள் பல நம் ஆட்சியின் கீழ்—ஆனால் நாம் யாருக்கும் அடங்கினவர்கள் அல்ல—அஞ்சி

நடந்தவர்களுமல்ல. இனி மேலா அடங்கப் போகிறோம்; அஞ்சப் போகிறோம்? இல்லை — ஒருக்காலுமில்லை. ஆகவே, வீரர்களே, தினவெடுக்கும் உங்கள் தோள் வலிமையை இன்று வஞ்சகக் கவர்னர் காணப் போகிறான்.

“மாவீரர்களே! இந்த நாட்டின் மணிகளே! நமது வலிமையை அறியாத அயோக்கியன் வீணை வம்புக் கிழுக்கிறான் நம்மை. வாய் வேதாந்தம் பேசும் வீணர்கள் அல்ல நாம், என்பதை அந்த வஞ்சகன் உணர வேண்டும். விரிந்த சாம்ராஜ்யத்தின் வீரத்தனத்தை அந்த உலுத்தன் உணர வேண்டும். களத்திலே இறங்கியுள்ள நாம்,இன்னொன்றையும் கவனித்தாக வேண்டும்.நம்மிலே பலர் எதிரியின் வாளுக்கிரையாக நேரிடும். ஆனாலும் மிகப் பலர் நாம். எளிதிலே நமக்கு நஷ்டம் ஏற்படாது. எனினும் நாம் ரத்தம் சிந்தத் தயாராயிருக்க வேண்டும். இன்று நாம் சிந்தும் ஒவ்வொரு துளி ரத்தமும், நமது சாம்ராஜ்யத்தைப் பலப்படுத்தும் **உரம்**. பிணங்களின் மேல் நடக்கத் தெரிந்த நீங்களும் பிணமாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். எதற்கும் அஞ்சாதீர்கள். வீர மரணத்தை வரவேற்று முன்னேற முயலுங்கள். போரிலே சிலருக்குப் பெரும் ‘காயங்கள்’ ஏற்படலாம். அந்தக் காயங்களின் மீது எழும்பும் தழும்புகள், நமது எதிர்காலவெற்றியின் முத்தாய்ப்புகள், என்பதைநீங்கள் உணர வேண்டும்.

‘என் அருமை வீரர்களே! உங்களுக்கு ஒன்று கூற ஆசைப்படுகிறேன். இந்த நாட்டின் அரசி நான். அரண்மனை மன்றத்திலே அழகான அரியாசனத்திலே ஆடம்பரமாகக் கொலு வீற்றிருக்க வேண்டியவள் நான். இன்று போர்க் களத்திலே, உங்களோடு, தோளோடு தோள் நின்று போராடப் போகிறேன். அந்தப்புரத்து அழகினையும், மலர் வனத்தின் சிங்காரத்தையும் கண்டு வந்தவள் இன்று, மரணப் பிடியிலே சிக்கிக் கூக்குரலிடும் வீரர்களின் வேதனைக் குரலைக் கேட்கப் போகி

றேன். வளமான வாழ்வு படைத்து, இன்பம் ஒன்றையே அனுபவிக்க வேண்டிய நான், இன்று வாழ்வைத் துச்சமென மதித்து மரணத்தை எதிர் நோக்கிச் செல்லு கிறேன் உங்கள் முன்.

"வீராதி வீரர்களே! சிந்திக்கவேண்டும்நீங்கள்.எனக் காகப் போராடுகிறேன் என்று உங்களில் சிலர் கருத லாம். என் வாழ்வை வளமாக்கத்தான் இந்தப் போராட் டத்தைக் கிளப்பி யிருக்கிறேன் என்று எண்ணலாம். உங்களை ஏணியாக்கி, ஏழடுக்கு மாளிகையிலே நான் வாழ வேண்டும் என்றே இந்தப் போரிலே ஈடுபட்டிருக் கிறேன் என்று கூட நினைக்கலாம் நீங்கள். அப்படி எனக்காகப் போராடுகிறேன் என்றால், ராணியாகிய நான் ரணகளத்திற்கு வருவானேன்? என் வாழ்வை வளப்படுத்திக் கொள்ள விரும்புவதாயிருந்தால். உங் களின் தளபதியாக நான் வந்திருக்கத் தேவையில்லையே? அரண்மனையிலே இருந்து கொண்டே ஆணைப் பத்திரத் தின் மூலம் உங்களுக்கு உத்தரவுகளை அனுப்பிக் கொண்டிருப்பேனே? 'சாவே, நீ வா' என்று மரணத் தைப் புன் சிரிப்போடு வரவேற்று உங்களுக்கு முன் பாக நான போர்க் களம் புக வேண்டியதில்லையே? சாவின் அழைப்பைச் சந்தோஷமாக நான் வரவேற்கி றேனே, ஏன்? எனக்காகவா? என் வாழ்வுக்காகவா? சொல்லுங்கள் வீரர்களே, உங்களை உரிமையோடு கேட் கிறேன் சொல்லுங்கள். பேரரசி என்ற ஓதாவில் அல்ல, உங்களின் தளபதி—உங்களில் ஒருத்தி என்ற முறையில் கேட்கிறேன், சொல்லுங்கள்!" என்று வீர கர்ஜனை புரிந்தாள் வீராங்கனை ரஜியா.

"இல்லை.......இல்லை......" என்று ஒரு முகமாகக் கூறினார் படை வீரர்கள்

இடி முழக்கம் போன்ற அந்தப் பேரொலியைக் கேட்ட மோகனாங்கியின் முகம் மலர்ந்தது.

போர் வீரர்களின் வீர முழக்கத்தைக் கேட்டு மகிழ்ந்த அதே நேரத்தில், அதிசயிக்கத் தக்க மற்றொரு

சம்பவம் அந்தச் சுந்தரி கண்டாள். மகிழ்ச்சி யடைந்த மனத்திலே, ஆச்சரியமும் திகிலும் இரண்டறச் சூழ்ந்தது! போர் வீரருடன், அந்த நிமிஷம் வரையில், ஒன்றாகக் கலந்து, அவர்களுக்கு அவ்வப் போது உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டும், உற்சாக மூட்டிக் கொண்டு மிருந்த பிரபுக் கூட்டத்தில் பலரைத் திடீரென்று காணவில்லை!

திடீரென அந்தப் பிரபு சிலர்கள் 'அந்தரத்தியானம்' ஆகி விட்டதைக் கண்டு ரஜியா ஆச்சரியம் தான் அடைந்தாளே தவிர அச்சமுற வில்லை. எதிரியோடு சேர்ந்து விடுவார்களே என்ற திகில்தான் பட்டாளே தவிர, அதற்காகத் தன் மன வலிமையைச் சுற்றும் தளர விடவில்லை. 'எதையும் தாங்கும் இதயம் நமக்குண்டு' என்ற துணிவுடன், 'புறப்படுக' என வீரர்களுக்கு உத்தரவிட்டாள் வீரமங்கை ரஜியா. படைகள் புறப்பட்டன.

3

பஞ்சாப் கவர்னரின் பாசறையை, வெகு தூரத்திற்கு இப்பாலேயே பார்த்து விட்டனர், ரஜியாவின் படைகள். முன்னிலும் பன் மடங்காக வீராவேசங் கொண்டாள் ரஜியா. "அதோ தெரிகிறது எதிரியின் கோட்டை. விரைவில் சென்று தாக்குவோம் வாரீர்" எனக் கூவியழைத்தாள் தளபதி ரஜியா.

'வாயு வேகம் மனோவேகம்' என்பார்களே, அந்த அளவிலே குதிரைகள் பறந்தன கோட்டையை நோக்கி. கோட்டையை நெருங்கியதும், அக் கோட்டையைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். கோட்டை மதில் மீது நின்றிருந்த, வேல் தாங்கிய பஞ்சாப் வீரர்கள், தங்கள் கையிலே தாங்கியிருந்த வேலினை வீசினர், கோட்டை வாயிலை வளைத்து நின்ற ரஜியாவின் வீரர்கள் மேல்.

'வாயிலைக் கடந்து சென்றால் தான், வெற்றி கிட்டும்' என உணர்ந்த அரசி, கோட்டையின் வாயிற் கதவினை உடைத் தெறியுமாறு உத்தரவிட்டாள், ரஜியா தன் படைவீரர்களுக்கு. ஆணை பிறந்த அடுத்த நிமிஷமே, கதவு உடைக்கப்பட்டது. மடை திறந்த வெள்ளம் போல், கோட்டைக்குள் பாய்ந்தனர் வீரர்கள்—ரஜியாவின் வீரர்கள். ரஜியா அவர்களுக்கு முன் சென்றாள்—வீர நடை போட்டுக்கொண்டு, அவளுடன், அவள் அருமைக் காதலன், ஆலம், நிழல் போல் ஒட்டிக் கொண்டிருந்தான்.

கோட்டையின் முதல் சுவரிலிருந்து, இரண்டாவது வாயில் நுழைந்து, அங்கிருந்து படிப்படியாக, கடைசி மதில் வரையிலும் முன்னேறி விட்டனர் ரஜியாவும், அவளது சகாக்களும்!

அதுதான் கடைசி மதில். அதைக் கடந்து சென்றுவிட்டால் கோட்டையைப் பிடித்த மாதிரிதான். அங்குதான் நடந்தது கடும் போர்! இருதரப்புப் படையினரும் வெள்ளத்தோடு வெள்ளமாய்க் கலந்தனர். அதைக் கண்டு அரசியின் உள்ளம் மகிழ்ந்தது!

மதிலின் இடது பக்கத்திலே ஒரு இருட்டறை. கடைசி மதிலைக் கடந்து, உள்ளே செல்வதற்குக் காலடி எடுத்து வைத்தாள் வடிவழகி. என்ன ஆச்சரியம். கம்பீரத் தோற்றமுடைய வீரனொருவன் ரஜியா முன் தோன்றினன். அவ்வீரனைக் கண்டதும், ஆச்சரியத்தால், ரஜியாவின் கண்கள் அகல விரிந்தன! அவ் வீரன் வேறு யாருமல்ல; பஞ்சாப் கவர்னர் **அல்தூனியா** தான்! அப்போது, ரஜியா, தன் வீரரின் உதவியின்றி, தனிமையிலிருந்தாள், ஆகவே, அல்தூனியாவைக் கண்டதும், ஆச்சரியத்தோடு, திகிலுங் கொண்டாள்!

அவள் மனதை 'எடை' போட்டுத் திகிலடைந்திருக்கிறாள் ரஜியா, என்பதையறிந்த அல்தூனியா, "ஏன்; என்னைக் கண்டதும், அரசியாரின் உள்ளத்தில் வியப்

பும் வியாகூலமும் போட்டி போட்டுக்கொண்டு கிளம்பி விட்டது போலிருக்கிறதே!" என்று குறும்பு கலந்த மொழியிலே கூறியவண்ணம் நகைத்தான்.

அல்தூனியாவின் ஆணவ மொழியினைக் கேட்டதும் ஆவேசமடைந்தாள் அழகு ராணி ரஜியா. அடுத்த விநாடியே, வாளேந்திய அவளது கரம் வலிமை பெற்று விட்டது? தன் கையிலிருந்த வாளை அவன்மீது வீசினாள்; அல்தூனியாவின் வாள் அதைத் தாங்கித் தடுத்தது. அதன் பின் சொல்லவா வேண்டும்; இருவருக்கும் பலத்த 'கை கலப்பு' ஏற்பட்டுவிட்டது. பம்பரம் போல் சுழன்றாள் அந்தச் சுந்தராங்கி.

மூன்று மணி நேரம், இடைவிடாமல், கடும்போர் நடந்தது. ரஜியா சற்றுக் களைப்புற்றாள். பாவம்! பெண்தானே அவள். மென் காற்றிலே ஊசலாடும் மெல்லிய பூங்கொடிதானே அவள். கட்டிலறையிலே, காதலனோடு கலவியின்பம் புரியவேண்டியள் தானே அவள். இந்தப் பருவத்தில், கையில் வாளேந்திக் களம் புகுவதென்றால், கொஞ்சம் கஷ்டமாகத்தானே இருக்கும்.

சோர்வுற்று, நிலை தடுமாறும் நேரம். வேறு வழியில்லாத காரணத்தால், தனது கடைசி ஆயுதத்தைப் பிரயோகிக்க எண்ணினாள் எழிலரசி. அதன்படியே, உடை வாளைக் கழற்றி, தன் பலங்கொண்ட மட்டும் அல்தூனியாவின் மார்பை நோக்கி வீசினாள். அந்தோ! அவன் இரும்புக் கவசம் அணிந்திருந்ததால், மார்பின் மேல் வீசப்பட்ட அந்தக் கூர்வாள் அவன் மார்பின் மேல் பட்டுத் தெறித்துக் கீழே விழுந்துவிட்டது.

வாளையிழந்த வனிதை வஞ்சகக் கொடியோனிடமிருந்து தப்ப எண்ணி, அருகிலிருந்த குகைக்குள் ஓடினாள். இருள் சூழ்ந்த அந்தப் பயங்கரக் குகைக்குள் செல்ல அவளது 'பெண் மனம்' சற்று மறுத்தது. எனவே, வந்த வழியே திரும்பினாள் வடிவழகி ராஜியா. அப்போது, அவளிருந்த நிலையில், அவளால் நடக்கவே

முடியவில்லை. கைகள் ஓய்ந்து உணர்விழந்து விட்டன. மொத்தத்தில், தன் உணர்வையே இழந்துவிட்டாள் அவ் வீராங்கனை.

அவள் நிலையை அறிந்த அல்தூனியா, அவள் மெல்லிய கரங்களைப் பற்றி, அவளது குவிந்த அதரங்களில், சூடேறிப் போயிருந்த அவனுடைய முரட்டு இதழ்களைப் பொருத்தினான். முரட்டுத் தோல் படைத்த அந்த மூட்டாள் தந்த முத்தத்தைச் சிறிதும் சகிக்காமல், தன் கண்களை இறுக மூடிக்கொண்டாள் மானமுள்ள மங்கை ரஜியா. பலமிழந்து போயிருந்த தன் கால்களால் அக்கொடியோனை எட்டி உதைத்தாள். தீச்செயல் புரிந்த அத் தீயோன் முகத்தில் காரி உமிழ்ந்தாள். அப்போதும் விடவில்லை அந்த முரட்டு உள்ளம் படைத்த மூரடன். மீண்டும் மீண்டும், அவளது கோவை இதழ்களில் முத்தமிட்டான். அது கண்டு மனம் புழுங்கினாள் அக் காரிகை. கூண்டிலடைபட்ட சிங்கம் தன் வலிமையை எங்ஙனம் காட்ட முடியும். எதிரியின் கோட்டையில்—அதுவும் தனிமையில்—நிராயுதபாணி யாகிவிட்ட நிலையில் சிக்கிக்கொண்ட பிறகு, அப் பெண்ணரசியால் என்ன செய்ய முடியும். தனக்கு நேர்ந்த அவல நிலையை நினைத்த போது, ரஜியா, மூர்ச்சித்துக் கீழே விழுந்துவிட்டாள்.

விழுந்த வனிதையைத் தன் கையிலே தாங்கிய வண்ணம், குகையை விட்டு வெளியே வந்தான் அல்தூனியா. வெளியே, ரஜியாவின் படை வீரர்களில் பலர் கைதிகளாகக் காட்சியளித்தனர். தலைமை தாங்கிய தளபதியே கைதான பின், மற்ற சாதாரண வீரர்களைப் பற்றிக் கூறவா வேண்டும்.

கைதானவர்கள் போக. மற்றும் பலர், குற்றுயிராக உயிருடன் போராடிக் கொண்டு, தரையிலே உருண்டனர். வெட்டுண்ட தலைகள் எத்தனை; துண்டிக்கப்பட்ட கால்கள் — கைகள் எத்தனை;: கோட்டை

எங்கலும் ஒரே பிணக் காடாய்க் காட்சியளித்தது. ரத்த ஆறு அங்கு ஓடிற்று!

கைது செய்யப்பட்டு, நிராயுதபாணிகளாக நின்றிருந்த ரஜியாவின் படைவீரர்களின் முன்பாக ரஜியாவைப் படுக்கவைத்து, அவள் முகத்தில் நீரைத் தெளித்து, அவள் மூர்ச்சைத் தெளிவித்தான் அல்தூனியா.

ரஜியா, மெதுவாகத் தன் கண்களைத் திறந்தாள். பொற்சிலை உயிர்பெற்றெழுவதைப் போல் தன் உடலையசைத்தாள் அப் பேரழகி. எதிரே, தன் படைவீரர்கள், தலை குனிந்த வண்ணம் சோகமுற்று நின்றிருந்த அவலக் காட்சியைக் கண்டாள். அப் பரிதாபக் காட்சியைப் பார்த்துவிட்டுத் தன் பார்வையை மற்றொரு பக்கம் திருப்பினாள் பாவை. என்ன அநியாயம்! தன் உப்பைத் தின்று கொழுத்த பிரபுக்கள்—உத்தம சீலர்கள் (!) அங்கு நின்றிருப்பதைக் கண்டாள், அவர்களைப் பார்த்ததும், அவள் மனம் பட்டபாடு அவளையல்லவா கேட்கவேண்டும். அதன் பின்னர்... கைதான வீரர்களின் வரிசையை உற்று நோக்கினாள் நங்கை. அவளுடைய ஆருயிர்க் காதலன் ஆலமைத் துருவித் துருவித் தேடிப் பார்த்தன அவளது கண்கள் அந்தோ! என்ன ஏமாற்றம்! என்ன ஏமாற்றம்!!

அல்தூனியாவின் அடிமைகளாக, அங்கு வரிசையாக அணிவகுத்து நின்றிருந்தனர் டில்லி பிரபுக்கள்—வஞ்சகச் சீமான்கள். அவர்களில் ஒரு உத்தமர், அருகிலிருந்த வீரனொருவனைப் பார்த்து, "எங்கே அந்த மூட்டை? கொண்டுவா இங்கே," என அதட்டினார். அந்த நிமிஷமே, அங்கே மூட்டையொன்று கொண்டு வந்து வைக்கப்பட்டது. அதனை அவிழ்த்து அரசியாருக்குக் காட்டச் சொன்னார் அந்தக் கனவான். மூட்டை அவிழ்க்கப்பட்டது. அந்தோ! எத்தகைய பரிதாபமிக்க காட்சி!!

இரு துண்டுகளாகத் துண்டிக்கப்பட்ட உடல் அம் மூட்டையிலே காணப்பட்டது. வசீகரமிக்க முகமும், சுருண்ட முடியும், பரந்த நெற்றியும் கொண்ட அவ் வழகிய உருவத்தைக் கண்டாள் காரிகை. அவளையு மறியாமல், அவள் கண்கள் கடலாக மாறியது. வசீகர மிக்க அந்த முகத்திலே வீரத்தைக் கண்டாள், வீராங்கனை ரஜியா. அரும்பு போன்ற மீசையின் அழகைக் கண்டாள். செத்திருந்தும், அந்தச் சிங்கார வதனத்தில் தவழ்ந்து விளையாடும் அந்தப் புன்னகை யைக் கண்டாள். சிரித்த முகத்துடன் காட்சியளித்த அந்தச் சிங்காரன் வேறு யாருமல்ல, வீரமங்கை ரஜியா வின் ஆசைக் காதலன்தான். ஆம், அவளது ஆரு யிர்க் காதலன் ஆலமைத்தான் அங்கு இரு துண்டுக ளாகக் கண்டாள் ரஜியா. வெந்த புண்ணிலே வேல் பாய்ந்தது போலிருந்தது அவளுக்கு, அக் காட்சியைக் கண்டதும்.

“ஐயோ! என் கண்ணாளா!” என்று கூக்குரலிட்டு அப் பிணத்தின் மேல் விழுந்து புரண்டாள். விம்மி விம்மி அழுதாள் அவ்வழகு ராணி. மாபெரும் சாம்ராஜ் யத்தின் மகாராணி என்பதைக் கூட மறந்து மனம் நொந்து புலம்பினாள் மங்கைநல்லாள். அவள் அழுது வடித்த கண்ணீர், அந்தக் கனவான்களுக்குக் களிப்புத் தரும் பன்னீராக இருந்ததோ என்னவோ; இல்லா விட்டால், காதலனைப் பறிகொடுத்துக் கண்ணீர் விட் டுக் கதறும் காரிகையைப் பார்த்து, கைகொட்டிச் சிரிப்பார்களா அந்தச் சீமான்கள்?

தனது வாழ்நாளில் என்றுமே கண்டிராத—காண முடியாத பேரின்பத்தை அவ்வப்போது அளித்து வந்த ஆருயிர்க் காதலன் ஆலம் மாண்டு விட்டான். அவனது திரு உடல் இரு துண்டுக ளாக்கப்பட்டு தன் எதிரே காட்சியளிக்கிறது. இத்தகைய கோரக் காட்சி ஒரு புறம். உள்ளத்திலே பகையும் உதட்டிலே உறவுங் கொண்டு தன்னுடன் உறவாடிக் கொண்டே

பஞ்சாப் கவர்னருடன் கூடிக் குலாவுவதும், தன்னு டைய பரிதாபமிக்க காட்சியைக் கண்டு அவர்கள் பரவசப் பண் பாடுவதுமான அவல நிலை பிரிதொரு புறம். ஆக, இருபுறத்திலும், தன் இதயத்தைத் துளைக்கும் இரு பெரும் 'தாக்குதல்கள்', அந்த மங்கை யின் மனதை வாட்டி வதைத்தன.

4

போர் ஓய்ந்தது; அமைதி நிலவிற்று.

கைதான டில்லி வீரர்களை அகழியில் போட்டுக் கொன்று விடும்படி கட்டளையிட்டான் அல்தூனியா. பேரரசி ரஜியா சிறையிலடைக்கப் பட்டாள்.

துருக்கிப் பிரபுக்கள் டில்லி திரும்பினர்; பேரும் புக ழும் வாய்ந்த டில்லி சாம்ராஜ்யத்தைத் தங்கள் ஆளுகை யின் கீழ் ஆக்கிக் கொண்டனர். நெடுநாட்களாகத் தங் கள் மனத்திலே நிழலாடிக் கொண்டிருந்த கனவு இன்று நனவாக மாறியதை யெண்ணிப் பூரித்தனர் பூமான் கள். அதற்காகப் பெரியதொரு விழாவினை நடத்திக் கொண்டாடினர். விருந்து—உபசாரம், வேடிக்கை— கேளிக்கை எல்லாம் நடத்தினர்—மகிழ்ந்தனர். டில்லி மா நகர் எங்கும் ஆனந்தம், குதூகலம் கோலாகலம்...! ஆனல்......?

பஞ்சாபிலே??

சிங்காரக் குயில் சிறையிலே வாடிற்று! அல்லும் பகலும் அனவரதமும் தன் காதலனை நினைத்து அழுதாள் அவ்வழகி. அதே நேரத்தில், விரிந்த சாம் ராஜ்யம் வீணர்களின் கையில் சிக்கிவிட்டதே, என்ற கவலையும் அவள் உள்ளத்தை வாட்டியது. இருதலைக்

கொள்ளி எறும்பு போல் வேதனைப் பட்டாள், வீர மங்கை ரஜியா.

ஒன்று, இரண்டு மூன்று என நாட்கள் நகர்ந்தன. பேரரசி ரஜியாவின் மனம், சிந்தனைக் கடலாக மாறியது. சிந்தனை! சிந்தனை! சிந்தனை! இரவெல்லாம் சிந்தனை, பகலெல்லாம் சிந்தனை. எப்போதும், எந்த நேரத்திலும் எண்ண அலைகள், அந்தச் சிந்தனைக் கடலிலே அலைமோதிய வண்ணமிருந்தன.

"வாழ்வதா, அன்றி வீழ்வதா? வாழ்ந்தால் அரச வாழ்வு, இன்றேல் வீர மரணம்!" — அவளது வீரம் கூறிற்று இப்படி.

"சிறையில் சிக்கிய பின் வாழ்வதா? இல்லை நான் வாழமுடியாது; சாகத்தான் போகிறேன், தற்கொலை செய்து இறந்து போகிறேன்," என்றது அவளது பெண் மனம்.

"இறப்பதா? நீ இறப்பதா? டில்லி சாம்ராஜ்யத்தின் தலைவி சாவதா? கூடாது, நீ சாகக்கூடாது. நீ வாழவேண்டும். உனக்காக அல்ல, உன் நாட்டுக்காக— உன் சொந்த நாட்டின் நலனுக்காக—உன் நாட்டுப் பிரஜைகளுக்காக நீ வாழத்தான் வேண்டும். இந்த வையகம் வரவேற்கிற உனது வாழ்வை. 'இன்பமாகப் பாடுவோம், எங்கள் ராணி வாழவே', என்று இன்ப கீதம் பாடி உன்னை வாழ்த்துவதற்குக் காத்துக்கொண்டிருக்கின்றனர், உனது நலனை விரும்பும் டில்லி மக்கள். உன் வாழ்வே அவர்கள் வாழ்வு, உன் நலமே அவர்களது நலம். ஆகவே, அவர்களுக்காக—அவர்கள் வாழ்வுக்காக—நீ வாழத்தான் வேண்டும். மரணத்தைப் பற்றி மனத்திலே எண்ணாதே. சாவைப்பற்றிச் சற்றும் சிந்திக்காதே" — இத்தகைய அரியதொரு போதனை மொழியைக் கூறிற்று அவளது அறிவு.

"நான் வாழ வேண்டுமென்றால், அல்தூனியாவுக்கு அடி பணிந்து போகவேண்டும்; அதாவது அவன் ஆசிப்பது போல், அவனது போகப் பொருளாக

வேண்டும் நான். நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும்! என் எதிரியை மணப்பதா?" இப்படிக் கேட்டது அவளது சிந்தனை.

"ஆம், நீ மணந்து தான் ஆக வேண்டும் அல்தூனியாவை. அவனை நீ மணந்து கொள்வதால், நீ அவனது மனைவியாகிறாய். அப்போது அல்தூனியாவை உன் கைப் பாவையாக்கிக் கொள்ள ஏதுவாகும். உன் வாக்கே அவனுக்குத் தேவ வாக்காகத் தோன்றும். அவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு, உன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம். அல்தூனியாவின் துணை கொண்டு டில்லி மீது படையெடுத்துச் சென்று, வஞ்சகப் பிரபுக்களை வென்று, சரிந்து போன உனது சாம்ராஜ்யத்தை மீண்டும் ஸ்தாபித்துக் கொள்ளலாமே?" என்று இடித்துக் கூறிற்று அவளது அறிவு.

"நான் அல்தூனியாவை மணப்பதா? அப்போது என் கற்பு களங்க மடைவதா?" மனம் கேட்டது இது போல.

"அடி பைத்தியக் காரி; இன்னும் உன் கற்பு களங்க மடைய வில்லை யென்றா எண்ணுகிறாய்? அன்று இருண்ட குகையில், அல்தூனியா உன் கைபிடித்து முத்தமிட்டானே, அப்போது உன் கற்பு களங்க மடையாமல், காக்கப் பட்டது என்றா எண்ணிக் கொண்டாய்? பானைப் பாலில் ஒரு துளி விஷம் போதாதா, பால் நஞ்சாக மாற? இனி நீ சிந்தித்துப் பயனில்லை. யோசித்தும் பலனில்லை. இந்தச் சிந்தனையும், யோசனையும் அப்போது இருந்திருக்க வேண்டும்—பஞ்சாப் மீது படை யெடுப்பதற்கு முன் இருந்திருக்க வேண்டும்," என்றது அறிவு.

முடிவில், அறிவின் அறிவுரைப்படி நடப்பதெனத் தீர்மானித்தாள் அவ்வீராங்கனை.

அடுத்த நாள்!

வழக்கம் போல், சிங்காரியைப் பேட்டி காணச் சிறைச்சாலைக்கு வந்தான் அல்தூனியா. அவனைக் கண்டதும், எழுந்து நின்றாள் எழிலரசி! வழக்கத்திற்கு மாறாக, அவள் தனக்கு மரியாதை புரிந்ததைக் கண்டு ஆச்சரிய மடைந்தான் அல்தூனியா! என்று மில்லாத பொலிவுடன் விளங்கினாள் அவ்வணிதாமணி. கொழுத்த ஆடு ஒன்று, தானாகவே தன் குகைக்குள் வந்து விட்டதைக் காணும் வேங்கையின் உள்ளம் அடையும் ஆனந்தம், அல்தூனியா அப்போது அடைந்தான். விஷயத்தை விளக்குவானேன்? தன் எண்ணத்தை அல்தூனியாவிடம் எடுத்துரைத்தாள் ரஜியா; அல்தூனியா மகிழ்ந்தான்.

இழந்த டில்லியை மீண்டும் தன் கைக்கு மீட்டுக் கொடுப்பதாக உறுதி தந்தால் மணம் செய்து கொள்ளலாம், என்ற நிபந்தனை விதித்தாள் வீரமங்கை ரஜியா. 'சரி' என்று 'சம்மதம்' தெரிவித்தான் அல்தூனியா. பின்னர்......?

மங்களகரமான திருநா ளொன்றில், திருமணம் நடந்தேறியது, பஞ்சாப் கவர்னர் அல்தூனியாவுக்கும் டில்லியின் மாஜிப் பேரரசி ரஜியாவுக்கும்.

சின்னாட்களுக்குப் பின்.........

சிற்றின்பத்திலே தன் வாழ்நாளைக் கழித்து வந்தபோதிலும், டில்லிப் பிரபுக்களின் மேல்தனக்குள்ள வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளும் எண்ணம் மட்டும் ரஜியாவின் மனத்தை விட்டு அகலவேயில்லை. கட்டிலறையில், புதுமணத் தம்பதிகள் கலவியின்பம் புரியும் போது, தன் எண்ணத்தை அல்தூனியாவிடம் இடைவிடாமல் எடுத்துரைப்பதை மட்டும் அந்த மங்கையர்க்கரசி மறக்கவே யில்லை.

—0—

5

மூன்று மாதங்கள் எப்படியோ கழித்து விட்டன. ஒருநாள், டில்லியை நோக்கித் திரண்டெழுந்தது ஒரு பெரும் படை. பஞ்சாப் கவர்னர் அல்தூனியாவும், வீரமங்கை ரஜியாவும் படையினை நடத்திச் சென்றனர்.

'வெற்றி கிட்டுமோ, அன்றி தோல்விதான் வருமோ' என அச்சமுற்றான், அல்தூனியா. ஆனால் ரஜியாவோ, அந் நிலையிலில்லை. கடும் போர், என்ற கடலில், வீரம் என்னும் ஓடத்தில், நம்பிக்கை என்னும் நங்கூரம் பாய்ச்சிச் சென்று கொண்டிருந்தாள். 'கிடைத்தால் வெற்றி, இன்றேல் வீர சொர்க்கம்' என்ற எண்ணமே அவள் உள்ளத்தில் தலை தூக்கி நின்றது.

மிகப் பலரான டில்லிப் படைகளோடு,மிகச்சிலராக வுள்ள பஞ்சாப் படையினர் எங்ஙனம் போரிட முடியும், என்ற சந்தேகம் அல்தூனியாவுக்கு. ஆகவே, டில்லிப் பிரபுக்களோடு 'சமரசம்' செய்து ஒரு நல்ல முடிவைக் காண நினைத்தான்.

டில்லிமா நகர் அருகே, இரு தரப்பின் படைகளும் கம்பீரமாக அணி வகுத்து நின்றன. சமரசத்தைப் பற்றித் தன் மனைவிக்குக் கூறாமலேயே, தன்னுடைய தூதன் ஒருவனை டில்லிப் பிரபுக்களிடம் அனுப்பி,சமரச 'ஏற்பாட்டினை'த் தெரிவிக்குமாறு செய்தான். போரைக் கண்டு அஞ்சும் சீமான்கள். சமரசத்திற்கு இணங்கினர்- ஒரு முக்கிய நிபந்தனையின் பேரில். அதாவது, டில்லியின் சுல்தானாக, அல்தூனியாவை வேண்டுமானால் தாங்கள் ஏற்றுக் கொள்வதாகவும் ரஜியா அரண்மனைப் பதுமையாகத் தானிருக்க வேண்டுமேயன்றி ஆளுடை தரித்து அரச சபையிலே வீற்றிருக்கக் கூடாது, என்பதுதான் அந்த நிபந்தனை.

நிபந்தனைக்கு அல்தூனியாவின் மனம் சம்மதித்தது. ஆனால் ரஜியாவின் உள்ளமோ, அதற்குச் சற்றும்

இணங்கவில்லை. அல்தூனியா எவ்வளவோ 'உபதேசம்' செய்து பார்த்தான் தன் மனைவுக்கு. எதற்கும் இசைய வில்லை அந்த வீராங்கனை. "சமரசம் பேசி என் சாம்ராஜ் யத்தை ஸ்தாபிக்க ஒரு நாளும் நான் சம்மதிக்க மாட் டேன். உரமேறிய உள்ளமும், வாளேந்திய கரமுமிருக்கி றது. இவைகளின் துணை கொண்டு, இழந்த என் பொன் னுட்டை மீண்டும் பெறுவேன். அரசியாக வாழ்நதவள், அடிமை போன்று, அரண்மனை யழகியாக—அலங்காரப் பதுமையாக—வாழ நான் விரும்ப மாட்டேன். வாழ்ந் தால் பேரரசியாகத்தான் வாழ்வேன்; இல்லையேல், பெருமையோடும் பூரிப்போடும் போர்க்களம் புகத்தயார்," என வீரவுரை யாற்றினுள் வீரமங்கை ரஜியா.

முடிவில், போர் முழக்கம் எழுந்தன!

அணிவகுத்து நின்றிருந்த இரு படையினரும் ஒன் ருேடொன்று மோதினர்; களத்திலே குதித்தனர் கர்ம வீரர்கள்.

சற்று நேரத்திற்கு முன், சமரசப் பித்துக்குத் தன் வீரத்தைஅடகுவைத்திருந்தஅல்தூனியா,சமரசப்பேச்சு வார்த்தை முறிந்ததும், வீரா வேசங் கொண்டு போரிலி றங்கினுன். அப்போது மூன்று மாதக் கர்ப்பினியாக விருந்த ரஜியா, நம்பிக்கை நட்சத்திரம் தன் முகத்தில் ஒளிக்க, வாளை நாற்புறமும் சுழற்றினுள்.

போர் மிகக் கடுமையாகத்தான் நடந்தது; எனினும் ரஜியாவின் படை சிறிது சிறிதாகக் குறைய ஆரம்பித் தது எண்ணிக்கையில். பெரும் பான்மையான எண் ணிக்கை கொண்ட டில்லிப் படைகளோடு, சிறு பான் மைப் படையினர் சமர் புரிவதென்ருல், வீரம் எத் தன்மை படைத்துத் தான் என்ன பயன். மொத்தத்தில் வலிமை குறைவுதானே.

வெகு விரைவிலே போர் முடிவு பெற்றது, ரஜியா வின் படை தோற்றது. வெற்றி பெற்ற பிரபுக்கள் ரஜி யாவையும், அவளது கணவன் அல்தூனியாவையும்

கைது செய்தனர். வனிதையின் மேல் வைத்திருந்த வஞ்சத்தைப் பூரணமாகத் தீர்த்துக் கொள்ள நினைத்தனர் பிரபுக்கள்.

*   *   *

6

போர்க் களத்திலே கழு மரம் ஒன்றை நட்டனர். அதன் முன் கொண்டு வந்து நிறுத்தப் பட்டனர், கைது செய்யப் பட்ட அல்தூனியாவும், ரஜியாவும்.

அல்தூனியாவை அக் கழு மரத்திலே ஏற்ற உத்தர விட்டனர் பிரபுக்கள். அடுத்த விநாடியே, உயிரோடு கழுவிலேற்றப் பட்டான் அல்தூனியா. அதோடு விட்டனரா, அந்த அக்ரமத்தின் அவதார புருஷர்கள். கழு மரத்தடியில் நின்று கொண்டிருந்த வீரனொருவனைப் பார்த்து, ஏதோ சமிக்கை செய்தான் பிரபுக்களில் ஒருவன். அதே விநாடி, அவ்வீரனின் கையிலிருந்த கத்தி, அல்தூனியாவின் கழுத்தைச் சுற்றிலும் கோடு ஒன்றை வரைந்தது. அதைத் தொடர்ந்து, மற்றொரு வீரன் அல்தூனியாவின் உடம்பின் தோலை உரித்தான். அந்தோ! என்ன பரிதாப மிக்க காட்சி!

இவ்வளவும், அவன் மனைவி ரஜியாவின் கண்ணெதிரே நடை பெற்றன. இக் கோரக் காட்சியினைக் கண்ட ரஜியா அலறினள், துடித்தாள், பதறினள். என்ன செய்து என்ன பயன்? எதிரிகளின் பாசறையில் அல்லவா அவள் இப்போதிருக்கிறாள்? சிங்கத்தின் முன் சிறு எலி சிக்கியது போல், வலிவிழந்த அந்த வீராங்கனை கண் கலங்கினள்.

உயிரோடு சித்ரவதை செய்யப் பட்ட அல்தூனியா, துடிதுடித்தான், பதை பதைத்தான்; பின்னர் இறந்தே போனன். கண்ணீர் விட்டுக் கதறினள் கட்டழகி ரஜியா. அதைக் கண்டு ஏளனச் சிரிப்புச் சிரித்தனர்

பிரபுக்கள். சீமான்களின் சிரிப்பொலி சிங்காரியின் உள்ளத்தில் சீற்றத்தை யெழுப்பியது. அவளருகில் நின்று கொண்டு கைகொட்டி நகைக்கும் சீமான் ஒருவனை நோக்கி, அவன் முகத்திலே காரி உமிழ்ந்தாள் ரஜியா. முகத்தில் வழியும் எச்சிலைத் துடைத்த வண்ணம் தன் இடை வாளை உருவினான் அந்த உத்தமச் சீமான். அதைக் கண்டு அருகிலிருந்தோர் அனைவரும், "வெட்டுங்கள், குத்துங்கள் அவளை," எனக் கூவினர்.

மறு விநாடியே, மங்கையின் மார்பிலே பிரபுவின் வாள் பாய்ந்தது. அதைத் தொடர்ந்து மற்றொரு கத்தியும் அவளது பொன்னுடலில் பாய்ந்து சென்றது. அஞ்சா நெஞ்சம் படைத்த அந்த வீராங்கனை தரையில் சாய்ந்தாள் வெட்டுண்ட பச்சை மரத்தைப் போல. செங்குருதி அவளுடலினின்றும் பெருக்கெடுத் தோடியது. சாவை எதிர் நோக்கிக் கொண்டிருந்த சரசி, அப்போதும், புன்னகையோடு தான் வரவேற்றாள் மரணத்தை!

'வாழ்ந்தால் பேரரசியாகவே வாழ்வேன், இன்றேல், வீர மரணம் அடைவேன்,' எனச் சூளுரைத்த சுந்தரியாள், பேரரசியாக வாழ முடியா விட்டாலும், பேரரசியாகவே மாண்டாள். அடிமை வம்சத்தைச் சார்ந்த வடிவழகி, அடிமையாக வாழ விரும்பவில்லை.

அரண்மனையிலே பிறந்தாள், அரசியாக அரியணையேறினாள்; முடிவில் அரசியாகவே மாண்டாள்.

பெண் இனத்திற்குப் பெரும் உயர்வு தேடித் தந்த வீராங்கனையை, பெண் இனம் என்றென்றும் மறக்காது. இனம் மறந்தாலும், மனம் இருக்கிறதே, அதாவது, பெண் மனம், அது மறக்குமா வீரமங்கை ரஜியாவை!

"நாட்டை யாளும் உரிமை பெண்களுக்கில்லை; மங்கை யொருத்தி மாபெரும் சாம்ராஜ்யத்தை ஆளக் கூடாது, ஆரணங்கு நடத்தும் ஆட்சியின் கீழ், வெறும் அலங்காரப் பொம்மைகளாக அரண்மனையிலே அமர்ந்திருப்பதா? கூடாது; அவளை ஒழித்து கட்டுவோம்," எனக்

கங்கணம் கட்டிய கனவான்கள், சூழ்ச்சியும் சதியும் கலந்த 'திட்டம்' ஒன்றை உருவாக்கி அதன் மூலம், அவ் வீராங்கனையைத் தீர்த்து கட்டினர். தீராத தீரர்களான சீமான்கள். என்னே அவர்களின் தீரம்! என்னே அவர்களின் வீரம்!

சூதும் வாதும் வேதனை செய்யும், என்கிறார்களே, எங்கே செய்தது வேதனை? சூது செய்து சாம்ராஜ்யத்தைக் கைப் பற்றிய கனவான்கள் விருந்துப சாரம் செய்தல்லவா 'விழா' கொண்டாடினர், வீராங்கனை உயிர் நீத்த நாளன்று!

'அன்று ஒரு நாள் மட்டுமா, ஆண்டாண்டு தோறும், அந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடினர் அப் பிரபுக்கள், வீரப்பெண் ரஜியா மாண்ட தினத்தை மகத்தான விழாவாகக் கொண்டாடினர்—மகிழ்ந்தனர் ஆண்டு தோறும்!

வீர மங்கை ரஜியா மாண்டு போனாள், எப்போதே, எங்கோ ஓர் இடத்தில்; ஆனால், இன்றும் அவளது வீர மிக்க செயலைப் பாராட்டிப் புகழ்ச்சிப் பண் பாடுகிறதே வீர உலகம்!!

* * *

கொலைகாரி ரோஷனாரா

வாள் வீச்சிலே சாதிக்கப் படாத பல காரியங்கள், கன்னியரின் கடைக் கண் வீச்சிலே சாதிக்கப் பட்ட காலம் அது. ஆம், காரிகைகளின் கடைக்கண் பார்வை அத்தனை சக்தி பெற்றிருந்தது!

அரசுரிமைப் போட்டியிலே, ஆண்களை மிஞ்சக் கூடிய அளவுக்கு, கொலைபுரியும் ஆற்றல், அந்தக் காலத்துப் பெண்ணரசிகள் பெற்றிருந்தனர்! விரிந்த சாம்ராஜ்யத்தைச் சரியச் செய்யும் சக்திகூட அந்தச் சரசிகளுக் கிருந்தது!!

ரோஷனாரா!

உருவத்திலே அழகியாகவும், உள்ளத்திலே கொலைகாரியாகவும் வாழ்ந்த வஞ்சகி! பார்வைக்குப் பளபளப்பாக உள்ள நல்லபாம்பைப் போன்றவளான இந்த நளினராணியின் பல்லிலே, அல்ல, வயிற்றிலே இருந்தது விஷம்—கொடிய நஞ்சு! வேண்டியபோது உதட்டிலே வந்து தேங்கும் அந்த ஆலகால விஷம்.

சூதும், சூழ்ச்சியும் அந்தச் சுந்தரியின் சதுரங்க விளையாட்டாக இருந்தது. பொறாமைப் பேய் தலை விரித்தாடிற்று அந்தக் கொலைகாரியின் உள்ளத்தில், புலியை மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் எவரும். அதனைக் கொடிய மிருகம் எனக் கூறார்—கூற முடியாது; அதன் தோலின் தோற்றம் அத்தகைய அழகு வாய்ந்தது. ரோஷனாராவைப் பார்க்கும் எவரும், அவளை வஞ்சகி, கொலைகாரி எனக் கூறமாட்டார். வஞ்சகத்தை மறைக்கும் வடிவழகினை அந்த வனிதாமணி பெற்றிருந்தாள்!

முகலாய சாம்ராஜ்யத்தின் சரித்திரத்தில் அழிக்க முடியாத அபகீர்த்தியை இந்த ஆரணங்கு பெற்று விட்டாள். இதை ஒரு சாரார், 'கீர்த்தி' என்று கூறிப், பெருமிதம் கொள்வர். ஆனால், நடுநிலையில் நின்று தீர்ப்புக் கூறும் வழக்கு மன்றத்தின்முன் இந்த வடிவழகி நிறுத்தப்பட்டால், நிச்சயம், தூற்றப்படுவாளே யன்றி, போற்றப்பட மாட்டாள். அநீதியின் சிகரமாக—அக்ரமத்தின் அவதாரமாக—வஞ்சகத்தின் உறைவிடமாக—பொறாமையின் பிம்பமாகத் தான் இந்த உத்தமி அவதரித்தாள் இந்த உலகில்!

முகலாயப் பேரரசின் மன்னர் மன்னர் **ஷாஜஹான்** பெற்றெடுத்த மக்களில், இந்த ரோஷனாராவும் ஒருத்தி! ஷாஜஹானுக்குப் பின், முகலாய சாம்ராஜ்யத்தின் மணிமுடி, தன் அண்ணன் **ஔரங்கசீப்** தலையை அலங்கரிக்க வேண்டுமென, மிக மிகப் பாடு பட்டாள் இந்தப் பைங்கிளியாள். முறைப்படி மூத்த மகனுக்குச் சூட்டவேண்டிய மகுடத்தை, இளையவன் கைக்கு மாற்ற வேண்டும் என்பது அவளது விருப்பம். அதை நிறைவேற்றியும் வைத்தாள் மிக மிக வெற்றிகரமாக. இந்தத் 'திருப்பணி'யினை நிறைவேற்ற, அவள் செய்த சூழ்ச்சிகள், அவள் எடுத்துக் கொண்ட முயற்சிகள், அவள் நடந்து கொண்ட நடத்தைகள், அப்பப்பா! எண்ணற்றவை!! எட்டிலடங்காதவை!!!

1658!

முகலாய சாம்ராஜ்யத்தின் அதிகார பீடம் ஆட்டங் கொடுக்க ஆரம்பித்த காலம்! பரந்த சாம்ராஜ்யத்தின் சிறந்த கோட்டை சிறிது சிறிதாகச் சரியத் தொடங்கிய காலம் அது!

பேரரசர் ஷாஜஹான் படுக்கையிலே கிடந்தார். மரணப் பிடியிலகப்பட்டுள்ள மன்னர், மீளமாட்டார் என்றறிந்த அவருடைய மைந்தரிற் சிலர், போரை எழுப்பினர். ஒவ்வொரு மகனும், வெவ்வேறு திக்கில்

நின்று போரிட்டான். அந்த நேரத்தில், **ஔரங்கசீப்** தக்காணத்திலிருந்தான். மகாதந்திரசாலியான ஔரங்கசீப் தன்னுடைய கடைசித் தம்பியான **மூரத்** என்பவனோடு ஒரு உடன்படிக்கை செய்து கொண்டான்.

அதே நேரத்தில், டில்லியிலிருந்து கொண்டே, ஔரங்கசீப்புக்காகப் பல சூழ்ச்சிகளைக் கையாண்டாள், வஞ்சகி ரோஷனரா. எப்படியும், ஔரங்கசீப் அரியணையில் அமர வேண்டுமென்பது அவளது பேரவா. அவளுக்கெதிராகக் கிளம்பினாள், அவள் தமக்கை **ஜஹனரா.** ஷாஜஹானின் மூத்தமகன் **தாராஷிகோ** பட்டத்திற்கு வரவேண்டுமென்பது இவளது விருப்பம்.

வெறும் சூழ்ச்சி மட்டும் வெற்றி தராது, என அறிந்த ரோஷனரா, தந்திரத்தைக் கையாண்டாள். கேவலமிக்க செய்கைதான் என்றாலும், அச்சமயத்திற்கு அம்முறை வெற்றியளிக்கக் கூடிய அரிய சாதனம் என அவளுக்குத் தோன்றவே, அதை மேற்கொண்டாள் அந்த மோகனங்கி.

அப்துல்லா கான், முகலாயப் பேரரசியின் அப்போதைய சிறந்த தளபதி. வீரமிக்கவன், தைரியசாலி, ஆற்றல் மிகப் படைத்தவன். அத்தகைய வீரனைத் தன் வசப்படுத்திக் கொண்டால், எளிதில் ஆட்சி பீடத்தைக் கைப்பற்றி விடலாம், என எண்ணினாள் ரோஷனரா.

நளினமாடும் நாகம்போன்று, அவன்முன் நடைபோட்டுச் சென்றாள். முத்துப் பல் வரிசை காட்டி, மோகனப் புன்னகை பூத்தாள். காதல் மொழி பேசும் தன் கடைக்கண் பார்வையை வீசினாள். அப்துல்லா வீழ்ந்தான்; வேல் விழியாள் வெற்றி பெற்றாள். மதுக்கிண்ண மேந்தும் கரங்களும், புன்னகை வீசும் வதனமும், கொஞ்சும் மொழியும், கோலாகல போகமும், ஆக இவையெல்லாம் ஒன்று சேர்ந்து தளபதி அப்துல்லாவை மயக்கிவிட்டதில் ஆச்சரியமென்ன! படுக்கையறைப் பதுமையாகி விட்

டான் படைத்தலைவன்!! கிடைத்தற்கரிய செல்வம்—செல்வம்கூட அல்ல, அதற்கும் மேலான மாணிக்கம்—கிடைக்கிறதென்றால், 'வேண்டாம்' என மறுப்பாரும் உண்டோ இந்த மண்ணுலகில்!!!

காம வித்தைகளைக் காட்டி, தன் காலடியிலே தூங்கும் நாயினும் கடையனாக்கி விட்டாள், கர்ம வீரன் அப்துல்லாவை—ரோஷனாரா. அதே நேரத்தில், தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள எண்ணினாள். அப்போது, தக்காணத்திலிருந்த ஔரங்கசீப்பை டில்லி மீது படையெடுத்து வரும்படி கடிதம் எழுதினாள், கனகாங்கி.

திடீரென டில்லியைத் தாக்க விரைந்தனர், ஔரங்கசீப்பின் படையினர். போர்! போர்!! டில்லியிலே போர்!!!

எதிர்பாராத விதமாய் மூண்ட போரைச் சமாளிக்க அப்துல்லா கானை யழைத்தான் தாராஷிகோ. அழகியின் படுக்கையறையிலே உறங்கிக் கிடக்கும் அப்துல்லா எங்ஙனம் போர்க்களம் புக முடியும்? போர்க்களத்திலே, வாளோடு வாள் மோதும் போது ஏற்படும் ஆனந்தத்தைக் காட்டிலும் கட்டழகியின் கட்டிலறையிலே, இதழோடு இதழ் சேரும்போது உண்டாகும் 'இன்பம்' சிறந்ததெனக் கண்டான் அப்துல்லா. வானமே இடிந்து வீழினும், கட்டிலறைக் காதலர் கவலை கொள்ளார் என்றால், மிகச் சாதாரணமான போர் மூண்டுவிட்டதைப் பற்றித்தானா கவலை கொள்ளப் போகிறான் அப்துல்லா.

அப்துல்லாவைக் காணாது, அனல் மெழுகானான் தாரா. காசிம் கான் என்பவனை யழைத்து, படைத் தலைவனாக்கி, களத்திற் கனுப்பினான்.

களத்திலே காசிம் கான்; கட்டிலறையிலே இந்தக் காம சுந்தரன்! கடமையை மறந்த கயவன், என வையகம் தூற்றுமே, என்று அப்போது அவன் ஏன் உணரப் போகிறான்?

போர் முனையிலே வாளோடு வாள் மோதுகிறது. இங்கே, படுக்கையறையிலே, முகத்தோடு முகம், மார்போடு மார்பு, இதழோடு இதழ் இரண்டறக் கலக்கிறது—வெள்ளத்தோடு வெள்ளம் கலந்து செல்வதைப் போல!

அங்கே, வெட்டுண்ட வீரர்களின் வேதனைக் குரல்; இங்கே, கோமளவல்லியின் கொஞ்சு மொழி, காதல் கீதம்! இன்பக் கடலிலே நீந்திக் கொண்டிருந்தான் அப்துல்லா, தன் கடமையை மறந்து. ரோஷனாரா தந்த அந்த இன்பம் நிரந்தரமானது என எண்ணினன்—எல்லாம் ஏமாற்றுவித்தை என்று அப்போது அறியாத ஏமாளி! காதல் மொழி பேசி, கனிந்த முத்தங்கள் சொரிந்து கொண்டிருந்த அந்த நேரத்தில் கூட, 'ஒளரங்கசீப்பின் படை எப்போது கோட்டையைப் பிடிக்கும்,' என்ற நினைப்பிலேயே இருந்ததே அந்த வஞ்சகியின் உள்ளத்தில்; அதைத்தான் உணர்ந்து கொள்ளமுடிந்ததா அந்த உலுத்தனல்! 'எல்லாம் இன்ப மயம்' என்ற களிப்பு கீதம் ஒன்றைத்தான், அவனல் அப்போது கேட்க முடிந்தது!

மறுநாள், காலை, சோகச் செய்தியொன்று கேட்டான் தாராஷிகோ. மனங்கலங்கினன் அதைக் கேட்டு.

டில்லிக் கோட்டையை நோக்கி ஒளரங்கசீப்பின் படைகள் விரைகின்றன, என்ற செய்தி டில்லிமாநகர் எங்கனும் எதிரொலித்தது.

'டுமீல்.........டுமீல்.......' எனப் பீரங்கி வேட்டுகள் முழங்கின. ஒளரங்கசீப் கோட்டையினுள் நுழைந்துவிட்டான், என்பதன் அறிகுறி அது.

அதையடுத்து, ஒரு மணி நேரத்தில், 'ஒளரங்கசீப் வெற்றிபெற்ருர்' என்ற பேரொலி எழுந்தது!

அதைக் கேள்வியுற்ற தாராஷிகோ, தன் தமக்கையை அழைத்து, அவளிடம், "நான் சென்று

விடுகிறேன்; நிலைமை ஒரு வேளை சரியாகும்போது, மீண்டும் நாம் சந்திப்போம். நீ பத்திரமாகத் தந்தையாரைக் கவனித்துக் கொண்டு இங்கேயே இரு,'' எனக் கூறிக் கண்ணீர் விட்டான். ரோஷனாரா எவ்வளவோ எடுத்துரைத்தும், கேட்கவில்லை தாரா. பிரியாமல் பிரிந்தான் தாராஷிகோ, தன் மனைவியோடும் இரு குழந்தைகளோடும்.

* * *

2

ஔரங்கசீப்பின் கைக்குக் கிடைக்காமல் தப்பினான் தாரா. டில்லியைவிட்டு, பஞ்சாபிற்கு ஓடினான்...

* *

அரண்மனைச் சிப்பந்திகள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

பேரரசர் ஷாஜஹானும் சிறையிலடைக்கப்பட்டார். அவருடைய அருமை மகள் ஜஹானரா, சிறையிலிருந்து கொண்டு, அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து வந்தாள். சிறைச்சாலையில் எங்கு வேண்டுமானாலும், எந்த நேரத்திலும் போகலாம் என ஜஹானராவுக்கு மட்டும் தனிச்சலுகை கொடுக்கப்பட்டிருந்தது.

* * *

ரோஷனாராவின் கட்டிலறையில், மலர்தூவிய பஞ்சணையில் உறங்கிக் கொண்டிருந்த அப்துல்லா, திடீரெனப் படுக்கையைவிட்டுத் துள்ளியெழுந்தான், வெளியே புயப்படுவதற்கு. அதற்குள், அவனருகே நின்றிருந்த வஞ்சகக் கள்ளி ரோஷனாரா "கவலைப்படாதீர், ஔரங்கசீப் மன்னரானாலும், தாரா மன்னரானாலும் நாம் கவலை கொள்ளத் தேவையில்லை. இந்த நாட்டை யார் ஆண்டாலும் நமக்கென்ன

கவலை? எப்போதும், எந்தக் காலத்திலும் நாம் காதலர், காதலர்களே!" என்று கூறியவாறு மது நிறைந்த கோப்பையை ஒருமுறை இருமுறைகூட அல்ல, நிலை தவறி அவன் கட்டிலில் சாயும்வரை அப்துல்லாவுக்குக் கொடுத்தாள் அந்த மனோகரி.

கோட்டை பிடிபட்ட மூன்று மணி நேரத்திற்குள் அரண்மனை முழுவதும், ஔரங்கசீப்பின் வசம் ஆகிவிட்டது. இந்தக் குறுகிய நேரத்திற்குள், சிறைச் சாலையே நிரம்பி வழிந்தது! பேரரசர் உள்பட, அரண்மனைச் சிப்பந்திகள் அனைவருமே அதிலே அடை பட்டுக் கிடந்தனர். இப்போது பாக்கியாக உள்ள ஆசாமி ஒரே ஒருவர்தான் பிடிபட வேண்டும்; அந்த ஆசாமிதான் அப்துல்லா கான். அவனைத் தேடினர் வீரர்கள்.

குடிவெறி தெளிந்து, நித்திரையிலிருந்து விழிப்பவனைப் போலக் கண் விழித்துப் பார்த்தான் அப்துல்லா. அவன் பக்கத்திலே படுத்திருந்த பாவையைக் காணவில்லை. மதுவை ஊற்றி ஊற்றித் தாராளமாகத் தந்து கொண்டிருந்த ரோஷனாராவை அங்கு காணவில்லை. ஆச்சரியமும், திகிலும் ஒன்று சேர்ந்து அவன் உள்ளத்தை உலுக்கியது!

அரண்மனையெங்கும் அமளிதுமளியாக விருந்தது. அந்தப் பயங்கர ஓசையைக் கேட்ட அப்துல்லா மனத்தில் பேரிடி விழுந்தது. காமலாகிரியை ஊட்டிய கனகாங்கியின் கட்டிலறையை விட்டுத் தப்பிச் செல்வதற்கான வழியைப் பற்றிச் சிந்திக்கலானான். அவனிருந்த அறைக்குப் பக்கத்திலிருந்த அறையில், வீரரின் அதட்டல் மிரட்டலும், பெண்களின் நடுக்கக் குரலும் கேள்வியுற்றான் தளபதி அப்துல்லா கான். அவன் மூளை கிறுகிறுத்தது. அடுத்த அறையில் சோதனை போடும் ஒற்றர்கள், இன்னும் சில நிமிஷங்களில் தானிருக்கும் அறையையும் சோதனை போடுவதற்கு வந்து விடுவார்கள்,

என்று எண்ணினன். அவன் நினைத்தது சரியாகி விட்டது.

அடுத்த சில நிமிடங்களில், அப்துல்லா இருக்கும் அறைக்கதவு பலமாக இடிக்கப்பட்டது. கதவைத் திறந்தான் அப்துல்லா. உருவிய வாளுடன் அவன் முன் காட்சியளித்தனர் வீரர்கள். அவர்களைப் பார்த்து, "டேய், யார் நீங்கள்? எங்கே வந்தீர்கள்?" என்று அதிகாரம் கலந்த குரலில் கேட்டான் அப்துல்லா, தன் மனதில் மறைந்து கிடக்கும் பயத்தை வெளிக் காட்டாமல்!

"உம்மைத்தான் தேடிவந்தோம்," என்ருன் அவ் வீரர்களின் தலைவன், சிரித்துக்கொண்டே.

"டேய், பொடிப் பயலே, நான் யார் தெரியுமா?" என்று அதட்டினன் அப்துல்லா.

"ஓ! நன்ருய் தெரியுமே, மூகலாய சாம்ராஜ்யத்தின் படைத் தலைவர், தளபதி, அஞ்சா நெஞ்சம் படைத்த அதிவீர தீர அப்துல்லா கான் என்று!" எனக் குறும்பும் கேலியும் கலந்த பாணியில் கூறினன், அவ்வீரர் தலைவன்.

அப்துல்லா ஏதோ கூற வாயெடுத்தான். அதற்குள், அவ்வீரர் தலைவன், "சரி சரி. பேசுவதற்கும், பதிலளிப்பதற்கும் நேரம் இதுவல்ல, புறப்படுங்கள்," எனக் கோபமாகக் கூறினன். அதற்குள் மற்ருெரு வீரன் அப்துல்லாவின் கைகளில் விலங்கைப் பூட்டினன்.

கூண்டிலடைபட்ட வேங்கை போல், அவ்வீரர்களின் பின் சென்ருன் தளபதி அப்துல்லா. அப்போது, அவன் மனம், தான் கடமையை மறந்ததைப் பற்றி எண்ணியதா; அல்லது, தன்னை வஞ்சித்த வடிவழகியின் வஞ்சகச் செயலை யெண்ணி வருந்தியதா? யாருக்குத் தெரியும்! அப்துல்லாவைத்தான் கேட்க வேண்டும்!!

சிறைச் சாலைக்கு அப்துல்லா இழுத்துச் செல்லப் பட்டபோது, சிறையின் முதல் அறையில், பேரரசர் ஷாஜஹான் தலைகுனிந்த வண்ணம் அமர்ந்திருந்தார். சோகமிக்க அவரது முகத்தை அப்துல்லா கண்டான். திடுக்கிட்டான் அவரது நிலையைக் கண்டு! "ஆ! மன்னர் மன்னா! உமக்குமா இந்தக் கதி?" என ஆச்சரியத்தோடும், ஆவேசத்தோடும் இரைந்தான். அவனை ஏறெடுத்துப் பார்த்துவிட்டு, நீண்ட பெருமூச்சு ஒன்றை வெளிப்படுத்தி விட்டு, மீண்டும் தன் தலையைக் கவிழ்த்துக் கொண்டார் பேரரசர் ஷாஜஹான். அவரது, அந்த நீண்ட பெருமூச்சு, "உன் போன்ற கடமையை மறந்த கயவர்கள் இந்த நாட்டிலே இருக்கும் வரை, இது மட்டுமல்ல, இன்னும் இதைவிட மோசமான அவல நிலை ஏன் ஏற்படாது?" என்று கூறுவது போலிருந்தது.

அப்துல்லா, ஷாஜஹானை மட்டும் பார்க்கவில்லை; பேரரசரின் செல்வக் குமரி, களிப்பூட்டும் கண்மணி ஜஹானாராவையும் கண்டான் அச்சிறைக் கூடத்திற்குள். அது மட்டுமல்ல, பேரரசர் கண்ணில் வழிந்து கொண்டிருந்த நீரை, ஜஹானரா துடைத்துக் கொண்டிருப்பதையும் கண்டான் அந்தக் காமாந்தகாரத் தளபதி.

3

சிறையைப் பார்வையிடுவதற்குச் சிங்காரி ரோஷனரா வந்தாள். பளபளப்பான பட்டாடை பூண்டு, நவரத்தின ஆபரணங்களையணிந்து அலங்கார மோகினியாக விஜயம் செய்தாள் அவ் வனிதாமணி.

முதல் முதலாக, அவள் ஷாஜஹான் மன்னரிருந்த அறைப் பக்கமாகச் சென்றாள். நயவஞ்சக நாகத்தைக் கண்ட நாரிமணி ஜஹானரா, தன் நிலா முகத்தை

வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டாள். அவள் தன்னைப் பார்க்க விரும்பவில்லை, என்பதையறிந்த அந்த வஞ்சக ஓநாய், ஜஹானாராவைப் பார்த்து, "எப்படி இருக்கிறது அக்காள், சிறை வாழ்வு?" எனக் கேலியாகக் கேட்டாள். ஜஹானாரா ஒன்றும் பேசவில்லை; மாறாக, அவள் கண்ணில் நீர் வடிந்தது. கண்ணீரைக் கண்ட காதகி, "உலகம் தெரியாத உதவாக்கரை," என்று கூறி, ஏளனச் சிரிப்பொன்றை வெளிப்படுத்தி விட்டு, அப்புறம் சென்றாள்.

அங்கிருந்து நேரே, அப்துல்லா கான் அடைபட்டுக் கிடந்த அறைக்குச் சென்றாள் அவ் வஞ்சகப் பேய். அவளைக் கண்டதும் சீறியெழுந்தான் தளபதி. "விஷப் பாம்பே! இங்குமா வந்துவிட்டாய்? பளபளப்பான மேனியைக் காட்டி, உன் பல்லில் தேங்கிக் கிடக்கும் நஞ்சை மறைத்து விட்டாயே, நயவஞ்சகி. கண்ணைக் காட்டி என் கடமையை மறக்கச் செய்த காதகியே, இன்னுமா, உன்னைக் கண்டு ஏமாறுவேன், என்று இங்கு வந்தாய்? கடமையை மறந்த கயவன் என்று என்னை உலகம் பழிக்கும்படி செய்துவிட்ட பழிக்கஞ்சாப் பாதகியே, உன் பசப்பு வார்த்தைகளைக் கண்டு இனியும் மோசம் போவேன், என்று என்னைக் காண வந்தாய்?" என்று அடுக்கினான், ஆத்திரங் கொண்ட அப்துல்லா கான்.

சாகசத்தால் பெரிய சாம்ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டோம், என்ற செறுக்கினால், தலை நிமிர்ந்து திரியும் அந்தச் சாகசக் கள்ளி, தளபதி அப்துல்லாவைத் தன் மயக்கும் விழிகளால் பார்த்தாள். அந்த விழிகளில் சிங்காரம் தெரிந்தது; ஒய்யாரம் மிளிர்ந்திருந்தது; அது மட்டுமல்ல, அந்த நேரத்திற்குத் தேவையான பரிதாபமும் அவ்விழிகளிலே பிரதிபலித்தது. கண்ணீரைத் தானாக வரவழைத்துக் கொண்டு கொஞ்சினாள், அந்த வஞ்சகி.

"கண்ணாளா, நான் இல்லாத நேரத்தில், உம்மைக் கைது செய்து விட்டார்களா?" என்று கேட்டாள் நீலிக் கண்ணீர் வடித்துக் கொண்டே.

தன் கண்ணீரைக் கண்டு கருத்தை மாற்றிக் கொள்வான் தளபதி, என்று தப்புக் கணக்குப் போட்ட சிங்காரிக்கு ஏமாற்றம்தான் பரிசாகக் கிட்டியது,

"உருவத்திலே அலங்காரம், சொல்லிலே சிங்காரம் கண்ணிலே காமவித்தை இவைகளைக் கூட்டுச் சரக்காகக் கொண்ட நீ, நெஞ்சிலே நஞ்சும் கருத்திலே கள்ளத்தனமும் கொண்டிருக்கிறாய், என்பதை, இப்போது நான் உணர்ந்திருப்பதைப் போல், அப்போது உணர்ந்திருந்தால், என் கடமையையும் மறந்து உன் காலடியிலே தூங்கியிருக்க மாட்டேன்; பேரரசருக்குத் துரோகம் செய்திருக்க மாட்டேன்; மணிமுடியை மாற்றான் கைக்கு மாறும்படி விட்டிருக்க மாட்டேன்; பேரும் புகழும் பெற்ற பேரரசர் உள்பட நாங்கள் இப்படிச் சிறைபட்டிருக்க மாட்டோம். கண்ணாடிக் கல்லை மாணிக்கக் கட்டி என எண்ணிக் கருத்தழிந்தேன். நீ காட்டிய காம வித்தைகளைக் கண்டு, அதை உண்மைக் காதல் என்று ஏமாந்து போனேன்!"—சரமாரியாகப் பொழிந்தான் கான்.

"கான்! என்னைத் தவறாக எண்ணிவிட்டீர்கள். எல்லாம் என்னால்தான் விளைந்தது, என்று தப்புக் கணக்குப் போட்டு என்னைத் தாறுமாறாகப் பேசுகிறீர்கள். நீர் கூறுகிறபடி வஞ்சகி அல்ல நான்; ஏமாற்றுக் காரியுமல்ல. முழுமனத்துடன் உங்களை நேசித்தேன். காதலித்தேன். கட்டிலறையிலே நாம் கூடியிருந்த போது திடீரென்று படையெடுத்தார், என் அண்ணா. சம்பிரதாயப்படி, பிடிபட்ட எதிரிகளைச் சிறையிலடைத்திருக்கிறார் ஔரங்கசீப். இதற்கு நானா பொறுப்பாளி? கண்ணாளா, நம் காதல் களங்கமற்றது; புனிதத் தன்மை வாய்ந்தது. என்னை நம்புங்கள்."

"நம்புவதா? உன்னையா? நானா? ....உன் நய வஞ்சகச் செயலைக் கண்டு நம்பிய காலம் மலையேறி விட்டது. இப்போது, நான் புனித மனிதன். உனது மயக்கும் விழிகளும் மோகனப் புன்னகையும் என் மனதை மாற்றவே முடியாது; நீ போய் வா!" என்று ஏளனமாகக் கூறினான் படைத்தலைவன் அப்துல்லா.

அதைக் கேட்டு ஆத்திரமும் ஆவேசமும் கொண்டாள் அழகி. "கண்ணாடி மாளிகையில் குடியிருந்து கொண்டு, என் மீது கல்லை வீச முயற்சிக்கிறீர்கள், நீங்கள். இதனால், நஷ்டம் எனக்கல்ல, உமக்குத் தான். ஆகவே, எதையும் சிந்தித்துச் செயலாற்றுங்கள்," என்றாள் ஏமாற்றுக்காரி ரோஷனாரா.

"சிந்திக்க வேண்டியவள் நீ, நான் அல்லடி பெண்ணே. இதனால், என் உயிருக்கே நஷ்டம் ஏற்படினும் என் கருத்தைக் களவு கொடுக்க மாட்டேன்."

"அன்பரே, ஆத்திரத்தில் அறிவைக் கூடவா அடகு வைத்துப் பேசுவது? நாம் மண்ணிலே பிறந்தது எதற்கு? மாள்வதற்கா? வாழத்தானே பிறந்தோம் நாம்? நீங்கள் மட்டும் விரும்பினால், இப்போதே விடுதலை பெறலாம். உங்களை மன்னித்து விடும்படி என் அண்ணனிடம் மன்றாடுகிறேன்."

"மன்னிப்பு! எனக்கு மன்னிப்பு!! அதிலும் ஒரு பெண்ணின் மூலமாக—ஒரு நயவஞ்சக நச்சுப் பாம்பின் மூலம் எனக்கு மன்னிப்பு!!! கடமையை மறந்த கயவன் என்ற பழிச்சொல் போதாதென்று, இப்போது, சதிகாரி யொருத்தியின் துணைகொண்டு தன் உயிர் தப்பினான், கோழை, என்ற இழி சொல் வேறு என் குற்றப் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்கிறாயா? வீர மரபிலே உதித்த இந்த வீரன் வீர மரணத்தைத்தான் எதிர்பார்ப்பானேயன்றி, மன்னிப்பை ஒரு போதும் வேண்ட மாட்டான்."—கோபக் கனல் பறக்கக் கூறினான் தளபதி.

"அப்படியானால், தூக்குக் கயிற்றை முத்தமிடத் துணிந்து விட்டீர்கள் என்று சொல்லுங்கள்? ஏன் அப்படித்தானே?" என்றாள் கொலைகாரி ரோஷனாரா—கேலியும் கிண்டலும் கலந்த மொழியில்.

"வீரன் கோழையாக வாழ ஒரு நாளும் விரும்ப மாட்டான்; வீரனாக இறக்கவே ஆசைப்படுவான்."—அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை அப்துல்லா.

அலட்சியப் பார்வையை அவன் மீது வீசிவிட்டு அப்புறம் நகர்ந்தாள் அந்த அகங்காரி.

* * *

4

மூன்று நாட்கள் கழிந்தன.

நான்காம் நாள் அது! சிறையிலிருந்த அப்துல்லாத் கான், விசாரணைக்காக நீதிமன்றம் கொண்டு செல்லப் பட்டான்.

நீதிமன்றத்திலே கூட்டம் சொல்லி முடியாது; அன்று அவ்வளவு கூட்டம் அங்கே!

அக்கிரமமாகக் கைப்பற்றிய அந்த அரியாசனத்தில் கம்பீரமாக வீற்றிருந்தான் ஔரங்கசீப். அவன் பக்கத்திலே அலங்காரப் பீடத்திலே அழகின் சிகரமாக அமர்ந்திருந்தாள், சூழ்ச்சியின் பிம்பம் ரோஷனாரா.

மன்றத்தை யலங்கரித்திருந்த 'மகான்களில்' பலர் அப்துல்லாவுக்குத் தெரிந்த பழைய முகங்களே, அந்தோ! அவர்களெல்லாம் இப்போது, 'துரோகி'களாக மாறிவிட்டதைப் பார்க்கும் போது, தளபதியின் மனம் என்ன பாடு பட்டிருக்கும். குற்றவாளிக் கூண்டிலே கான் நிறுத்தப்பட்ட போது, அந்தத் 'துரோகி'க் கூட்டத்தை ஒரு முறை பார்த்தான். "அட துரோகிகளே! அன்னமிட்ட வீட்டிலா கன்னம்

வைப்பது?" என்று அப்துல்லா கேட்கவில்லை—எப்படிக் கேட்க முடியும்? ஆனால், அவன் பார்வை கூறிற்று இது போல!

குற்றப் பத்திரிகை வாசிக்கப் பட்டது.

'பேரரசர் ஔரங்கசீப்புக் கெதிராக, இளவரசர் தாராஷிகோவுடன் சேர்ந்து கொண்டு, சதிகள் பல புரிந்தது. இரண்டாவது, அரண்மனை அந்தப்புரத்தில், அனுமதியின்றி நுழைந்தது. மூன்றாவது, சிறைச்சாலைக்கு விஜயம் செய்திருந்த ரோஷனாராவிடம் மதிப்பற்ற முறையில் நடந்து கொண்டது."

ஆக, இந்த முப்பெருங் குற்றங்கள்தான் தளபதி அப்துல்லா கான் மீது சாட்டப்பட் டிருந்தது.

"குற்றவாளி, தான் கூறுவதற்கு ஏதேனும் இருந்தால், அவைகளை எடுத்துச் செல்வதற்கு உரிமையளிக்கப்பட்டிருக்கிறது," என நீதிமன்றம் கூறிற்று. அப்துல்லாவின் வீரம் ஒளிக்கும் கண்கள், ரோஷனாராவைப் பார்த்தன; வாய் பேசாது மௌனமாக நின்றான். அதைக் கண்ட கொலைகாரி, "குற்றவாளியின் மௌனமே, தான் செய்த குற்றங்களை ஒப்புக் கொண்டான், எனக் கூறுகிறது. இனித் தீர்ப்புக் கூறவேண்டியவர்கள் நீதிபதிகள். குற்றவாளி புரிந்துள்ள குற்றங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று. அதுவும் சாதாரணமானதல்ல; சதிக் குற்றம், அவதூறு, அக்ரமப் பிரவேசம். இவைகளில் ஏதேனும் ஒன்றைச் செய்தாலே, மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும், என 'நீதி, கூறுகிறது. இவனோ, மூன்று பெரும் குற்றங்களைச் செய்திருக்கிறான். குற்றங்களை அலசிப் பார்த்துத் தீர்ப்பு வழங்க வேண்டியது நீதிபதிகளின் பொறுப்பு" என்றாள்.

இவ்வாசகங்களைக் கேட்டதும் அப்துல்லாவின் உறுப்புகள் ஒவ்வொன்றும், உறுப்புகளின் நரம்புகள் ஒவ்வொன்றும் முறுக்கேறின. வீரமிக்க சொற்கள் அவன் வாயிலிருந்து உதிர்ந்தன.

"இன்னின்ன குற்றங்கள் செய்தான், என்று நிரூபிக்கப்பட்டாத வரையில், ஒருவனைக் **குற்றவாளி** என அழைப்பதே குற்றம். அப்படியிருக்க மரணதண்டனை விதிக்க வேண்டும், என்று நீதியின் நிகண்டு கூறி விட்டது! அப்படி நான் செய்தது குற்றமே என்று நிரூபிக்கப் பட்டாலும், அக் குற்றங்களைச் செய்யத் தூண்டியவள் — செய்வதற்குக் காரணமா யிருந்தவள். அதோ வீற்றிருக்கிறளே, பேரரசர் பக்கத்தில், அக்ர மத்தின் அணிகலனை, அந்தச் சாகசக் கள்ளி, அவளேதான். ஆகவே, குற்றவாளிக்கு உடந்தையாக இருந்து குற்றம் புரிந்தவளையும் நீதிமன்றம் தண்டிக்கத் தான் வேண்டும். அதுதான் நீதி; நியாயமுங்கூட," என ஆவேசத்தோடு கூறி முடித்தான், அஞ்சா நெஞ் சம் படைத்த அப்துல்லா கான்.

சிங்காரியின் முகம் சிவப்பேறி விட்டது இதைக் கேட்டதும். அவள் பக்கத்தி லமர்ந்திருந்த பேரரசர் ஔரங்கசீப் மனம் பதறினன். பாவம்! அவனுக்குத் தெரியுமோ தெரியாதோ, கட்டிலறையில் அந்தக் காம சுந்தரி அப்துல்லாவோடு நடத்திய காதல் நாடகம் எத்தகைய தென்பது!

தங்கையை இழிவுபடுத்திப் பேசியதைக் கேட்டதும் ஔரங்கசீப் பதறியதோடு மட்டுமல்ல, ஆத்திரமும் அடைந்தார். ஆவேசத்தோடு நீதிபதிகளைப் பார்த்தார். "பேரரசரின் தங்கையை இழிவு படுத்திப் பேசியிருக் கிருன், அதுவும் நீதிமன்றத்திலே; இதைப் பார்த்துக் கொண்டு இன்னும் சும்மா இருக்கிறீர்களே. இந்த அயோக்கியனுக்கு அளிக்க வேண்டியது மரண தண் டனைதான். அதைச் சீக்கிரமே நிறைவேற்றுங்கள். ஏன் தாமதிக்கிறீர்கள்?" என்று சீறினர் ஔரங்கசீப்.

நடுக்க முற்ருர்கள் நீதிபதிகள். அடுத்த விநாடியே, தீர்ப்பு வழங்கப் பட்டு விட்டது. 'குற்றவாளி அப்துல்லா தூக்கிலிடப் பட வேண்டும்' எனத் தீர்ப்புக் கூறி விட் டது நீதி மன்றம்!

தீர்ப்புக் கேட்டுத் துடியாய்த்துடித்தான் அப்துல்லா கான். "அடி கொலைகாரி, உன்னைக் கொன்று உன் ரத்தத்தைக் குடித்தால் தான் என் உயிர் சாந்த மடையும்," என்று கத்தினன். பாவம்! அவனது கூச்சல் வெட்ட வெளியில் வெடித்த வெடி குண்டாகி விட்டது!

அடுத்த பனிரெண்டு மணி நேரத்தில் தளபதி அப்துல்லா தூக்கு மரத்திலே ஊசலாடினன்.

ஔரங்கசீப் பட்ட மேற்றதும், அவன் பிணமாக்கிய பலரில் அப்துல்லாவும் ஒருவன்; அவனே முதல் பலியானன் ஔரங்கசீப் மன்னரின் அக்ரமச் செயலுக்கு.

அப்துல்லா ஒழிந்துங் கூட, கொலைகாரிரோஷனரா வின் ரத்த வெறி பிடித்த உள்ளம் ஓய்ந்துவிட வில்லை. அடுத்ததாக அவள் கவன மெல்லாம் தாராஷிகோவின் மேல் பாய்ந்தது. ஏனெனில் அவன்தானே பட்டத்திற் குரியவன்; அவனை ஒழித்து விட்டால்தானே, ஆட்சி பீடம் ஆட்டங் கொடுக்காமல் நிலை பெற்றிருக்க முடியும், என்பது வஞ்சகப் பேயின் அபிப்பிராயம். இந்த, அவளுடைய அபிப்பிராயத்தை, ஔரங்கசீப் மன்னரிடம் கூறினள் அந்தச் சாகசக்காரி. ஔரங்கசீப்பும் அதற்கிணங்கி, அவள் வசம் இருநூறு ஒற்றர்களை ஒப்படைத்தான்.

ஷாஜஹான், தன் அரசியல் தந்திரங்களினலும், நிர்வாகத் திறமையினலும் சேர்த்து வைத்திருந்த 'கஜான'வைக் காலியாக்கினள் கொலையுள்ளம் படைத்த ரோஷனரா. பொன்னும் பொருளுமாக எடுத்து வாரி வாரி யிறைந்தாள், தன் அண்ணன் தாராவை, உயிருடனே, அல்லது பிணமாகவோ கொண்டு வந்து சேர்க்க! உடன் பிறந்த அண்ணனின் குருதியைக் குடித்து, அதன் மூலம் திருப்தியடைய வேண்டும் என்று விரும்பிற்று அவளது பேயுள்ளம்!

இளவரசர் தாராஷிகோவைத் தேடிப் புறப்பட்டனர் ரோஷனரா நியமித்த ஒற்றர்கள்.

5

ஔரங்கசீப் டில்லியைக் கைப் பற்றியதும், பஞ்சாபிற்கு ஓடிய தாரா, பஞ்சாபில் ஒற்றர்கள் நடமாடுவதைக் கேள்வியுற்று, சிந்துவிற்கு ஓடினார். அங்கும் ஒற்றர்கள் விரைந்தனர். அதைக் கண்டு, அங்கிருந்து குஜராத்திற்குப் பயணமானார். பாவம்! நாடாளும் உரிமை படைத்தவன், நாடோடியாக, ஊர் ஊராக அலைய வேண்டிய அவல நிலை ஏற்பட்டு விட்டது. அவர் மாத்திரமா, அவருடன், அவர் மனைவியும், இரு குழந்தைகளு மல்லவா அல்லல் பட்டனர்.

குஜராத் மன்னன், தாராவுக்குப் புகலிட மளித்து ஆதரித்தான். தன் படைகளை அவரிடம் ஒப்பித்து, அவைகளைக் கொண்டு, தக்காணத்தில் பலமிக்க அரசை நிறுவி, அதன்பின் இழந்த சாம்ராஜ்யத்தை மீண்டும் அடையும்படி தாராவை வேண்டினான் குஜராத் அரசன்.

அதே சமயத்தில், குஜராத்திற்கும் வந்து விட்டனர் ரோஷனாராவின் ஒற்றர்கள். தன்னுடனிருந்த சிறிய படையுடன் மீண்டும் சிந்துவுக்குச் சென்றார் தாரா. சிந்துவில் ஏற்பட்ட போரில், தாராவின் படை தோல்வியுற்றது. பலமிக்க சாம்ராஜ்யப் படைகளோடு, வலிமை யற்ற ஒரு சிறு படை தோல்யுறாமல், பின் வெற்றி பெறவா செய்யும்! தோல்வி கிடைத்தபின், 'தலை தப்பியதே தம்பிரான் புண்ணியம்' என்று தலை தெறிக்க ஓடினார் தாராஷிகோ, எல்லைப் புறத்தை நோக்கி.

கைபர் கணவாய்க்கு அருகிலிருந்த சிற்றரசன் ஒருவனிடம் அடைக்கலம் புகுந்தார் தாரா.

பசி! பட்டினி! வறுமை! இதற்கிடையில் எதிரிகளின் பயமுறுத்தல்! இவைகளைப் பரிசாகப் பெற்றுப் பாலைவன வாழ்க்கையை மேற்கொண்ட தாராவின்

மனைவி, பனியும் குளிரும் தாங்க முடியாமல் ஒரு நாள் மாண்டே விட்டாள். இறந்து கிடக்கும் மனைவியினருகில் அமர்ந்த வண்ணம் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த தாராவை நோக்கி ஒரு வீரன் ஓடிச் சென்று, "ஒற்றர் கள் வருகிறார்கள், வாருங்கள் ஓடி விடுவோம்," என்று பரபரப்புடன் கூறினான். அதைக் கேட்டதும், இறந்த மனைவியைப் புதைக்கக் கூட நேரமில்லாமல், அப் பிணத்தைத் தன் கையிலேந்திய வண்ணம் அங்கிருந்து ஓடலானார்—அவரது ஆட்களோடு.

மூன்று மைகள் தூரம் சென்றதும், அவர்கள் கண் ணெதிரே ஒரு கோட்டை தென்பட்டது. **ஜீவன் கானின்** கோட்டை அது. அக் கோட்டையை நோக்கி விரைந்த னர் தாராவும் அவரது பணியாட்களும்.

ஜீவன் கான், தாராவுக்கு அடைக்கலம் தந்து, ஆத ரிப்பதாகக் கூறி உறுதி மொழிந்தான். அவனது. உறு தியை மனப் பூர்வமாக நம்பிய தாராஷிகோ, அங்கேயே தங்கி விட முடிவுசெய்தார்.

* * *

ஜீவன் கானின் மாளிகையிலே, தாரா, தங்கி யிருக் கும் செய்தியை எப்படியோ கேள்வியுற்ற ரோஷனாரா, ஜீவன் கானுக்குக் கடிதமொன்று வரைந்தாள். கடிதத் தோடு இரண்டு குதிரைகளையும் வீரர்களிடம் கொடுத் தனுப்பினாள். வீரர்கள் விரைந்தனர் ஜீவன் கானை நோக்கி!

ஜீவன் கானின் கோட்டைக் கெதிரே சென்று நின்றனர் வீரர்கள். அவர்கள், ஒளரங்கசீப் மன்னரின் ஆட்கள், என்றறிந்த ஜீவன் கான், அவ்வீரர்களை அன் புடன் வரவேற்று, தன் கோட்டைக்குள் அழைத்துச் சென்றான்.

இரண்டு குதிரைகள் நிறையக் கொண்டு வந்த பொன்னையும் பொருளையும் ஜீவன்கான் முன் கொட்டி னார்கள் ரோஷனாராவின் வீரர்கள். அதையடுத்து, ரோஷனாராவின் கடிதத்தை ஜீவன்கானிடம் நீட்டினர்.

கடிதத்தை ஆவலோடுபிரித்தான் ஜீவன் கான்; அதிலே காணப்பட்ட கருத்தின் சாரம் இது:

"அன்புள்ள ஜீவன்கான்!

பொன்னும் பொருளும் இரண்டு குதிரைகள் நிறைய உமக்கு அனுப்பி யிருக்கிறேன்—அன்புக் காணிக்கையாக. இவைகளைப் பெற்றுக் கொண்டு, உம்மிடம் அடைக்கலம் புகுந்துள்ள தாராஷிகோவை, கடிதம் கொண்டு வரும் நம் வீரர்கள் வசம் ஒப்புவிக்கவும். பேரரசர் ஔரங்க சீப்புக்கு நீர் செய்யும் இவ்வுதவிக்குக் கைம்மாருக, ஔரங்கசீப், தம் தங்கை ரோஷனராவாகிய என்னைப் பரிசாக உமக்களிக்க உத்தேசித்திருக்கிறார், என்பதை மகிழ்ச்சியோடு, பூரிப்போடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். விரைவில், ஆவன செய்யவும்,

உங்கள்,

ரோஷனரா."

பொன்னும் மணியும் போதாதென்று, பொற்சிலை போன்ற பைங்கிளியாள் தனக்குக் கிடைக்கிற தென்றால், எதைத் தான் செய்யத் துணிய மாட்டான் ஜீவன் கான்? ஜீவன் கான் என்ன, பொன்னையும் பெண்ணையும் பெரிதெனக் கருதும் துரோகச் சிந்தனை படைத்த எவர்தான் காட்டிக் கொடுக்கும் செயலைச் செய்ய மாட்டார்?

பேராசை படைத்த ஜீவன் கான், பணத்திற்கும் பாவைக்கும் அடிமையானன். அவனுள்ளம் வளைந்து கூத்தாடிற்று; துரோகியாக மாறினன். அதன் விளைவு தாரா கைது செய்யப் பட்டார்.

*   *   *

6

டில்லிக்குக் கொண்டு வரப்பட்ட தாராஷிகோ, நீதி மன்றத்திலே, குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப் பட்டார்.

பேரரசர் ஔரங்கசீப் கம்பீரமாக அமர்ந்திருந்தார் அரியணையில். தக தக வெனப் பிரகாசிக்கும் பொன் றுடை அவருடலை அலங்கரித்திருக்க, நட்சத்திரங்களைப் போல மின்னும் நவரத்தினக் கிரீடம் அவர் தலையை அழகு செய்ய, ஆக இத்தகைய ஆடம்பர நிலையிலே ஆட்சி பீடத்திலே அமர்ந்திருந்தார் ஔரங்கசீப் மன்னர். அவர் எதிரிலே, பரட்டைத் தலையும், அழுக்கேறிய கிழிந்த சட்டையும், முகத்திலே சோக ரேகை படரவு மான கேடான நிலையில் நின்றிருந்தார் தாராஷிகோ. குழி விழுந்த அவரது கண்கள், ஔரங்கசீப்பை நோக் கின. அந்தச் சோகக் கண்களின் பார்வையிலே தொக்கியிருந்தன ஆயிரம் அர்த்தங்கள்! "ஊராளும் வெறி பிடித்து, உடன் பிறந்தவனை வாட்டி வதைக்கும் உத்தம சீலனே, நீயும் ஒரு மனிதனா? உனக்குக் கருணை உண்டா? அன்பின் பொருளை நீ அறிந்திருந்தால், அண் ணனை இப்படிக் கொடுமைப் படுத்த உன் உள்ளம் இட மளிக்குமா?" என்று கேட்பதைப் போலிருந்தது, அப் போது அவர் பார்த்த பார்வை.

> 'முஸ்லீம் மதத்தின் கோட்பாட்டுக்கு
> விரோதமாக, இந்துக்களோடு கூடிக்
> கொண்டு பேரரசர் ஔரங்கசீப்புக்
> கெதிராகச் சதி செய்தார்!'

இதுதான் தாராவின் மீது சாட்டப் பட்டிருந்த குற் றச் சாட்டு!

குற்றப் பத்திரிகை வாசிக்கப் பட்டதும், பிரபுக்கள் மூலம் 'தீர்ப்பு' கூறப்பட வேண்டும், என்று ஔரங்கசீப்

அறிவித்தார். பிரபுக்கள் ஒவ்வொருவராக எழுந்து நின்று, தங்களது அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர். அனைவரும் ஒரு முகமாக 'குற்றவாளி!' என்றே 'தீர்ப்பு' வழங்கினர். சேற்றிலே தாமரை போன்று, பிரபுமார் சேற்றிலேயும், ஒரு 'தாமரை' இருக்கத்தான் செய்தது! அத்தனை பேரிலே, ஒரே ஒரு பிரபு மட்டும், "தாரா ஷிகோ நிரபராதி; அவர் நம் அரசராக வேண்டும்," எனக் கூறினன். ஆனல் அந்த உத்தமனுக்குக் கிடைத்த பரிசு என்ன தெரியுமா? கொலைகாரி ரோஷனாராவின் புலிப்பார்வை அப் பிரபுவின் மீது பாய்ந்தது. அதன் விளைவு என்ன ஆயிற்றோ, யாருக்குத் தெரியும்!

பிரபுக்கள் தங்கள் அபிப்பிராயத்தைக் கூறியான தும் அடுத்ததாக ரோஷனாராவின் முறை வந்தது. ஆணவத்தோடு எழுந்து நின்றாள் அந்த அகங்காரி. "அன்புள்ள அண்ணன், முகலாய சாம்ராஜ்யத்தின் முடிசூடா மன்னர் ஷா-இன்-ஷா தாராஷிகோ அவர் கள், இரு துண்டுகளாக வெட்டப்பட வேண்டும். அவர் உடலினின்றும் கிளம்பும் பச்சை ரத்தம், முகலாய சாம் ராஜ்யத்தின் மண்ணை முத்தமிட வேண்டும். அதைக் கண்டு என் உள்ளம் குளிர வேண்டும், உடல் பூரிக்க வேண்டும்," எனக் கூறினள் ரத்த வெறி பிடித்த சண் டாளி. இவ்வுரையைக் கேட்ட தாராவின் மனம் என்ன பாடு பட்டிருக்கும். கூறியவள் தங்கை; கூறப் பட்டவன் அண்ணன்! அவன் நிலையிலிருந்து கொண்டு, கற்பனை செய்து பார்க்கும் எவரும் கண் கலங்கத்தானே செய்வர்.

முடிவில் தாரா மரண தண்டனை விதிக்கப் பட் டார். மறுநாள் தாராஷிகோ கொலை செய்யப் பட்டார். ரோஷனாராவின் ரத்த உள்ளம் குளிர்ந்தது!

காட்டிக் கொடுத்த ஜீவன் மட்டுமென்ன வாழவா செய்தான்? காட்டிக் கொடுத்த கயவனை, நாட்டு மக்கள் சும்மாவா விட்டு விடுவார்கள்? கல்லாலடித்துக் கொன்ற னர் அந்தத் துரோகியை.

7

ஔரங்கசீப் பட்டத்திற்கு வந்ததும், ரோஷனரா வின் தூண்டுதலால், பல பிணங்கள் சாய்க்கப் பட்டன. பல வீரர்கள் தூக்குக் கயிற்றை முத்தமிட்டனர். அரச குடும்பத்தைச் சார்ந்த பலர் கொலை செய்யப் பட்டனர். எல்லாம் கொலைகாரி ரோஷனரா பேகத்தின் கைங்கரி யத்தா லானவைதான்!

பெயரளவிலேதான் ஔரங்கசீப் மன்னரே என் றாலும் ரோஷனராவின் கையே ஓங்கி நின்றது.

அரசியல் விஷயம் இவ்வாறிருக்க, அவளது சொந்த வாழ்க்கையை நோக்கும் எவரும், எள்ளி நகை யாடாமலிருக்க மாட்டார். ஓவியக் காரனகை இருந்தால், வித விதமான சித்திரங்களைத் தீட்டிக் காட்டுவான், அந்தச் சிங்காரியின் காம லீலைகளை! அந்த அளவுக்கு லீலா விநோதங்களை நடத்தினள் ரோஷனரா!!

வண்டுகளைத் தேடி அழகு ரோஜா செல்வதில்லை— செல்ல முடியாது! வண்டுகள் பல, தன்னை வட்டமிடச் செய்கிறது, தனது ஒப்பற்ற அழகினல்! அதே போலத் தான், ஆணழகரைத் தேடி இந்த ராணி செல்வதில்லை- செல்ல முடியாது—கவுரவம் குறைபட்டு விடும் என்ற காரணத்தால்! ஆனல், அழகு படைத்த ஆண்கள், வசீகரமிக்க வாலிபர் பலர் தன்னை நாடி வரச் செய் தாள் இந்த வனிதாமணி!!

சீமான்களின் சதுரங்கக் காயாக மாறினள். கோமான் களுக்கோ, கொஞ்சும் குயிலானள். ஆடினள், பாடினள், அகமகிழ்ந்தாள்! தன் படுக்கை யறையை அலங்கரிக்க நித்தம் நித்தம், ஒரு சுந்தரன் தேவைப் பட்டான், அந்தச் சுந்தரிக்கு! தன் பார்வை பட்ட எவரையும் அவள் விடவில்லை. இன்பத்தின் எல்லையைக் கூட அல்ல, இன்பத்தின் சிகரத்தை அடைந்தாள் அந்த இன்பவல்லி!

இவ்வளவு ஆடலுக்கும் பாடலுக்கும், ஏனென்று கூடக் கேட்கவில்லை பேரரசர் ஔரங்கசீப். கண்டும் காணுதவரைப்போல வாளாவிருந்துவிட்டார். முகலாய சாம்ராஜ்யத்தின் முடி மன்னராய் இன்று அவர் விளங்குவதற்குக் காரணமாயிருந்த அருமைத் தங்கை யல்லவா. அவளை அடக்குவதற்கு அவரால் முடியுமா? முடிந்தாலும் அந்த மோகனுங்கிதான் அடங்குவாளா என்ன!

இவ்வாருக, முப்பதாண்டுகளைக் கழித்தாள் அந்தக் காமசுந்தரி.

ஆணவத்தின் பீடம் ஆட்டங்கொடுக்கும் காலம் நெருங்கிவிட்டது. அப்போது அவளுக்கு வயது ஐமபது. ஒரு நாள் திடீரென்று தக்காணத்திற்குப் புறப்பட்டார் ஔரங்கசீப். கவர்ச்சி யற்று, சோபை இழந்து காணப்பட்ட தன் அருமைத் தங்கை ரோஷஞராவைத் தனியே விட்டுவிட்டுத்தான் தக்காணம் சென்ருர் பேரரசர் ஔரங்கசீப்.

ஔரங்கசீப் நாட்டில் இல்லாத நேரம் அது. டில்லிமாநகரிலே சில பிரபுக்கள் கூடினர்—பேசினர்—சதி பிறக்கலாயிற்று!

ஒரு நாளிரவு!

அந்தப்புரத்திலே, தன அறையின் வெள்ப்பகத்திலே படுத்திருந்தாள் ரோஷஞரா. மெல்லிய பூங்காற்றின் அசைவிலே எழுந்த குளிர்ச்சி அவளை உறக்கத்தி லாழ்த்தியது.


நல்ல உறக்கம். முகமூடி அணிந்த நான்கு வீரர்கள் அந்தப்புரத்தில் நுழைந்தனர் — ஈட்டியும் கத்தியுமாக. அவ்வீரர்களில் ஒருவன், ரோஷஞராவின் வாயிலே துணியை அடைத்தான். மற்ருெருவன் அவளைப் பிறந்த ரூபமாக்கி, கட்டிலோடு கட்டிலாகக் கட்டினுன். அதன் பின்னர் தங்கள் கையிலே பிடித்திருந்த கூரிய ஈட்டிகளால், அந்தக்

கொலேகாரியின் உடலைத் துளைத்தனர். சில நிமிஷங்களில் அதிகாரத்தின் பீடம், அக்ரமத்தின் பிம்பமான ரோஷனராவின் உடல் ஆயிரம் கண்களாகக் காட்சி யளித்தது. முடிவில் மாண்டே போனுள் அந்த மோசக்காரி!

"ஒழிந்தாள் கொலேகாரி" என்ருன் நால்வரில் ஒருவன். பழக்குப் பழி வாங்கச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த பலரில் ஒருவன்தான் அவன்; அது மட்டுமல்ல, ஜீவன் கானுடைய தம்பியுமாவான் அவன்.

"அழிந்தது அக்ரமம்! இடிந்தது ஆணவக் கோட்டை!"—இப்படிக் கூறிப் பூரித்தனர் டில்லி மக்கள்.

அதே நேரத்தில், தக்காணத்திலிருந்த பேரரசர் ஔரங்கசீப், ரோஷனரா மாண்ட செய்தி கேட்டு, ஒரு சொட்டுக் கண்ணீர் வடித்தார். தங்கை செய்த தியாகத்திற்காக, அவருடைய கண்ணீரைக் காணிக்கையாக்கினுர் போலும் பேரரசர்!



இனிய எழுத்தோவியங்கள்

★

விருதை - ந. இராமசாமி எழுதியவை—

புத்துணர்ச்சி	...	2	0	0
இன்ப நிலா	...	1	0	0
தளபதி	...	1	0	0
தாமஸ் மசாரிக்	...	1	0	0
புது வாழ்வு	...	1	0	0
என்மகள்	...	0	8	0

கோவி. மணிசேகரன் எழுதியவை—

ஹாம்லெட்	...	2	0	0
ஜூலியஸ் ஸீஸர்	...	1	0	0
புரட்சிப் புலவன் அம்பிகாபதி	...	1	0	0

சுப்பு - ஆறுமுகம் எழுதியவை—

நல்ல பெண்மணி	...	2	4	0
வீரபாண்டியன் கட்டபொம்மன்		1	0	0
வடநாட்டு ராணிகள் (சேரன்)	...	1	0	0

ஸ்ரீமகள் கம்பெனி

சென்னை-1